10.01.2013

உதய சூரியன்

Source for reading hunters

கனம் - 01. சூரியன் -20 பக்கம் :32 விலை: 15/=

சாப்பிட மறுத்த குழந்தைக்கு மலத்தை உண்ணக்கொடுத்த தந்தை...!

சரித்திரம் திரும்புகிறதா?

அன்று ஸ்ரீமா! இன்று ஷிரானி!

காக்கிச் சட்டைக் காதல் !

மரணத்தில் முடிந்த சோகம்

flc ASIA (PRIVATE) LTD

ஆரோக்கியமான உலகத்தை நோக்கியதொரு வெற்றிப் பயணம்

வொண்டமீல்.....

சிறியோர்கள் மற்றும் பெரியோர்களின் உயர்தரமான புரதப் போசணையூட்டத்திற்கு உகந்தது.

ஆரோக்கியமான எடைக்குறைவிற்கு உதவும்.

நீரிழிவு நோயாளர்களின் குருதி குளுக்கோஸ் மட்டத்தைக் குறைக்க உதவும்.

"Sayuru Sevana", South Wing, 4th Floor, Nawam Mw, Colombo-02
Hotline : 0773589796

உங்களுடைய குழந்தைச் செல்வக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்!

- அனுபவம் வாய்ந்த சிகிச்சைக் குழுவினர்
- உங்களுக்கென்றே அர்ப்பணிப்பான சேவை
- முற்றிலும் வெற்றிகரமான சிகிச்சை

பிரார்தனா
PRARTHANA
IVF மத்திய நிலையம்

10 ஆவது மாடி, கோல்டன் கீ வைத்தியசாலை, கொட்டா வீதி, ராஜகிரிய. தொ.பே : 011-5545447, 0112888858

காக்கிச் சட்டைக் காதல் !

மரணத்தில் முடிந்த சோகம்

கூடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை! காலை 7.20 மணி! எப்போதும் போல பரபரப்பாக இயங்கிக் கொண்டி ருந்த கொழும்பு கோட்டைப் பகுதி அங்கு நடைபெற்ற திடீர் அசம்பாவிதத்தால் இன்னும் பரபரப்பானது.

புறக்கோட்டை மேம்பாலத்தில் வைத்து 26 வயதுடைய நதீஷா மதுசானி என்ற பெண் கத்தியால் குத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இப் பெண்ணைக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் நிலாந்த புஷ்பகுமார என்ற நபர் அந்த இடத்திலேயே நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிந்த பொலிஸார் உடனடியாக 30 வயதுடைய நிலாந்த புஸ்பகுமார என்ற குறித்த ந பரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். குறித்த பெண்ணின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரத்தக்கறை படிந்த கத்தி, கறுப்புநிற பை மற்றும் சிறிய விசப் போத்தல் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு கோட்டைப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கொல்லப்பட்ட நதீஷா மதுசானி பெண் கான்ஸ்ட பிள் ஆவார். ஏன் இக் கொலை நிகழ்ந்தது? தற்கொலை செய்து கொண்ட நபர் யார்? இவர்களுக்குள் என்ன தொ டர்பு என்ற கேள்விகளை மையமாக வைத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

கொலை இடம்பெற்ற இடத்தில் யாசகம் செய்து வந்த ரேணுகா என்ற பெண்மணி இக்கொலையை தான் நேரில் கண்டதாக பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கி யுள்ளார்.

திங்கட்கிழமை காலை ஆறு மணியிருக்கும். கோட்டை மேம்பாலத்துக்கு நபர் ஒருவர் வந்தார். கறுப்பு நிற காற்சட்டையும் நீல நிறகோடுகளையுடைய சேட்டும் அணிந்திருந்தார். இங்கு வந்த நபர் சில நிமிடத்தில் யாருக்கோ தொலைபேசி அழைப்பொன்றினை ஏற்படுத்திக் கதைத்தார். சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு பெண்ணொருத்தி வந்தார். அந்தப் பெண்ணும் குறித்த நபரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

நேரம் ஆக ஆக இருவரும் சற்று சத்தமாகவும் கோபத்துடனும் பேசிக்கொண்டதை காணமுடிந்தது. பின்னர் அந்த நபர் அப்பெண்ணின் கன்னத்தில் அறைந்தார். அடிபட்ட பெண் சத்தமாக அவரிடம் பேசியதுடன் பையில் என்ன இருக்கிறது என்று கேட்டாள்.

சந்தேக நபர் உடனே அதில் உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்துள்ளேன் எனக் கூறி அப் பையிலிருந்த கத்தியை வெளியே எடுத்து அப்பெண்ணின் தலைமுடியை ஒருகையால் இழுத்துப் பிடித்துக் கொண்டு

காதல் தொடர்பை தொடர விரும்பாத காதலியின் வாழ்க்கைப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த காதலன்!

மறுகையிலிருந்த கத்தியால் அப்பெண்ணின் கழுத்தை சரமாரியாக வெட்டினார். ஐயோ என்னைக் கொலை செய்கிறான் என சத்தமிட்ட அந்தப் பெண் கீழே விழுந்தாள் என யாசகப் பெண்மணி சாட்சியம் அளித்துள்ளார்.

இக்கொலையைக் கண்ட குறித்த யாசகப் பெண்மணியும் சத்தமிட்டுள்ளார். இதைக் கேட்டு யாசகப் பெண்ணின் பக்கம் திரும்பிய சந்தேக நபர் கத்தியை நீட்டி சத்தமிட வேண்டாம் எனக் கூறியதுடன் தனது பையிலிருந்த போத்தல் ஒன்றினை வெளியில் எடுத்து அதற்குள்ளிருந்த விசத்தினை குடித்துள்ளார். இவ்வாறு விசம் குடித்த அந்தநபர் கீழே விழுந்ததும், யாசகப் பெண்மணி மேம்பாலத்திலிருந்து கீழே ஓடிவந்து சத்தமிட்டுள்ளார்.

இந்தச் சத்தத்தைக் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சந் தேக நபரான நிலாந்த புஸ்பகுமாரவை உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். மரணவிசாரணைகளின் பின்னர் நதீ ஷாவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டபோது இவர்கள் குறித்து இன் னும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேக நபரான நிலாந்த புஸ்பகுமார என்பவர் வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்தவர். மொனராகலை பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணிபுரிந்து வந்துள்ளார். கொல்லப்பட்ட நதீஷா மதுசானி பொலிஸ் தலைமையகத்தில் விளையாட்டுப் பிரிவில் பணியாற்றியதுடன் பெண்கள் கிரிக்கெட் அணியின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்துள்ள னர். இவர்களின் காதலுக்கு இருவீட்டாரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்தோடு நிலாந்த புஸ்பகுமார அவரது பயிற்சிக்காலத்தை நிறைவு செய்திருக்கவில்லை. அவர் பயிற்சியின் பின்னரே அப்பெண்ணை திருமணம் முடிக்க முடியும். அல்லது அதற்கான உயரதிகாரிகளின் விசேட அனுமதியினைப் பெற்றாக வேண்டும்.

நதீஷா மதுசானி 2008 ஆம் ஆண்டு பொலிஸ் கான்ஸ்டபிளாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டவர். அவருடைய தந்தை மரணமடைந்ததைய டுத்து குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் அவர் ஏற்று நடத்தியுள்ளார். அம்மாவின் துயரத்தை நீக்கி தங்கை மற்றும் தம்பியினுடைய கல்வி வளர்ச்சிக்கும் பெரும் உதவிபுரிந்துள்ளார்.

இவ்வாறு குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்த நதீஷா மீது குடும்பத்தார் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். அத்தோடு அவர்மீது அளவற்ற அன்பும் வைத்திருந்தனர். இவ்வாறான நிலை யில் நதீஷாவின் காதல் விவகாரம் வீட்டாருக்கு தெரிய வந்துள்ளது. நதீஷாவின் தாய் புஷ்பகுமாரவின் குடும்பம் நமக்கு ஒத்துவராது எதற்கும் நன்றாக சிந்தித்து முடிவெடு க்க வேண்டும் என நதிஷாவிடம் கூறியுள்ளார்.

மிகுந்த கஷ்டத்துக்கு மத்தியில் தன்னைப் படிக்க வைத்து நல்ல நிலைக்கு கொண்டு வந்த தாயின் வார்த்தைகளை மதிக்காமல் செயற்பட நதீஷா விரும்பவில்லை. காதலருடனான தொடர்பினைப் படிப்படியாக குறைக்க ஆரம்பித்துள்ளாள். அதன்பின்னரே தன்னை கொழும்பில் சந்தித்து பேச விரும்புவதாக கூறிய புஸ்பகுமார மொனராகலை பொலிஸ் நிலையத்திலிருந்து விடுமுறையில் கொழும்பு வந்துள்ளார். தன் காதல் தொடர்பை தொடர விரும்பாத காதலி நதீஷாவின் வாழ்க் கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை கொழும்பு கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் புஷ்பகுமார உயிர்தப்பினால் இச்சம்பவம் தொடர்பிலான மேலும் பல தகவல்கள் வெளிச்சத்துக்கு வரும்.

-மணி

பெருந்தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மாற்றம் பெறுமா?

பெருந்தோட்டத் துறையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் கட்சி வேறு பாடுகளின்றி பொதுமக்கள் பயன் பெறும் திட்டங்களுக்காக பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்பதே சகலரினதும் அவா.

ஏனைய சமூகங்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது எமது சமூகத்தின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியுள்ளதை எவருமே மறுக்கமாட்டார்கள்.

இந்நிலையில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளில் தனி நபர்களை அல்லது தனி ஒரு அமைப்பினை திருப்திப்படுத்தாத வகையில் இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டால் பொது மக்கள் அதனால் பூரணமான பயன்பாட்டினைப் பெறுவார்கள் என்பதனைவிடவும் இது மறுபக்கத்தில் அங்கு வாழும் மக்களையும் தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைக்கும்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் தலைவருமாகிய வே.இராதாகிருஷ்ணன் தனது தேர்தல் தொகுதியில் உள்ள பெருந்தோட்டப் பிள்ளை பராமரிப்பு நிலையங்களுக்கு சுடுநீர், குளிர் நீர் கொதிகலன்களை கையளித்திருப்பதும் அவ்வாறான நிகழ்வுகளில் அவர் ஆற்றிய உரையும் அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளது.

வெள்ளையர் காலத்தில் இவ்வாறான பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் தோட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

நடப்படும் தேயிலைச் செடிகளை விளையாட்டுச் சிறுவர்கள் சேதப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக அவர்களை பாடசாலை செல்லும் காலம் வரை பிள்ளை மடுவத்தில் விட்டுச் செல்வது, பிள்ளைகளை பராமரிக்க முடியாத காரணத்தைக் காட்டி தாய்மார்கள் வேலைக்குச் செல்லாமல் இருக்கும் நிலையைத் தடுப்பது போன்ற காரணிகள் இவற்றில் பிரதானமாகக் கூறப்பட்டன.

ஆனால் இப்போது நிலைமை மாறியுள்ளது. முன்னர் இருந்ததை விடவும் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் வசதியாக்கப்பட்டுள்ளன. இதற்காக பயிற்றப்பட்ட, கல்விகற்ற சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவருக்கு உதவியாளராக பெண் தொழிலாளி ஒருவர் நியமிக்கப்படுகின்றார்.

நாம் கடந்த 25 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையுடன் ஒப்பிடும் போது இந்த வசதிகள் ஓரளவான வளர்ச்சியாக இருந்தாலும் கூட ஒரு சமூக வளர்ச்சிக்கான அடித்தளத்துடன் ஒப்பிடும் போது இந்த வசதிகளினால் திருப்திப்பட முடியாது.

அத்துடன் இவ்வாறான சுடு நீர் கலன்களை பாராளுமன்ற உறுப்பினர் விநியோகிக்கும்போது தலவாக்கலை பகுதியில் உள்ள சில தோட்டங்களில் உள்ள பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் மின்சாரம் இல்லாத காரணத்தினால் இதனைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது துரதிர்ஷ்டமே...

அத்துடன் தற்போது இங்கு காணப்படும் ஓரளவு வளர்ச்சிகள் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்டப் பகுதி தொழிலாளர்களுக்கும் கிடைக்கின்றதா என்பதுவும் சந்தேகமே.

எனினும் இதனை வழங்கும் வைபவங்களில் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையில் வெளியிட்ட சில கருத்துகள் எம்மை சிந்திக்கத் தூண்டுகின்றன.

பெருந்தோட்டத்துறையில் காணப்படும் இவ்வாறான பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் துணிகளால் கட்டப்பட்ட இறுக்கமான தொட்டில்களில் இடப்படும் குழந்தைகள் ஆரம்ப நாட்களிலேயே நெருக்கடியான சூழலிலேயே வளரும் நிர்பந்தத்திற்கு உட்படுவதால் இது அவ்வாறான குழந்தைகளின் மன வளர்ச்சியையும் பாதிப்பதாகக் குறிப்பிட்டார்.

உதாரணமாக வைத்தியசாலைகளில் பிறக்கும் குழந்தைகள் இடப்படும் பலகையினால் ஆன திறந்தவெளி தொட்டிலில் கிடத்தப்படும் குழந்தைகள் கண்விழித்தும் வெளிச் சத்தைப் பார்க்கின்றனர். கைகால்களை அசைத்து விளையாட முற்படுகின்றனர். தாய் அல்லது செவிலித்தாய் அல்லது உறவினர்கள் அதனுடன் இலகுவாக விளையாடுகிறார்கள். இது அக்குழந்தையின் மன வளர்ச்சியில் நியாயமான பங்களிப்பை ஏற்படுத்துகிறது.

ஆனால் இறுக்கமான துணி தொட்டில்களில் கிடத்தப்படும் குழந்தைகள் அப்படியே போட்டபடிதான் கிடக்க வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறே அக்குழந்தை விழித்தாலும் கூட இருளையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை. உடலை அசைக்கக் கூட முடியாது. கை, கால்களை உதறி விளையாட முடியாத நிலை. இந்த முறையும் மாற்றியமைக்கப்படல் வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

நாற்று மேடையில் ஒழுங்காக வளர்க்கப்படும் நாற்றுகள்தான் செழிப்பான பயிராக வளர்ந்து பயன் தரும். ஏதாவது காரணங்களினால் நாற்று மேடையில் நோயுற்று நலிவுறும் நாற்றுகள் நிச்சயமாக செழிப்பான பயிராகாது. அதுபோலவே இக் குழந்தைகள் தாங்கள் வளரும் அந்த ஆரம்ப நாட்களில் நல்ல மன, உடல் வளர்ச்சியோடு உருவாக்கப்படுவதற்கு இவ்வாறான சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பங்கு மிக மிக முக்கியமானது.

இவ்வாறான நிலையங்களுக்கு உதவி வழங்கும் தேசிய சர்வதேச உதவி ஸ்தாபகர்களுக்கு நாம் இதற்கான யோசனைகளை முன்மொழிய வேண்டும். அப்போதுதான் இவ்வாறு நிதி வழங்கும் ஸ்தாபனங்களும் இது சம்பந்தமாக ஆலோசிக்கும்.

நிதி ஒதுக்கீடுகள் தனி நபர்களை திருப்திப் படுத்துவதற்காகவோ அல்லது தத்தமது ஸ்தாபன வளர்ச்சிக்காகவோ அல்லாது ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியை முதன்மைபடுத்தியதாக இருந்தால் எமது சமூக வளர்ச்சி நிச்சயமாக துரிதமானதும் பிரமிப்பானதுமாக அமையும்.

வி.செல்வராஜ்

தபால் மூலம் இலவச வேதபாடம்

இயேசு கிறிஸ்துவின் போதனைகளை இலகுவான முறையில் வீட்டிலிருந்தவாறே கற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு!

(சிறுவர்களுக்கான இலவச வேதபாடம் மும்மொழிகளிலும் எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.)

மேலதிக விபரங்களுக்கு

Lanka Hope Media
P.O. Box 2258, Colombo.
Tel: 011-4347636
SMS: 072-2456621
Fax: 011-2679624
Email: srilankalhm@sltnet.lk

உங்களது ஜெபத் தேவைகளையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.

பெரிய பாறை மீது யாரும்
மோதிக் கொள்வதில்லை:
சிறிய கற்கள் தான் நம்மை
இடர வைக்கின்றன!!!

சிறுசிறு தவறுகளையும் கணக்கில்
கொண்டு உடனே களையுங்கள்
இல்லையேல் அதனால்
வருந்த வேண்டி வரும்!!!

வெற்றியை
விட தோல்விக்கு பலம் அதிகம்
வென்றி சாத்து மதிற வைக்கும், தோல்வி
சிந்தித்து வாழ வைக்கும்...

பார்க்கும் கோணத்தை மாற்றுங்கள்

மைக்கேல் ஏஞ்சலோ ஓர் அற்புதமான சிற்பி. ஒருநாள் தெருவில் போய்கொண்டிருந்தவர் ஒரு கடையருகே கனத்த பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார். ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சியுடன் அந்தக் கடைக்காரரிடம், ஐயா, இந்தப் பாறாங்கல் தங்களுக்குத் தேவையா அல்லது இதை நான் எடுத்துச் செல்லலாமா? என்று கேட்டார்.

தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள். இது இந்த இடத்தில் பெரிய இடையூறாய்க் கிடக்கிறது. போவோர் வருவோரெல்லாம் இடறி விழுகின்றனர்! என்றார் கடைக்காரர்.

பாறாங்கல்லை உருட்டிச் சென்ற ஏஞ்சலோ, அதை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான இயேசுநாதர் சிலை ஒன்றை உருவாக்கினார்.

அந்தச் சிலை கடைத்தெருவில் விலைக்கு வந்தது. போட்டி போட்டுக் கொண்டு மக்கள் அதை விலைக்குக் கேட்டனர். அப்படிக் கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக்காரரும் ஒருவர்.

முடிவில் அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையைப் பெற்றுக் கொண்டார்.

மைக்கேல் ஏஞ்சலோவை மறந்துவிட்ட அந்தக் கடைக்காரர், இந்த அற்புதமான சிலைக்குரிய கல்லை எந்த மலையிலிருந்து எடுத்து வந்தீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு ஏஞ்சலோ, வேறு எங்கிருந்தும் இல்லை. தங்கள் கடை வாசலில் தான் இதைக் கண்டெடுத்தேன். என்னை நினைவில்லையா தங்களுக்கு? ஆறு மாதங்களுக்கு முன் இடையூறாய்க் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் தாங்கள் கொடுத்த கல்தான் இது என்றார்.

கடைக்காரர் வியந்தார். ஆம். தங்கள் பார்வையில் இது தடைக் கல்லாய்த் தெரிந்தது. என் பார்வையில் இயேசுநாதரைப் பொதிந்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. வேண்டாத பகுதியையெல்லாம் செதுக்கி எடுத்தேன். உள்ளே இருந்த இயேசுநாதர் வெளிப்பட்டுவிட்டார்! என்றார்.

இதைத்தான் பார்க்கும் கோணம் என்கிறோம்.

உயர்வும் தாழ்வும் அங்கு கிடந்த கல்லில் இல்லை. அதைப் பார்த்த மனத்தின் கோணத்தில் தான் இருந்தது. கடைக்காரர் பார்வையில் அது தடைக்கல். சிற்பியின் பார்வையிலோ அது அவரை உயர்த்த வந்த படிக்கல்.

வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் எந்த நிகழ்ச்சியும் பார்க்கும் கோணத்தைப் பொறுத்தே உயர்வாகவோ, தாழ்வாகவோ மாறும். எரிச்சலுடன் ஏனோதானோவென்று சந்தித்த பல நபர்கள் என் வாழ்வில் மகத்தான திருப்பங்களை உருவாக்கிய மாமனிதர்களாக இருந்துள்ளனர்.

விழிப்புணர்வுடன் இருந்து, விருப்பு வெறுப்பின்றி எதையும் சரியான கோணத்தில் பார்க்கும் மனப்பக்குவம் பெறவேண்டும். அதைப் பெற்று விட்டால் வாழ்க்கை நமக்கு வழங்கும் ஒவ்வொரு நிகழ்வும் நம்மை உயர்த்த வரும் வாய்ப்பாய், வரமாய்த் தெரியும். இல்லையேல் எதிர்ப்படும் ஒவ்வொன்றும் எரிச்சலும் துன்பமுமாய்த் தெரியும்.

கல்வி கற்கும் நம் மாணவ மணிகளின் பார்வையையே எடுத்துக் கொள்வோம். வார இதழ்கள் மற்றும் கரைம் நாவல் புத்தகங்களை அவர்கள் பார்க்கும் கோணம் வேறு, தன் பாடப்புத்தகங்களைப் பார்க்கும் கோணம் வேறு.

யாரும் தூண்டாமலேயே வாரப் புத்தகங்களையும், மர்ம நாவல்களையும் ஆவலாய்ப் படிக்கின்றனர். அரசாங்கத்தின் கல்வித்துறை, தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர் என பெரிய கூட்டமே சேர்ந்து இடித்தும் பாடப்புத்தகங்களைப் படிக்க வைக்க முடியவில்லை. இவர்கள் அத்தனை பேரின் தொல்லை பொறுக்க முடியாமல் கடனே என்றுதான் படிக்கின்றனர்.

காரணம் என்ன? கதைப் புத்தகங்களைத் தனக்கு ஏற்ற கோணத்தின் பார்க்கின்றனர். ஆவலாய்ப் படிக்கின்றனர். பாடப்புத்தகங்களையோ தனக்கு என்ற கோணத்தில் பார்ப்பதில்லை. படிப்பதில்லை.

ஆசிரியர்களின் வற்புறுத்தலுக்காகப் படிக்கின்றனர். பெற்றோர்களின் தொல்லை தாங்காமல் படிக்கின்றனர். அரசாங்கம் நடத்தும் தேர்வுகளுக்காகப் படிக்கின்றனர். இப்படி மற்றவர்களுக்காக என்ற கோணத்தில் பார்ப்பதால், படிப்பதால் பாடங்கள் அவ்வளவு எளிதாக மனத்திற்குள் நுழைவதில்லை.

தனக்கு என்று எதைப்பார்த்தாலும் மனம் நமக்குத் துணையாக செயல்படும். மற்றவர்களுக்கு என்று எதைப் பார்த்தாலும் மனம் நமக்கு எதிர்ப்பாய்ச் செயல்படும்.

எனவே, பார்க்கும் கோணத்தை மாற்றுங்கள்; கிடைக்கும் பயன் உடனடியாக மாறும்.



பட்டியல்

இடி அமீன் என்ற ஒரு கொடூரமான சர்வாதிகாரி பற்றி அனைவருக்கும் தெரியும். அவரைக் கண்டால் அந்த நாட்டு மக்கள் மட்டும் அல்ல, உலகமே நடுங்கியது. அவரைப் பற்றிய மிக மோசமான செய்தி என்னவென்றால் அவர் மனித மாமிசம் சாப்பிடுபவர் என்பதுதான். எப்போதும் அவர் தனி விமானத்தில் தான் சுற்றுவார். ஒரு முறை அவர் பயணிகள் விமானத்தில் பயணிக்க நேர்ந்தது. பயணத்தின்போது உணவு வேளை வந்தது. விமானப் பணிப்பெண் பணிவுடன் அவர் அருகில் வந்து, ''சாப்பிட என்ன வேண்டும்?'' என்று கேட்டாள். அவர் கோபமாக, ''முதலில் பட்டியலைக் கொண்டு வா,'' என்று ஆணையிட்டார். அந்தப் பெண்ணும் விரைந்து சென்று உணவுப் பட்டியலை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தாள். அதைப் பார்த்தவுடன் முகமெல்லாம் சிவந்து, அதைக் கிழித்து தூர எறிந்து விட்டு, ''பயணிகளின் பட்டியலைக் கொண்டுவா,'' என்றார். சில பயணிகள் உடனே மயக்கம் அடைந்து விட்டனர்.

இப்படி ஒரு தியாகமா?

18

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும் - சொன்னவர்

பலே DatA BY உதயசூரியன்

*பெயர் :- ஆர்.யோகராஜன்
*பதவி :- பாராளுமன்ற கதிரையை அலங்கரிப்பது (தேசியப்பட்டியல்தானே?)
*தொழில் :- அரசுக்கு எதிராக அறிக்கை விடுவது
*உயிர் நண்பர்கள் :- பதவி கொடுத்த ரணில்
*தற்போதைய எதிரி :- ஹி...ஹி... இ.தொ.கா.தான்
*விரும்பி படிப்பது :- அரச வர்த்தமானி
*பிடித்த விடயம் :- குறை கண்டுபிடிப்பது (யாருடையது என்று தெரியும் தானே?)
*பிடிக்காத விடயம் :- பதவிக்காக கட்சி மாறுவது (ஹி...ஹி... நல்ல உபதேசம்).
*மறக்க நினைப்பது :- மனோ கணேசனுக்கு கிடைக்க வேண்டிய தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை நான் பறித்தேன் என விமர்சிப்பது.
*மலையக மக்களின் தற்போதைய நிலை :- செம்மறி ஆட்டுக்கு திண்டாட்டமாம் குள்ளநரிக்கு(?) கொண்டாட்டமாம்
*தற்போது மிஸ்பண்ணுவது :- இ.தொ.கா.வை விட்டு ஏன் வெளியேறினோம் என்று (இருந்திருந்தால் பிரதியமைச்சு பதவியாவது கிடைத்திருக்குமே?)
*அன்று சரி இன்று பிழை என்பது :- இ.தொ.கா. தோட்டத் தொழிலாளர் சம்பள ஒப்பந்தம், மலையக அபிவிருத்தியில் நடந்து கொள்ளும் முறை... (அரசியல்வாதிக்கு இரட்டை நாக்கு என்று இதைத்தான் சொன்னார்களோ?)
*ஒரே இலக்கு :- எப்படியாவது(?) அமைச்சராகி அவரின் அதிகார போதைக்கு ஆப்பு வைப்பது (யாரின்?)
*அடிக்கடி வரும் கனவு :- முன்னாள் பிரதியமைச்சர்களான சச்சிதானந்தம் (கல்வி) செல்லச்சாமி (தபால்) ஆகியோர்... (ஏன் என்று தெரியும் தானே?)

தொகுப்பு : எம்.தாசன்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மீளாய்வு பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகுமா?

இரண்டு வருடத்திற்கொருமுறை மேற்கொள்ளப்படுகின்ற தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பிலான கூட்டொப்பந்தம் கடந்த முறை 2011 ஜூன் மாதம் 6 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கூட்டொப்பந்தம் இந்த வருடம் (2013 ஆம் ஆண்டு) மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது. 21 பெருந்தோட்டக் கம்பனிகள், இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை என்பனவற்றின் நிருவாகத்துக்கு உட்பட்ட தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு கூட்டொப்பந்தத்திற்கேற்ப வேதனம் வழங்கப்படுகின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள கூட்டொப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளமாக 380 ரூபாவும் நிலையான விலை பங்கு கொடுப்பனவாக 30 ரூபாவும் மாதமொன்றுக்கு வழங்கப்படுகின்ற வேலை நாட்களில் 75 வீதம் அல்லது அதற்கு மேலாக வருகைத்தருகின்ற தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான வருகைக் கொடுப்பனவாக 105 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

அடிப்படைச் சம்பளம் மற்றும் நிபந்தனைக் கொடுப்பனவுகள் உட்பட தோட்டத் தொழிலாளி ஒருவர் 515 ரூபா சம்பளத்தினை பெற்றுக்கொள்ள முடியுமென நடைமுறையிலுள்ள கூட்டொப்பந்தத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தேயிலைத் தொழிலாளர்கள் மேலதிகமாக பறிக்கின்ற ஒவ்வொரு கிலோ தேயிலைக் கொழுந்துக்கும் 17 ரூபாவும் இறப்பர் தொழிலாளர்கள் மேலதிகமாக சேகரிக்கின்ற ஒவ்வொரு கிலோ இறப்பர் பாலுக்கும் 25 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

இந்த நிலையில் இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய கூட்டொப்பந்தம்

மேற்கொள்ளப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் பேரம் பேசுவதன் மூலம் புதிய கூட்டொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இவ்வருடம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டொப்பந்தத்தின் மூலமாக நியாயமான சம்பளத்தினை வலியுறுத்தி கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் பல ஒன்றிணைந்து மலையகத் தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் இனிவரும் இரண்டு மாதக் காலப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு மலையகத்தில் தொழிற்சங்க அரசியல் அமைப்புகளுக்கிடையில் பலத்த போட்டிகள் இடம் பெறக்கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.

வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு மத்தியில் தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான சம்பளத்தினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்ட சம்பளத்திட்டமொன்றினை தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

சோ.ஸ்ரீதரன்

படல்கும்பறையில் சிகரட் விற்பனை முற்றாக நிறுத்தம்

வர்த்தக நிலையத்தினர் ஒன்றிணைந்து சிகரட் விற்பனையை முற்றாக நிறுத்திக் கொண்டுள்ள முன்மாதிரி சம்பவமொன்று பதுளை படல்கும்பறை நகரில் இடம் பெற்றுள்ளது. புத்தாண்டு பிறப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படல்கும்பறை பொது சுகாதார சேவைப் பணிப்பாளர் சந்திக்க ரனகலவின் ஏற்பாட்டின்பேரில் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி நகர வர்த்தகர்களின் கூட்டம் இடம்பெற்றது.

சிகரட் பாவனையால் ஏற்படும் தீமைகள் குறித்து அக்கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டது.

இதனையடுத்து நகர வர்த்தகர்கள் அனைவரும் 1 ஆம் திகதி முதல் சிகரட் விற்பனை செய்வதில்லை என ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் சிகரட் விற்பனையை நிறுத்தியுள்ளோம் என மும்மொழிகளிலும் அறிவிப்புப் பலகைகளை வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் காட்சிப்படுத்தியுள்ளனர்.

படல்கும்பறை நகரில் நாளொன்றுக்கு 3 ஆயிரம் சிகரட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தேவை

எங்கள் கிளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு வயது 16-55 வரையான ஆண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. நண்பர்கள் குழுவாக வேலை செய்யலாம். வரும் முதல் நாளிலே சேர்த்துக்கொள்ளப்படுவர்.
சம்பளம் ரூபா - 25,000/=

தொடர்புகளுக்கு : 071-3460295, அநுராதபுரம்.

தையல் பயிற்சி வகுப்புகள்
(நவநாகரிக முறையில்)

சகல விதமான ஆடைகளும் 06 மாதத்தில்
Tailoring முறைப்படி திறம்பட தைத்துக் காட்டப்படும்.

ஜனவரி மாதத்தில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்

06 Months Course

பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் :-

❖ பண்டாரவளை	- அனு Tailor (பன்சல Road)	- ஜன.14, 21	
❖ பசறை	- Ideal academy	- ஜன. 11,18	மு.ப. 10.00
❖ பதுளை	- பிரதீபா நிலையம்	- ஜன. 12,19	மு.ப.10.00
❖ ஹட்டன்	- சக்தி கல்வி நிலையம்	- ஜன. 13,20	மு.ப. 11.00
❖ வெலிமடை	- ஒக்ஸ்போர்ட்	- ஜன. 15,22	மு.ப. 10.00

தையல் என்பதைப் பாடமாக மட்டுமல்லாமல் கலையாகக் கற்றுத்தரும் தென்னிந்திய கலைப்பாணியில் பயிற்சி பெற்ற பிரபல ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி குமார் அவர்களின் வழிகாட்டலில்.....

தொடர்புகளுக்கு:
077 -9643159/ 0724304555 / 071 - 1697918

புதிர் BOX

கண்ணாமூச்சி

யார்? இவர்கள் எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

யாரது

* இவர் காலஞ்சென்ற தமிழ்த் திரைப்பட நடிகர் ஆவார்.
* இவரது மகனும் ஒரு நடிகர் ஆவார்.
* இவர் 1960களில் முன்னணி நடிகராக இருந்தார்.
* இவர் நவரசத் திலகம் எனவும் அழைக்கப்படுவார்.
* இவர் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித் துள்ளார்.
* அக்காலத்திய முன்னணி இயக்குநர்களான ஸ்ரீதர், கே.பாலச்சந்தர் ஆகியோரின் திரைப்படங்கள் பலவற்றிலும் இவர் நடித்துள்ளார்.
* முன்னணிக் கதாநாயகனாக பல படங்களில் நடித்தபோதும், தன்னை முன்னிறுத்தாத, கதாநாயகியை முன்னிறுத்தும் பல படங்களில் நடித் துள்ளார்.
* இவரது இறுதிப்படம் ரஜினிகாந்த் இரட்டை வேடத்தில் நடித்த படத்தில் வில்லன் வேடம் ஏற்றிருந்தார்.

a)

b)

இந்தச் சிரிப்பை உதிர்க்கும் உதடுகள் யாருடையவை என்று தெரிகிறதா? யார் என்பதை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

c)

உங்கள் விடைகளை

உதயசூரியன் புதிர் Box
இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு-15,
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வார்த்தைப் புதிர் - 41



இடமிருந்து வலம்

01. இயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு தயா ரிக்கப்படும் வாசனைத் திரவியம்.
02. தேர்தல் காலத்தில் இவருக்கு மவுசு அதிகம்.
03. இது இல்லாமல் வெற்றி இல்லை
11. இதன் மதிப்பு அதிகரித்துக் கொண்டே செல்கி றது
13. இலாபம் கருதாது விட்டுக்கொடுப்பது.
15. மரியாதை. 20. போதிமாதவன்.

வலமிருந்து இடம்

08. செருக்கு வேறு சொல்.
09. குழப்பம் என்பதால் குழம்பியுள்ளதோ
10. தாய்.
17. மாணவனுக்கு இதில் முன்னேற்றம் அவசியம்.
19. இந்துக்கள் பார்க்கும் காலக்குறிப்பு நூல் (குழம்பியுள்ளது).
22. கடல் இதற்குப் பின்னே அமைதியாகும்.

மேலிருந்து கீழ்

01. மன்னர்களையும் பிரபுக்களையும் இதில் வைத்து தூக்கிச் செல்வர்.
02. விடுதி, ஓய்வு இல்லம் இவ்வாறு அழைக்கப்ப டும்.
04. அம்மாவுக்கு குழந்தை கடைசி எழுத்து இல்லை
06. தமிழ் மாதத்தில் முதல் மாதம்.
08. இந்தக் குணம் கூடாது என்பர்.
09. தாய் வழி உறவு ஒன்று
12. நெருப்பால் ஏற்படுவது.
14. வேள்வி
15. கவிதை இயற்றுபவர்.
16. சிறுவர்கள் விரும்பும் விளையாட்டு உபகரணம் ஒன்று. 18. கடப்பாடு.

கீழிருந்து மேல்

03. யுத்தம் வேறுச்சொல்.
05. தாமதம் (ஆங்கிலத்தில்)
07. திருட்டு (குழம்பியுள்ளது)
21.குளம் வேறு பெயர் 22. மலர் வேறுசொல்.

வாரம் ஒரு புதிர்

இந்த வாரம் சினேகா ரசிகர்களுக்கு திரையுலக புதிர்க் கேள்விகள்

1.சினேகாவின் திரையுலக முதல் நாயகன் யார்?

2. தமிழில் சினேகா நடித்த முதல் படம் எது?

3. சினேகா தமிழ் தவிர எத் தனை மொழித் திரைப்படங்க ளில் நடித்துள்ளார்?

5. சினேகா, சிம்ரன் இணைந்து நடித்த முதல் படம் எது?

6. சில்லா என்ற கதாபாத்திர த்தில் சினேகா நடித்த படம் எது?

7. சினேகா பிரசாந்துடன் நடித்த படம் எது?

சொல்லுங்கள் பார்க்கலாம்...?

நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்களா?

வவுனியா பீடியாபாம் மக்கள் கேள்வி!

வவுனியா மாவட்டத்தின் வெண்கல செட்டிகுள பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பீடியாபாம் கிராமம் இம்முறை கொட்டித் தீர்த்த அடைமழை காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட கிராமம் ஆகும்.

ஆனாலும் இங்குள்ள மக்களுக்கு பாதிப்புகள் என்றும் புதியவை அல்ல! தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்ப இந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாகவே பலருக்கு பீடியாபாம் என்ற கிராமம் ஒன்று உள்ளது என்று தெரியவந்துள்ளதெனின் அந்தக் கிராம மக்களின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை என்கின்றனர் ஊர்மக்கள்.

1975 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வெண்கல செட்டிகுள பிரதேச செயலாளராக அப்போது கடமையாற்றிய க.குணராசா என்பவரால் 25 பேருக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட இடமே தற்போது பீடியாபாம் என அழைக்கப்படுகின்றது.

வெண்கல செட்டிகுள பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஆண்டியா புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு சிறு கிராமமே இப் பீடியா பாம் ஆகும். இங்கு 15 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் வசிக்கின்றனர். இக் கிராமம் வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக காணப்படுகின்றது.

மல்வத்து ஓயா, வில்பத்து, குஞ்சுக்குளம் என்பவற்றை எல்லையாகக் கொண்டுள்ள இக் கிராமம் அனுராதபுரம், மன்னார் ஆகிய மாவட்டங்களை வவுனியாவில் இருந்து பிரித்து வைத்துள்ளது.

இங்குள்ள மக்கள் அடர்ந்த காடுகளுக்கு மத்தியிலும் அரண் அமைத்து காவல் காத்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். நெற் பயிர்ச்செய்கை, உழுந்து, பயறு, மரக்கறிச் செய்கை என்பவையே இம் மக்களின் வாழ்வாதாரத்துக்கான ஆதாரம். தமது சொந்த உழைப்பில் சிறிய மண் வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

காலத்திற்கு காலம் ஏற்படும் வெள்ள அனர்த்தங்களால் மண் சுவர்கள் இடிந்து போக சளைக்காத மக்களாய் மீண்டும் மீண்டும் மண் சுவர் அமைத்து தமது வீட்டைப் பராமரிக்கின்றனர்.

நிரந்தரமான நல்லதொரு வீடு இவர்களுக்கு இல்லை என்பது ஒருபுறம் இருக்க, போக்குவரத்துக்காய் அவர்கள் கடுமையாக கஷ்டப்படுகின்றனர்.

இக் கிராமத்தைச் சேர்ந்த புஷ்பராணி தெரிவிக்கையில் :-

நாங்க எங்கட பிள்ளைகளோட இங்கதான் இருக்கிறம். வருத்தம் ஏதும் வந்தால் றோட்டுக்குப் போக 7 கிலோமீற்றர் நடக்கணும். பிறகுதான் பஸ்ஸுக்கு காத்து நின்று 5 கிலோமீற்றர் பஸ்ஸில போய் செட்டிகுள ஆஸ்பத்திரிக்கு போகணும். அதுக்குல செத்திடுவோம் போல் இருக்கும். எங்கட பிள்ளையள் படிக்கணும் என்றாலும் 7 கிலோமீற்றர் நடந்து போகவேணும். எங்கள எல்லோரும் கை விட்டுட்டாங்க. எந்த வசதிகளோ உதவிகளோ எங்களுக்கு கிடைக்கிறதில்ல. நாங்க புறக்கணிக்கப்பட்ட மக்களா வாழுறோம் என்று புலம்பினார்.

இதுதவிர, இப்பகுதியின் காடுகளின் பின்பகுதி பெரும்பான்மை இனத்தவரால் வெட்டப்பட்டும் வருவதுடன் மக்களது பயிர்ச்செய்கை நிலங்கள் சில அரசகாணிகளாக இருப்பதால் அவையும் பறிபோகும் நிலையில் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலங்களை வைத்துத்தான் தாம் பிழைப்பை நடத்துவதால் அவை பறிபோனால் தமது எதிர்காலம் என்னவாகுமோ? என்ற ஏக்கத்துடன் மக்கள் இருக்கின்றனர்.

இப் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவர் கூறுகையில்,

நாங்கள் 1975 ஆம் ஆண்டில் இருந்து இங்கதான் இருக்கிறம். ஆக இண்டைக்கு 37 வருஷம் கடந்திட்டு. ஆனா இன்னும் எங்களுக்கு என்று ஒரு வீட்டுத் திட்டமோ மின்சாரமோ தரேல்ல. காட்டு யானைகளினதும், விலங்குகளினதும் தொல்லைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கிறம். நாங்கள் ஆதிவாசிகளைப் போலத்தான் இருக்கிறம். ஆனா உடுபுடவைகளை மட்டும் ஏதோ கட்டியிருக்கிறம் என்றார்.

இதோட றோட்டும் இல்ல. இருக்கிற இரண்டு கிணறும் வெள்ளத்தால உடைஞ்சு போயிட்டுது. இங்கிருக்கிற இந்த பழைய பிள்ளையார் கோவில்தான் எங்கள ஏதோ காத்திடுது என்றார்.

பீடியாபாம் கிராமம் 1975 ஆம் ஆண்டு எவ்வாறு இருந்ததோ அதே நிலையில்தான் தற்போதும் இருக்கிறது. இங்குள்ள மக்களுக்கு என எந்தவொரு வீட்டுத் திட்டமும் வழங்கப்படவில்லை.

இவர்களது கிராம அலுவலர் பிரிவுக்கு ஒதுக்கப்படுகின்ற வீட்டுத் திட்டங்கள் கூட செல்வாக்குகள் காரணமாக வேறு கிராமங்களுக்கு செல்வதாக மக்கள் கூறுகின்றனர்.

வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர் உட்பட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இம் மக்களுக்கு எதைச் செய்துள்ளார்கள் என்பதே சமூக ஆர்வலர்களின் கேள்வியாகும்.

எனவே, வீட்டுப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, விலங்குகளின் அட்டகாசம், மின்சாரவசதி இன்மை, சுகாதாரப் பிரச்சினை என்பவற்றிற்கு முகம் கொடுத்து வாழும் பீடியாபாம் மக்களுக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் எதைச் செய்யப்போகின்றார்கள் என்பதை காலமே பதில் சொல்லும்.

கே.வாசு

வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர் உட்பட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இம் மக்களுக்கு எதைச் செய்துள்ளார்கள்.....?

சரித்திரம் திரும்புகிறதா?

அன்று ஸ்ரீமா! இன்று ஷிராணி!

சரித்திரம் திரும்புகிறதா? அன்று சிறிமாவோ பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இன்று ஷிராணி நீதித்துறையிலிருந்து வெளியேற்றப்படப் போகின்றாரா? வெள்ளிக்கிழமை முடிவு தெரியவரும்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக விளங்குபவை:

1. நிறைவேற்று அதிகாரம்
2. சட்டவாக்க அதிகாரம்
3. நீதித்துறை
4. ஊடகம்

முதலாவது நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. இரண்டாவது சட்ட வாக்க அதிகாரம் பாராளுமன்றத்திடம் உள்ளது. மூன்றாவது பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டவாக்கங்களை வியாக்கியானம் செய்யும் அதிகாரம் நீதித்துறையிடம் உள்ளது. நான்காவது தூண் மறக்கப்பட்டு வருகிறது. அண்மைக்காலமாக பிரசுரமாகும் அரசியல் அலசல்களிலும் ஜனநாயகத்தின் தூண்கள் மூன்று என்றே கூறப்பட்டு வருகிறது.

இது இவ்வாறிருக்க 1980 களை நோக்கி திரும்பிப் பார்ப்போம். 1970 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன்

1972 இல் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வந்து, சோல்பரி அரசமைப்பு சிறுபான்மை மக்களுக்கு வழங்கிய பாதுகாப்புச் ஷரத்து 29 ஐ நீக்கியது.

1977 பொதுத்தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான ஆட்சி படுதோல்வியை சந்தித்தது. 168 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் எட்டு உறுப்பினர்கள் மாத்திரம் சுதந்திரக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

6 இல் 5 பங்கு பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைப் பிடித்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பிரதமரானார்.

அரசியல் பழிவாங்கல் நடவடிக் கையை ஜெயவர்த்தனா மேற்கொண்டார். எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரான முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை இலக்காக வைத்து தனது பழிவாங்கல் நடவடிக் கையை ஜெயவர்த்தனா ஆரம்பித்தார்.

ஊழல் நடவடிக்கை களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு சிறிமா மீது சுமத்தப்பட்டது. அச்சமயம் ஜெயவர்த்தனா

வெளியில் கொண்டு வந்துவிட்டனர்.

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமைக்குரிய திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவின் நிலை இவ்வாறாக அமைய, இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர் என்ற பெருமை வாய்ந்த திருமதி ஷிராணி பண்டார நாயக்காவின் எதிர்காலம் எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்குப் பிறகு எவ்வாறு அமையப்போகிறது?

இப் பின்னணியில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடை பெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது அமர்வில் ஷிராணி விவகாரம் குறித்து அமெரிக்கத் தரப்பு இன்னொரு தீர்மானத்தை இலங்கை விவகாரம் தொடர்பாக முன்வைக்கவி ருப்பதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

பிரதமர் நீதியரசர் விவகாரம் உள்நாட்டுப் பிரச்சினைதான். ஆனால், ஐ.நாவின் சாசனம் ஒன்றில் கூறப்பட்டதை ஏற்றுக்கொண்ட நாடு, அதற்கிணைய நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறா? என்று ஐ.நா மனித உரிமை அதிகாரியே கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதம நீதியரசர் விவகாரம், வருட இறுதியில் அம்பாந்தோட்டையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பு மாநாடு நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்குமா? இருக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாகத் தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். கனடா நாட்டு அமைச்சர் ஒருவர் கடந்தவாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மனித உரிமை விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய கருமங்கள் நிறையவே உள்ளன. அரசியல் தீர்வு காணப்படுவது தொடர்பாக கொழும்பு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்றவாறு கனடிய அமைச்சர் தனது விஜயத்தின் நிறைவாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

பொதுநலவாய அமைப்பு மாநாட்டில் கனடா பங்குபற்றுமா என்பது இலங்கை மேற்கொள்ளும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளில்தான் தங்கியுள்ளது என்று சாரப்படவும் கனடா அமைச்சர் கூறியிருக்கின்றார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கனடா அமைச்சரின் கருத்து ஒரு தலைப்பட்சமானவை, ஆதாரமற்றவை என்று சாடியிருக்கின்றார். இச் சாடல்கள், மோதல்கள் எல்லாம் 2013 மார்ச் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் உச்சநிலைக்கு இட்டுச்செல்லும், இலங்கையால் சமாளிக்க முடியுமா? என்று அவதானிகள் ஊகிக்கின்றனர்.

ஆட்சிக்கு வந்தது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. முதலில் 1960 ஜூலை தேர்தலில் பதவிக்கு வந்தபோது அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா 1964 இல் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டார்.

சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை 975,000 தோட் டத் தொழிலாளர்களில் 525,000 பேர் இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவதற்கு வழி வகுத்தது. பிரதமர் சிறிமாவின் அமைச்சரவையில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களும் இடம்பெற்றிருந்தனர். அவர்களில் ஒருவரான டாக்டர் என்.எம்.பெரேரா இலங்கையின் ஒரேயொரு அரச கருமமொழியாக சிங்களம் இருக்கவேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்படுவதை 1955 இல் கடுமையாக எதிர்த்தார். தீர்க்கதரிசனத்துடன் கூடிய எச்சரிக்கை ஒன்றையும் டாக்டர் என்.எம். பெரேரா அன்றைய ஆட்சியாளருக்கு விடுத்தார். "சிங்களத்தை அரச கரும மொழியாக்குங்கள்; தமிழ் மொழியை பிராந்திய மொழியாக பிரகடனம் செய்யுங்கள். இவ்வாறில்லாமல் இலங்கை முழுவதற்கும் சிங்களமே அரசகரும மொழி என்று பிரகடனம் செய்தால் வடக்கு கிழக்கு மாகாணம் பிரிந்துபோய்விடும். இந்தியா அல்லது ஏனைய நாடுகளின் ஆதரவை வடக்கு-கிழக்கு மக்கள் பெறுவதற்கு முயற்சிப்பார்கள்" என்பதே அத்தீர்க்கதரிசன எச்சரிக்கையாக இருந்தது.

1965 தேர்தலில் தோற்ற சுதந்திரக் கட்சி 1970 தேர்தலில் அமோகவெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக புதிய அரசமைப்பை நிறைவேற்றி பதவி ஏற்றிருந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட் டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜெயவர்த்தனா நியமித்தார். அவ்விசாரணைக் குழு விசாரணை முடிவில் சிறிமாவோ பண்டாரநாயக்காவை குற்றவாளியாகக் கண்டது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழு அரசியல் வஞ்சம் தீர்க்க நியமிக்கப்பட்டதொன்று என்று கூறி அவ் விசாரணைக்குழுவை சிறிமா பண்டாரநாயக்கா பகிஷ்கரித்தார். குற்றச்சாட்டுக்குள்ளானவர் சமூகமளிக்காத நிலையில்தான் அவ்விசாரணைக்கு தீர்ப்பு வழங்கியது. குற்றவாளியாகக் கண்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை ஏழு வருடங்களுக்கு இல்லாமல் செய்வது என்று தீர்ப்பில் கூறப்பட்டது.

அதற்கிணங்க சிறிமாவோ குடியியல் உரிமைகளை இழந்தார். அதன் காரணமாக அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோனது. பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்ட தினம் சிறிமாவோ பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தார். அறிவிப்பு வெளியானதும் அவர் பாராளுமன்றத்திலிருந்து புறப்பட்டார். அவரை ஐ.தே.க எம்.பிக்கள் குழு சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டனர். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ. அமிர்தலிங்கமும் அவரின் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் சிறிமாவோ பண்டாரநாயக்காவை பாதுகாப்புக் கவசமாக சுற்றிவளைத்து பாராளுமன்றத்திற்கு

உலகம் பேசுகிறது

சீனாவில் ஒரே ஒரு மாணவனுக்காக இயங்கும் பள்ளி

ஒரே ஒரு ஆசிரியரை கொண்டு இயங்கும் பள்ளிக்கூடங்களை பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு மாணவனுக்காக மட்டும் ஒரு பாட சாலை இயங்குகிறது என்றால் அது ஆச்சரியமான விடயமல்லவா?

சீனாவில் பூஜியான் என்ற மாநிலத்தில் இயங்கும் இப்பள்ளிக் கூடத்தில் கடந்த 2005ஆம் ஆண்டு 24 வகுப்பறைகளுடன், எல்லா பள்ளிக்கூடங்கள் போல்தான் இந்த பள்ளியும் தொடங்கப்பட்டது.

ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களின் வருகை குறையத் தொடங்கியது. 2 வருடங்களுக்கு முன்பு 80 பேர் படித்தனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 1% ஆக குறைந்தது. இப்போது ஹூ யாங் என்ற 8 வயது சிறுவன் மட்டுமே அங்கு படித்து வருகிறான்.

ஆனால் ஒரே சிறுவன் மட்டுமே படிக் கிறான் என்பதற்காக அந்த பள்ளி சோர்ந்து விடவில்லை. வழக்கம்போல் 2 ஆசிரியைகள் அந்த மாணவனுக்கு அனைத்து பாடங்களையும் முறையான பாடத்திட்டப்படி நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

கிலோடிப் பூனை!

பிரேசில் நாட்டில் பூஜையொன்று கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறது. என்ன ஆச்சரியம்? வாயில்லாப் பிராணியை ஏன்கைது செய்தார்கள் என்று எண்ணுகிறீர்கள். இது சாதாரணப் பூனையல்ல. கில்லாடிப் பூஜை. இவர் செய்த காரியமும் சாதாரணமானதல்ல.

இந்தப் பூனை சிறைக் கைதிகளுக்கு மொபைல் போன் உள்ளிட்ட பொருட்களை கடத்திச் சென்று கொடுத்திருக்கிறது. பிரேசில் நாட்டின் தென் கிழக்கில் உள்ளது அலகோயஸ் சிறை. இங்கு 265 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் ஒரு பூனை சிறைக்குள் இருந்து வெளியே வருவதும் போவதுமாக இருந்தது. இதை கவனித்த சிறை அதிகாரிகள் பூனையின் வயிற்று பகுதியில் ஏதோ சில பொருட்கள் கட்டப்பட்டிருப்பதை கண்டு பிடித்தனர். பூனை சிறைக்குள் செல்லும் போது அதை லாவகமாக பிடித்தனர். அதன் வயிற்று பகுதியில் மொபைல் போன், துளையிடும் கம்பிகள் இரும்பை அறுக்கும் ரம்பங்கள் உள்ளிட்டவை வைக்கப்பட்டு பிளாஸ்ரிக் காகிதம் சுற்றப்பட்டிருந்தது.

சிறைக்குள் இருந்த கைதிகள் இந்த பூனையை சில பொருட்களை எடுத்து வரும் வகையில் பழக்கியுள்ளனர். இருப்பினும் பூனை கொண்டு வந்த பொருட்களை பயன்படுத்தி கைதிகள் யாரும் தப்பித்து செ ல்லவில்லை. தற்போது இந்த பூனையும் சிறை வைக்கப்பட்டுள்ளது.

மிகச் சிறிய மொடல் அழகனாம்...!

இங்கிலாந்தில் மிகச் சிறிய மொடல் அழகனாக ரோவன் ஸ்டோன் என்ற 7 மாத குழந்தை தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இங்கிலாந்தின் வென்சர் போட்டோ கிராபி நிறுவனம் சார்பில் குழந்தை களுக் கான அழகு போட்டி நடத்தப் பட்டது. இதில் 2300-க்கும் அதிகமான குழந்தைகள் பங்கேற்றன. ஒன்லைனில் போட்டோக்களை பார்த்து 24 ஆயிரம் பேர் வாக்களித்தனர்.

இவர்களுடன் சூப்பரான அழகு குழந்தையை தேர்வு செய்ய நடுவர் குழுவும் அமைக்கப்பட்டது. அவர்களது ஏகோபித்த ஆதரவுடன் கொழு கொழு குழந்தையாக தோமஸ்(வயது 28) - பெக்கி(வயது 29) தம்பதியின் 7 மாத ஆண் குழந்தை ரோவன் ஸ்டோன் தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

இவனுக்கு ரூ.45 ஆயிரம் மதிப்பில் பொம்மைகள் வாங்கிக் கொள்வதற்கான கிப்ட் வவுச்சர் ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி இன்னும் ஓராண்டுக்கு வார, மாத இதழ்களில் அட்டைப் படமாக குழந்தை ரோவனின் படம் வெளிவருவதற்கும் விளம்பரத்தில் நடிப்பதற்கும் ஒப்பந்தமும் கையெழுத்தாகி உள்ளது.

இது என்னவென்று உங்களால் ஊகிக்க முடிகின்றதா!...

உல்க சாதனைக்காக தயாரிக்கப்படும் பீட்சா ஒன்றினையே இங்குள்ள படங்களில் காண்கின்றீர்கள். சுமார் 90 தொன்கள் எடை கொண்ட இந்த பீட்சாவானது 40 மீற்றர்கள் விட்டத்தைக் கொண்ட வட்டவடிவில் தயாரிக்கப்பட்டதோடு இதற்காக 48 மனித்தியாலங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவில் வல்லுறவு: பெண்களிடம் அடிவாங்கிய அரசியல்வாதி

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் நள்ளிரவில் வீடொன்றுக்குள் புகுந்து பெண்ணொருவரை வல்லுறவுக்குட்படுத்திய அரசியல் வாதியொருவர் நையப்புடைக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவது. அசாம் மாநிலத்தின் சிராங் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவரான பிக்ரம் சிங் பிரமா என்பவர் அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரின் வீட்டுக்குள் அதி காலை 2 மணியளவில் புகுந்து அவரை வல்லுறவுக்குட்படுத்த முயன்றுள்ளார்.

இந்நிலையில் பெண்ணின் சத்தம் கேட்டு ஓடி வந்த அயலவர்கள் அவரை பிடித்து நையப்புடைத்துள் ளனர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் அந்நபரை நன்றாகத் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தின் காணொளியும் இணையத்தில் வெளியாகியுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டெல்லியல் மருத்துவ கல்லூரி மாணவியொருவர் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டு பின்னர் உயிரிழந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் இச்சம்பவமும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அழகான பெண்ணின் பல்வேறு முகம்

Emma Pickles என்ற 18 வயதான பெண் ஹொலிவூட் கற்பனை கதாபாத்திரங்களை தன் முகத்தில் வரைந்து அச த்துகிறார். இவையனைத்தும் பெண்ணின் முகத்துடன் ஒத்துப் போவது தான் ஆச்சரி யம். கண்ணாடியைப் பார்த்து தனக்குரிய மேக்கப்களை தானே போட்டு அசத் துகிறார்.

பல்வேறு மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற்பட்டு ஒற்றுமையாக வாழ்வதை பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மனிதர்களும் விலங்குகளும் ஒரே ஊரில் நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக வாழ்வது அதிகம் கேள்விப்படாத விஷயம்.

தாய்லாந்து நாட்டின் வட, கிழக்கு மாகாணத்தில் உள்ள பான் கோக் சா-ன்கா என்ற கிராமத்தில் கடந்த 60 ஆண்டுகளாக இப்படி ஒரு அதிசய நிகழ்வு அரங்கேறி வருகிறது. அதுவும் விலங்குகள் என்றால் சாதாரண விலங்குகள் அல்ல, கொடிய விஷத் தன்மை உடைய பாம்புகளுடன் இந்த ஊரில் வசிக்கும் பொதுமக்கள் ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.

பான் கோக் கிராமம் 60 ஆண்டுகளுக்கு முன் எந்த வளமும் இல்லாமல் இருந்தது. இங்கு வசித்த மக்கள் ஒருவேளை சோற்றுக்கே வழி இல்லாமல் வறுமையில் வாடினர். அப்போது இந்தக் கிராமத்துக்கு வந்த ஒரு வைத்தியர் அங்குள்ள மக்களை நிரட்டி வீட்டுக்கு வீடு ஏதாவது செல்லப்

பாம்புகள் எங்கள் செல்லப்பிராணிகள்!

தாய்லாந்தின் அதிசய கோப்ரா கிராமம்

பிராணிகளை வளருங்கள். அவற்றுக்கு சில வித்தைகளை கற்றுக் கொடுத்து மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அந்த வித்தைகளை அரங்கேற்றுங்கள். கணிசமான வருமானம் கிடைப்பதோடு நாளடைவில் சுற்றுலாப் பயணிகளும் இந்த கிராமத்துக்கு வரத் தொடங்கி விடுவர் என ஐடியா கொடுத்தார்.

அவர் கொடுத்த ஐடியாவை செயல்படுத்தத் தொடங்கினர். ஆனால் சொல்லி வைத்தாற்போல் அனைத்து வீடுகளிலுமே பாம்புகளை வளர்க்கத் தொடங்கினர். எதிர்பார்த்தது போலவே பாம்பு வித்தைகளை பார்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகளும் அந்த கிராமத்துக்கு படையெடுத்து வரத் துவங்கினர். இப்போதும் இந்த பாம்பு வளர்க்கும் நடைமுறை இந்த கிராமத்தில் தொடர்கிறது.

ஒவ்வொரு வீட்டிலும் மனிதர்கள் இருக்கின்றனரோ இல்லையோ கண்டிப்பாக ஒரு பாம்பாவது இருக்கும். இங்குள்ள 140க்கும் மேற்பட்ட வீடுகளில் ஆயிரக்கணக்கான பாம்புகள் வளர்கின்றன. விஷத் தன்மையற்ற விளையாட்டு பாம்புகளிலிருந்து கொடிய விஷத் தன்மையுடைய நாக பாம்புகள் வரை வித விதமான பாம்புகளை வளர்க்கின்றனர்.

இந்தக் கிராமத்தை தற்போது கோப்ரா வில்லேஜ் என்று தான் சுற்று வட்டார மக்கள் அழைக்கின்றனர். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பாம்புகளுடன் கொஞ்சி விளையாடுகின்றனர். இந்த பாம்புகளை தங்களின் குடும்பத்தில் உள்ளவர்களைப் போல் கருதி பாசத்துடன் வளர்க்கின்றனர்.

ஏதாவது ஒரு பாம்பு இறந்து விட்டால் போதும் ஒட்டு மொத்த கிராமமுமே துக்கத்தில் மூழ்கி விடும்.

இந்த ஊரில் வசிக்கும் 72 வயதான புலாஸ் சாய் என்பவர் கூறியதாவது:

பாம்புகள் எங்களையும் கடிப்பதுண்டு. இதுவரை 21 தடவை பாம்புகள் என்னைச் கடித்துள்ளன. கை விரல்களில் தான் அதிகம் கடிபட்டிருக்கிறேன். கொடிய விஷத் தன்மையுடைய பாம்புகள் கடித்தால் உடனடியாக கடிபட்ட விரலை துண்டித்து விடுவேன். இதுவரை நான்கு விரல்களை வெட்டித் தூக்கி எறிந்திருக்கிறேன். ஆனாலும் பாம்புகள் மீது பயமோ கோபமோ வந்தது இல்லை. அவைகள் எங்கள் குடும்பத்தின் செல்லப் பிள்ளைகள்.

இவ்வாறு தைரியத்துடன் கூறுகிறார் புலாஸ் சாய். ம்ம்ம்... இந்த கிராம மக்களுக்குஇ ரிஸ்க் எடுப்பது, ரஸ்க் சாப்பிடுவது போல் இருக்கிறது.

நானுஓயாவில் சீவப்பு மழை

(அட்டன் நிருபர் எஸ்.ஸ்ரீதரன்)

கடந்த சில மாதங்களாக நாட்டில் பல்வேறு பகுதிகளில் பல நிறத்திலான மழை பெய்தமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிவப்பு மழை, மஞ்சள் மழை, பச்சை மழை என நாட்டில் சில இடங்களில் வினோதமாக மழை வீழ்ச்சி காணப்பட்டது.

இந்த மழை நீர் குறித்த ஆய்வுகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. மலையகத்தில் மாத்தளையில் பச்சை மழையும் கொட்டகலை குடாஓயா பிரதேசத்தில் மஞ்சள் மழையும் பெய்துள்ள அதேவேளை நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிமெட்டிய எவோக்கா தோட்டத்தில் கடந்த 4 ஆம் திகதி சிவப்பு நிறத்திலான மழை பெய்ததாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அன்றைய தினம் காலை 9.45 முதல் காலை 10.30 மணிவரை இந்த சிவப்பு மழை பெய்ததாகவும் இந்த மழை நீரை தாம் போத்தல்களிலும் பாத்திரங்களிலும் சேமித்து வைத்துள்ளதாகவும் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட பிரதேசத்தில் மாத்திரமே இந்தச் சிவப்பு மழை பெய்ததாக எவோக்கா தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். தோட்ட மக்கள் சேகரித்து வைத்திருந்த சிவப்பு மழை நீரை ஆய்வுக்கு உட்படுத்துவதற்காக அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினக்குரல்
Voice of Students

இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

விதியாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

01. பின்வரும் பகுதியை வாசிக்க.

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம், விரித்தது போன்ற மலைத் தொடர்கள், இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி, நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள், அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள், அக்காட்சிகளைப் பார்த்து, கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன் .

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) இங்கு கீதம் இசைத்து வருவது யாது ? .....

2) செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது ? .....

3) பழங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. .....

4) மரம் என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக. .....

5) இங்கு இடம் பெறும் உவமானத்தை எழுதுக. .....

6) மேற்குறித்த விடயம் எத்தகைய இடம் பற்றியது . .....

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

01) ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு, விலக்கு)

02) மாணவர் தமது .....களைச் சிறப்பாகச் செய்தார். (பனி, பணி)

03. பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக .

01) பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன.....

பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

01) நட்சத்திரம் வானில் மின்னுகிறது.....

04. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

01) ஏட்டுச்சுரக்காய் .....

02) கைகூடுதல் .....

05. பின்வரும் ஒவ்வொரு பழமொழிகளினதும் கருத்தை எழுதுக.

01) அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் .....

02) கடவுளை நம்பினோர் கைவிடப்படார் .....

06. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

01) ஐயோ பாம்பு .....

02) கடவுளே காப்பாற்றமாட்டியா .....

07. சொற்களைஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

01) மோகன் / பாடசாலைக்குச்/ பாடம் /படித்தான்/ நேற்றுப்/ சென்று

.....

02) மகாவித்தியாலயம் / கல்வியிற்/ பாரதி /விளங்கியது / சிறந்து

.....

08. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

01) விளையாட்டு .....

02) பாடசாலை .....

03) வைத்தியசாலை .....

09. கருத்தைத் தமிழில் எழுதுக.

01) Good evening .....02) Please come here. .....

03) Don't go out .....

10. ஒவ்வொரு சிங்களச் சொல்லிற்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக.

01) அம்ப கச ..... 02) பொள் கச .....

11. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ:

01) பவளமல்லிகை 02) குவளை 03) அந்திமந்தாரை 04) நந்தியாவட்டை

12. இரவில் திரியும் பறவையாக அமைவது :

01) ஆந்தை 02)கிளி 03) கொக்கு 04) மஞ்சள் குருவி

13. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் நாடு :

01) சீனா 02) இந்தியா 03) கொழும்பு 04) இலங்கை

14. இலங்கையை சிலோன் என்ற பெயரால் அழைத்தவர்கள் :

01) ஆரியர் 02) தமிழர் 03) ஆங்கிலேயர் 04) சிங்களவர்

15. உலோகப் பாத்திரத்தில் இட்டு வைக்கக் கூடாத பொருள்:

01) நீர் 02) சீனி 03) அரிசி 04) உப்பு

16. மின்சாரத் தொழிலாளர் பயன்படுத்தும் உபகரணம்:

01) சுத்தியல் 02) கயிறு 03) மின் சோதிப்பான் 04) கத்தி

17. பொருட்களை வாங்கும் போது, கவனிக்க வேண்டியது :

01) விலை 02) காலாவதியாகும் திகதி
03) உற்பத்தித்திகதி 04) மேற்கூறிய யாவும்

18. பனிக்கட்டியை நீரில் இடும் போது :

01) தாழும் 02) மிதக்கும் 03) உறையும்

19. வீதியால் நடந்து செல்வோர்:

01) சாரதிகள் 02) விலங்குகள் 03) பாதசாரிகள்

20. வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், வருவதைத் தடுப்பதற்காக வளர்க்கப்படும் தாவரம் :

01) காவட்டம் புல் 02) செவ்வந்தி 03) துளசி

21.

படத்தில் உள்ள விலங்கை விபரிக்கும் சரியான கூற்று :

01) முலையூட்டி, விவசாயி, உணவு
02) இடம்பெயரும், இனத்தைப் பெருக்கும், வளர்ச்சியடையும்
03) தாவரஉண்ணி, மூலிகை, அதிசயமானது

22. முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.



23. வானத்து உடுக்களை எண்ணி விட முடியுமா ? இங்கு உடுக்கள் என்பது :

01) முகில்கள் 02) பறவைகள் 03) நட்சத்திரங்கள்

24. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பெண் மாணவர்களைக் குறிக்கும் உருவாக அமைவது :



01) 02) 03)

25. அதிகளவு நீர் தேவைப்படும் பயிர்களில் ஒன்று :

01) வாழை 02) பயறு 03) நெல்

26. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள விலங்கு எது?

01) சிங்கம் 02) யானை 03) வாளேந்திய சிங்கம்

* 27 தொடக்கம் 32 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்டுள்ள சொற் சோடியின் தொடர்பை விளங்கி. அதே தொடர்புடைய மேலுமொரு சொற்சோடியை ஆக்குவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்.

27. போர் : அழிவு : .....: பொசுங்கல்

01) தீ 02) நீர் 03) சேதம் 04) வெய்யில்

28. சிலந்தி : சிலந்திவலை ..... : காவியம்

01) இலக்கியம் 02) ஆசிரியர் 03) கவிதை 04) கவிஞன்

29. நாட்காட்டி : நாள் .....: சொல்

01) நூலாசிரியர் 02) புத்தகம் 03) அகராதி 04) இலக்கியம்

30. சதுரம் : சதுரமுகி ..... : நான்முகி

01) கோடு 02) வட்டம் 03) கோளம் 04) முக்கோணம்

31. அக்கினி மூலை : தென் கிழக்கு .....: வடகிழக்கு

01) மாலயம் 02) வாயுமூலை 03) ஆவி மூலை 04) ஈசானமூலை

32. பதிப்பாசிரியர் : சஞ்சிகை ..... : திரைப்படம்

01) இயக்குநர் 02) பாடல் 03) கமரா 04) நடிப்பு

33. இப்படத்தில் காட்டப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடை எது ?



01) புத்தகம், பென்சில், பேனா
02) அதிபர், ஆசிரியர், மாணவர்
03) பாடங்கள், சமூகக்கல்வி , மாணவர்
04) இலக்கியம், உரைநடை, கவிதை

34. இப்படத்தில் காட்டப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடை எது ?

01) தேயிலை, தென்னை, இறப்பர்
02) பாடசாலை, வலயம், கோட்டம்
03) ஆசிரியர், மாணவர், தொழிலாளர்

35. இலங்கையின் A தர வீதியைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம் :

01) நீலம் 02) கபிலம் 03) சிவப்பு 04) பச்சை

36. இலங்கை அரசாங்க இலச்சினையில் நிலைத்திருப்பதைக் குறிப்பது :

01) தர்மச்சக்கரம் 02) பூவிதழ்கள் 03) நிறைகுடம் 04) சூரியனும் சந்திரனும்

37. இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம் :

01) திசாவாவி 02) பசவக்குளம்
03) வவுனிக்குளம் 04) கிரித்தலைக்குளம்

38. மின்னல் தாக்கும் சாத்தியம் கூடுதலாக இருப்பது:

01) வாகனத்தில் செல்லும் போது 02) வயல் வெளியில் வேலை செய்யும் போது
03) தார் வீதியில் செல்லும் போது

39. உருவில் ஒரு சவர்க்காரம் காணப்படுகின்றது



அதன் 01) விளிம்புகளின் எண்ணிக்கை யாது ? .....

02) செவ்வக முகங்களின் எண்ணிக்கை யாது ? .....

40. 9540 உடன் 605 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? .....

41. 6075 இலிருந்து 450ஐக் கழிக்க வித்தியாசம் யாது? .....

42. உப்புத்தூள் விரைவாகக் கரைவது?

01) வெந்நீரில் 02) தண்ணீரில் 03) கொதித்தாறிய நீரில்

43. தரப்பட்டுள்ள விளையாட்டுப் பொருளின் பெயர்:

01) தள்ளுவண்டி
02) சூழல்வண்டி
03) சில்லுவண்டி

44. சுயசரிதை என்பது :

01) பிறரைப்பற்றிய விமர்சனம்
02) தன்னைப்பற்றிய தகவல்கள்
03) மாதாந்த அறிக்கை

45. தரப்பட்டுள்ள தகவல்களுக்குப் பொருத்தமான விஞ்ஞானியின் பெயரை எழுதுக.

பாடசாலையில் பல குறும்புகள் செய்தார்
தந்தையின் களஞ்சியத்துக்கு தீ மூட்டினார்
உலகிற்கு மின் விளக்கைத் தந்தார்

01) கிரகம் பெல் 02) மார்க்கோணி 03) தோமஸ் அல்வா எடிசன்

46. ஆறு கடலுடன் கலக்கும் இடம் :

01) முனை 02) ஏரி 03) கழிமுகம் 04) கண்டி

47. 500g சீனியின் விலை ரூபா 42.50 உம் 250g பருப்பின் விலை ரூபா30.00 உம் ஆகும். 1/2 Kg பருப்பும் 1/4 Kg சீனியும் வாங்கிய குமரன் ரூபா 100.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது ? .....

48. 315 மாணவர்கள் ஒரு செயலமர்வுக்காக 3 சம குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் எனின், ஒரு குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது ? .....

49. ஒரு கடிகாரமானது 15 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது. ஆனால் 20 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது என நினைத்துக் கடிகாரத்தை சீர் செய்தபின் கடிகாரம் 12.00மணி காட்டியது ஆயின், சரியான நேரத்தை எழுதுங்கள் .....

50. தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது ?



.....

51. ஒரு சிறிய கோழிப் பண்ணையில் நாளாந்தம் 25 கோழிகள் முட்டையிடும். சனிக்கிழமை மாலை அப்பண்ணையில் இருந்து, கொண்டு வரப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 125 எனின் அவன் எத்தினத்திலிருந்து சேகரிக்கப்பட்ட முட்டைகளைக் கொண்டு வந்தான் . .....

52. ரூபா 47.00 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூ 12.50 விலையுள்ள பேனா வையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபா 50.00 உள்ளது. மேலும், எவ்வளவு பணம் தேவைப்படும். .....

53. ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு 750ml ஆகும். அத்தகைய 9 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவை மில்லிலீற்றரில் தருக. .....

54. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாகக் காட்டுக.



.....

55. எனக்கு 12 விளிம்புகளும் 8 உச்சிகளும் உள்ளன. எனது ஒவ்வொரு முகமும் சதுரமானது நான் யார்? .....

56. **"நீர் ஒரு வளம்"** என்னும் தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களாவது இடம்பெறுவதுடன் அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பன திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்....

01 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து உமக்குத் தரப்பட்டுள்ள புள்ளித்தாளில் அதற்கு ஒத்த எண்ணின் மீது புள்ளடி இடுக.

*** பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) "அலங்கு தார்க் கோதையை காணிய சென்று கதவடைத்தேன்" என்பதில் **தார்** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. நீர் 2. மாலை 3. காலை 4. நார்

02) "மஞ்சு மஞ்சுங்கைப் பரராஜசேகர மன்னன் **வெற்பில்**....." என்ற பாடல் தொடரில் வெற்பு என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
1. மேகம் 2. பஞ்சு 3. வயல் 4. மலை

03) "ஊழி திரண்டதோ கங்குல்" என்பதில் **கங்குல்** என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்
1. இருள் 2. பகல் 3. இரவு 4. கனவு

04) "பாரதியின் பாடல்களைப் பாமரரும் படித்து இன்புறுகின்றனர்" **பாமரர்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. கவிஞர் 2. அரசர் 3. பண்டிதர் 4. மாந்தர்

05) "**நறுந்தருக்கள்** வழி நெடுகிலும் நிழல் தரட்டும்" **தருக்கள்** என்பதன் கருத்து
1. பூக்கள் 2. குடைகள் 3. பந்தல்கள் 4. மரங்கள்

***பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க .**

06) தனக்கே உரிமையாக முழுப் பொருளையும் அனுபவித்தல்
1. தனியுரிமை 2. ஏகபோகம் 3. ஆட்சி 4. ஓம்படை

07) இழந்த பொருளைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் வழங்கப்படும் வெகுமதி
1. கைக்கூலி 2. இழப்பீடு 3. வெகுமானம் 4. சன்மானம்

08) எதிர்கால நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறியும் ஆற்றல் படைத்தவன்
1. நைட்டிகன் 2. பௌராணிகன் 3. தீர்க்கதரிசி 4. சோதிடன்

09) web site (வெப்சைற்) என்பதன் தமிழ் வடிவம்
1. இணையம் 2. வலைத்தளம் 3. மின்னஞ்சல் 4. பக்கம்

10) சபை, பொதுவில், மன்றம் என்ற சொற்கள் குறிக்கும் பொருள்
1. அரண்மனை 2. அங்காடி 3. அம்பலம் 4. அந்தப்புரம்

11) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற அருஞ்சொற்றொடரினால் குறிக்கப்படுவது
1. வளர்ச்சி 2. தேய்வு 3. மறைவு 4. தளர்ச்சி

12) வறியவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்துப் பாதுகாக்குமிடம்
1. ஆச்சிரமம் 2. ஆதுலர்சாலை
3. பர்ணசாலை 4. புறஞ்சேரி

13) இருபந்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1. வெள்ளிவிழா 2. பொன்விழா 3. மணிவிழா 4. பவளவிழா

14) அவரை, உழுந்து என்பவற்றின் உள்ளீடு; பருப்பு என்பது போலக் கற்றாளையின் உள்ளீடு
1. சதை 2. சுளை 3. மணி 4. சோறு

15) கலை என்பதற்குப் பிணை என்பது போல, போத்து என்பதற்கு
1. போத்தி 2. பிணை 3. பிணா 4. மறி

*** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) ஆபத்து நேரத்தில் மிக விரைந்து உதவி செய்தல் என்னும் பொருளுக்கேற்ற உவமைத்தொடர்
1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
2. ஊருணி நீர் நிறைந்தாற்போல
3. உடுக்கை இழந்தவன் கைபோல
4. கண்ணை இமை காப்பது போல

17) சீவனத்தைக் கெடுத்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1. வயிறு வளர்த்தல் 2. வயிற்றிலடித்தல்
3. வயிறு எரிதல் 4. வயிறு வாய்த்தல்

18) நாம் ஈடுபடும் காரியம் ஒன்று கைகூடாத விடத்து அதற்காக..... புத்திசாலித்தனம் ஆகாது
1. அகமகிழ்தல் 2. அங்கலாய்த்தல்
3. ஆரவாரித்தல் 4. கொட்டமடித்தல்

19) நூலாசிரியர் தாம் எழுதிய நூலை மறைந்த தந்தைக்கு ..... செய்தார்
1. சமர்ப்பணம் 2. திறனாய்வு
3. பிராயச்சித்தம் 4. நயப்புரை

20) பாதுகாப்பாக இருக்குமென்று எண்ணிச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் சில துன்பத்தைத் தருவதும் உண்டு என்பதை விளக்கும் பழமொழி
1முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
2. வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்தது
3. மடியில் கனமிருந்தால் வழியில் பயம்
4. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி

*** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) மெய்யெழுத்துக்களில் இனவெழுத்து இல்லாத தொகுதி
1. வல்லினம் 2. மெல்லினம் 3. இடையினம் 4. உயிரினம்

22) பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் அல்லாதது
1. கண்காட்சி 2. நீரேரி 3. கூட்டுறவு 4. மடந்தை

23) 'செந்தாமரை போன்ற முகம்' இங்கு செந்தாமரை என்பது
1. உவமைத்தொகை 2. பண்புத்தொகை
3. உம்மைத்தொகை 4. அன்மொழித்தொகை

24) 'எல்லோரும் நல்லவர்கள்' என்பதில் வரும் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்
1. ஐயம் 2. எச்சம் 3. முற்று 4. தெரிநிலை

25) பொருளுக்கு உரிமை பூண்டு நிற்கும் பண்பை உணர்த்தும் சொல்
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல்
3. இடைச்சொல் 4. உரிச்சொல்

26) பாடசாலையின் நீங்கினான், இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வேற்றுமை
1. முதலாம் வேற்றுமை 2. ஐந்தாம் வேற்றுமை
3. ஆறாம் வேற்றுமை 4. எட்டாம் வேற்றுமை

27) பின்வருவனவற்றில் இயல்புப் புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்
1. வானவில் 2. மரக்கொம்பு 3. நெற்பயிர் 4. பாடலடி

28) இடைச்சொல்வகை அல்லாதது
1. பகுதி 2. விகுதி 3. சாரியை 4. வேற்றுமை உருபு

29) படித்தான் என்ற சொல்லில் காலங்காட்டும் உறுப்பு
1. படி 2. த் 3. தா 4. ன்

30) உயர்திணை இருபாற் பொதுப்பெயர் அல்லாதது
1. அறிவாளி 2. எதிரி 3. மாது 4. வாதி

*** பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

31) கண்ணனும் வாணியும் பாடசாலைக்குச்
1. சென்றார்கள் 2. சென்றார் 3. சென்றவர்கள் 4. சென்றனர்

32) மழை நன்கு பெய்தாலன்றிப் பயிர்கள் செழித்து
1. வளராது 2. வளர்வதில்லை 3. வளராதவை 4. வளரா

33) நீங்கள் உடன்பட்டால் அன்றி, நான் இச் செயலில்
1. ஈடுபடுவேன் 2. ஈடுபட்டேன் 3. ஈடுபடேன் 4. ஈடுபடுகிறேன்

34) வன்செயல்களும், புரட்சியும் நாட்டு முன்னேற்றத்திற்கு
1. உகந்ததன்று 2. உகந்தனவன்று
3. உகந்ததல்ல 4. உகந்தனவல்ல

35) நீ, கவனமாகப் படித்தாலன்றி தேர்விலே
1. தேறுவாய் 2. தேற்றுவாய்
3. தேறாய் 4. தேற்றவில்லை

*** பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

36) 'மிக நெருக்கமான நட்பு' என்ற பொருளைத் தருவது ..... ஆகும்
1. கெழுதகைமை 2. கூட்டுறவு 3. நட்பு 4. ஒற்றுமை

37) முரசறைந்து அரசனுடைய கட்டளையை மக்களுக்கு அறிவிப்பவன்..... ஆவான்
1. ஒற்றன் 2. கலைஞன் 3. வள்ளுவன் 4. சேவகன்

38) கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவரது புகழ் ..... எனப்படும்
1. மெய்ப்பாடு 2. மெய்க்கீர்த்தி 3. மானியம் 4. அடையாளம்

39) பொய்யுங் களவும் நன்மை .....
1. தராது 2. தரா 3. தரவில்லை 4. தரும்

*** கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும், அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40) (அ) இலக்கியம், நுண்கலைகள் அறிவியல் போன்றன யாவும் ஆக்கக் கற்பனைகளின் விளைவுகளேயாம்.
(ஆ) முன்னர் நாம் அனுபவித்த, நிகழ்ச்சி ஒன்றினை மீண்டும் நமது மனக்கண் கொண்டு நோக்குதல் மீள் ஆக்கக் கற்பனையாகும்.
(இ) கற்பனை இருவகைப்படும் .
(ஈ) ஆனால் , பழைய அனுபவங்களின் பிம்பங்களைப் புதிய முறையில் நாம் தொகுத்து அமைப்போமாயின் அது ஆக்கக் கற்பனையாகும்.
(உ) அவை மீள் ஆக்கக் கற்பனை, ஆக்கக் கற்பனை என்பனவாகும்.

1. ஆ, ஈ, இ, உ, அ 2. இ, உ, ஆ, ஈ, அ
3. இ, உ, ஈ, ஆ, அ 4. இ, உ, அ, ஈ, ஆ

(தொடரும்.....)

மரஞ்செடி கொடிகள்

தொடர்புபடுத்துக.

1. மிளகு
2. செவ்வரத்தம்பூ
3. அகத்தி
4. சூரியகாந்தி

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1. பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வித்து
   1. வேம்பு 2. கோப்பி 3. நெல்லி
2. பூக்களுக்கு தீங்கு செய்யும் பிராணி அல்லாதது
   1. வண்ணத்துப்பூச்சி 2. பச்சிலைப்பூச்சி 3. வெட்டுக்கிளி
3. கறி சமைக்க உதவும் பூக்கள் எவை?
   1. கீரை 2. அகத்திப்பூ 3. செவ்வரத்தம்பூ
4. ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் எது?
   1. கொக்கோ 2. கௌப்பி 3. கோப்பி
5. முக்கனிகளில் ஒன்று
   1. தோடம்பழம் 2. மாம்பழம் 3. திராட்சைப்பழம்
6. பூனை, நோய் வாய்ப்பட்டால் உண்ணும் தாவரம் எது?
   1. குப்பைமேனி 2. புல் 3. கறிவேப்பிலை
7. வித்தில்லாத பழம் எது?
   1. மாம்பழம் 2. அன்னாசி 3. பப்பாசிப்பழம்
8. இலை மூலம் இனம் பெருகும் தாவரம்?
   1. சதைகரச்சான் 2. நாகதாளி 3. மரவள்ளி
9. நீரில் அமிழ்ந்து மிதக்கும் தாவரம்
   1. ஆகாயத்தாமரை 2. பாசி 3. ஐதரில்லா
10. எமது நாட்டின் மரநடுகை தினம் எப்போது?
    1. செப்ரெம்பர் 17 ஆம் திகதி
    2. நவம்பர் 15 ஆம் திகதி
    3. மாசி 20 ஆம் திகதி

பின்வரும் வித்துக்கள் எவற்றின் மூலம் பரம்பலடைகின்றன என எழுதுக.

1. .....
2.  .....

3.  .....
4. .....
5. .....

பூவின் பிரதான பகுதிகளைப் பெயரிடுக.



1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....
8. .....

இலையின் பகுதிகளைப் பெயரிடுக.



A. .....
B. .....
C. .....
D. .....
E. .....
F. .....

தாவர இலைகளின் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

5. .....
6. .....
7. .....
8. .....

அழகு...,
உடல் நலம்...
குழந்தை வளர்ப்பு...
சாதனை மகளிர்...
ஆலோசனை...
உளவியல்...

சிநேகிதியே

சர்க்கரைப் பொங்கல்

பொங்கல் சர்க்கரைப்பொங்கல், வெண் பொங்கல் என இரு வகைப்படும். வெண் பொங்கல் காலை உணவாகவும் சர்க்கரைப் பொங்கல் இனிப்பாகவும் உண்ணப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் போது வழமையாக எல்லாத் தமிழர் இல்லங்களிலும் புது அரிசியைக் கொண்டு சர்க்கரைப் பொங்கல் பொங்கப்படுகிறது. உலையில் உள்ள நீரை பொங்கவிட்டு பொங்கல் செய்யப்படுவதனால், பொங்கல் என்பதை ஆகு பெயராகவும் கருதலாம்.

சர்க்கரைப் பொங்கல்

சர்க்கரைப் பொங்கல் செய்முறை இதோ உங்களுக்காக...

தேவையான

பொருட்கள்:

*பச்சரிசி- 1/2 கிலோ
*பாசிப்பருப்பு - 200 கிராம்
*சர்க்கரை - 1 கிலோ
*பால் - 1/2 லிற்றர்
*நெய் - 100 கிராம்
*முந்திரி - 100
*சுக்கு - சிறிது
*ஏலக்காய் - 10
*தேங்காய் - 1

முதலில்

செய்துகொள்வது:

1. அரிசியை தண்ணீர் விட்டு நன்கு கழுவி தண்ணீரை வடித்துக்கொள்ளவும்.
2. பாசிப்பருப்பை நன்கு வறுத்துக் கொள்ளவும்.
3. ஏலக்காய், சுக்கு இரண்டையும் மிக்சியில் பவுடராக அரைத்து கொள்ளவும்.
4. முந்திரியை நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.
5. தேங்காயை நன்கு துருவிக்கொள்ளவும்.

செய்யும் முறை:

1. ஒரு பாத்திரத்தில் ஒரு லிற்றர் தண்ணீர் மற்றும் பால் சேர்த்து அடுப்பில் வைக்கவும்.
2. பால் பொங்கி வரும்போது அரிசியை போட்டு நன்கு வேக விடவும். அரிசி முக்கால் பதம் வெந்ததும் பாசிப்பருப்பை சேர்த்து நன்கு வேகவிடவும்.
3. அரிசியும், பருப்பும் நன்கு வெந்ததும் அதில் சர்க்கரை சேர்த்து நன்கு கிளறிக்கொண்டே இருக்க வேண்டும்.
4. நன்கு கிளறிய பின்பு வறுத்த முந்திரி, துருவிய தேங்காய் இரண்டையும் சேர்த்து நன்கு கிளறவும்.
5. அதன் பிறகு ஏலக்காய், சுக்குப் பவுடரையும் சேர்த்து நன்கு கிளறவும்.
6. அடுப்பில் இருந்து இறக்கும் போது நெய் ஊற்றி நன்கு கிளறி இறக்கவும்.

சுவையான சர்க்கரைப் பொங்கல் தயார்.

வீட்டிலேயே வெக்சிங் செய்யும் முறை

தனு ரசாக்

என்னதான் நாம் தற்போது நமது முகத்திற்கும் உடலிற்கும் பல அழகு சிகிச்சைகளை மேற்கொண்டாலும் அநேகமான பெண்கள் அதிகமாகக் கவலைப்படும் இன்னொரு விடயம் சருமங்களில் காணப்படும் முடிகள்தான். இது பெண்களின் சருமத்தின் அழகைக் கெடுத்து அவர்களின் தன்னம்பிக்கையையும் இது குறைக்கக் காரணமாகின்றது.

அலுவலகம் போகும் பெண்களில் சிலர் அவர்களின் தொழிலின் நிமித்தம் முழங்கால் அளவு பாவாடை அணிய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். இவ்வாறானவர்களுக்கு காலில் முடிகள் இருந்தால் அவர்கள் அவ்வாறான ஆடைகளை அணிவதற்கு சங்கடங்களை அனுபவிப்பார்கள்.

ஆகவே, அவ்வாறு இருப்பவர்கள் சருமத்தில் உள்ள முடிகளை நீக்கக் கடைகளில் விற்கப்படும் முடி நீக்கும் க்ரீம்களை வாங்கியோ அல்லது சவர ரேஸர்களின் உதவியுடனோ இவற்றை நீக்குகின்றார்கள்.

ஆனால், இவை நீண்டகாலப் பலனைத் தருவதில்லை. அத்துடன் இவ்வாறான ரேஸர்கள் மூலம் முடிகளைத் தொடர்ந்து அகற்றும் போது நாளடைவில் முடிகள் அடர்த்தியாகி காடு போல் வளர்ந்துவிடும்.

மேலும், சிலருக்கு இவ்வகையான ரேஸர்கள், க்ரீம்கள் உடலுக்கு ஒவ்வாமையையும் ஏற்படுத்துவிடும் என்று கூறுகிறார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

சில பெண்களுக்கு மேல் உதட்டுப் பகுதியிலும், நாடிகளிலும், கன்னங்களிலும் முடிகள் காணப்படும். இவர்கள் ரேஸர்களை பாவிப்பதை அவசியம் தவிர்க்கவேண்டும். ஆகவே, இவ்வாறான க்ரீம்களை பயன்படுத்தி ரோமங்கள் நீக்குவதை விட எளிதாக வீட்டிலேயே கிடைக்கக்கூடிய பொருட்களை வைத்து இயற்கையான முறையில் எந்த ஒரு பக்கவிளைவுகளும் இல்லாமல் எளிதாக நீக்கலாம்.

ஆறு மேசைக்கரண்டி சீனி, இரண்டு கரண்டி எலுமிச்சைச் சாற்றை எடுத்து ஒரு பாத்திரத்தில் இளஞ் சூட்டில் சீனியை தேவையான அளவு நீருடன் கலந்து சூடாக்க வேண்டும். பாகு பதம் வரும் வரை காய்ச்சி ஆறவிடவேண்டும். அதன் பின்னர் பருத்தித் துணியை நீள்சதுர வடிவாக (எந்த சருமத்திற்கு நாம் உபயோகிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு) வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அந்த சீனிப் பாகை ஒரு தட்டையான வடிவிலான கரண்டியினால் எமது சருமத்திற்கு பூசி பருத்தித் துணியினால் ஒற்றி கீழிருந்து மேல்நோக்கி இழுத்து எடுக்கவேண்டும்.

இவ்வாறு தேவையான பகுதிகளில் வெக்ஸ் பண்ணியவுடன் எமது சருமங்களில் ஏதாவது கிரிம்களை அவசியம் பூசுதல் வேண்டும்.

நாம் வெக்ஸ் பாவித்த பருத்தித் துணிகளை துவைத்து கழுவி வைத்துவிட்டு மீண்டும் மீண்டும் அதை பாவனைக்கு எடுத்துக் கொள்ளலாம். தற்போது கடைகளில் வெக்சிங் ஸ்ரிப்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இது வீட்டிலே எவ்வித செலவுகளும் இன்றி நாம் செய்யக்கூடிய ஒரு எளிய சிகிச்சை முறையாகும்.

இவ்வாறு நாம் பூசிய எஞ்சிய கலவையை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவையான நேரம் உபயோகிக்கலாம். அவ்வாறு மறுபடியும் அந்தக் கலவையை நாம் எடுக்கும்போது அந்தக் கலவையில் சிறிது வெந்நீரைக் கலந்து உபயோகிக்க வேண்டும். ஏனெனில், சீனிப்பாகு என்பதால் அக்கலவையானது கடினமாகி இருக்கும்.

எஸ்.பிரியதர்ஷினி

பப்பாளிப் பழத்தின் மருத்துவ பயன்கள்

1. பப்பாளிப் பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.
2. பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும்.
3. தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும்.
4. பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும்.
5. நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.
6. பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும்.
7. பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும்.
8. பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.
9. பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும்.
10. பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடையும்.
11. பப்பாளி இலைகளை பிழிந்து எடுத்து வீக்கங்கள் மேல் பூசி வர வீக்கம் கரையும்.
12. பப்பாளி விதைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷயம் இறங்கும்.
13. பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் சாதத்தில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும்.

பாடல்

படம்:- கடல்
இசை :- ஏ.ஆர்.ரஹ்மான்
பாடலாசிரியர்:- வைரமுத்து
பாடியவர் :-சக்திஸ்ரீ கோபாலன்

நெஞ்சுக்குள்ள...
ஒம்ம முடிஞ்சிருக்கேன்... (2)
இங்கு எத்திசையில்
ஏம் பொழப்பு விடிஞ்சிருக்கோ?

வெள்ளைப் பார்வை
வீசி விட்டீர் முன்னாடி
இந்த தாங்காத மனசு
தண்ணிப்பட்ட கண்ணாடி
வண்ண மணியாரம்
வலதுகைக் கடியாரம்
ஆணை புலியெல்லாம்
அடக்கும் அதிகாரம்

நீர் போன பின்னும்
நிழல் மட்டும் போகலயே... போகலயே...
நெஞ்சுக்குழியில் நிழல் வந்து
விழுந்துருச்சே...
அப்ப நிமிந்தவதான்
அப்புறமாக் குனியலையே!
குனியலையே!
கொடக்கம்பி போல மனம்
குத்தி நிக்குதே...
(நெஞ்சுக்குள்ள)

பச்சி ஒறங்கிருச்சு
பால் தயிராத் தூங்கிருச்சு
இச்சி மரத்து மேல
எழ கூடத் தூங்கிருச்சு... ஏ... ஏ...

காச நோய்க் நரிகளும்
கண்ணுறங்கும் வேளையில
ஆச நோய் வந்தமக
அரை நிமிசம் தூங்கலையே... ஏ... ஏ...
(நெஞ்சுக்குள்ள)

ஒரு வாய் எறங்கலையே
உள்நாக்கு நனையலையே
ஏழெட்டு நாளா...
எச்சில் முழுங்கலையே... ஏ... ஏ...

ஏலே இளஞ் சிறுக்கி
ஏதும் சொல்ல முடியலையே
இறப்பர் வளவிக்கெல்லாம்
சத்தமிட வாயில்லையே... ஏ... ஏ...
(நெஞ்சுக்குள்ள)

ஒருநாள் சம்பளத்தை ஒன்று இலட்சமாக்கிய தம்பி

மைனா படத்துக்குப்பிறகு ரசிகர்களால் அங்கீகரிக்கப்பட்டவர் தம்பி ராமைய்யா. டைரக்டராக அவரை ஏற்றுக்கொள்ளாத ரசிகர்கள் ஒரு நடிகராய் ஏற்றுக்கொண்டனர். அதனால் அதையடுத்து பல படங்களில் முக்கியத்துவம் வாய்ந்த வேடங்கள் அவருக்கு கிடைத்தன. தம்பி ராமைய்யா குணச்சித்திர வேடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அந்த வகையில் சமீபத்தில் பிரபு சாலமன் இயக்கத்தில் நடித்துள்ள கும்கி படத்திலும் அவரது நடிப்பு பேசப்பட்டதால் அடுத்தடுத்து தம்பி ராமைய்யாவை பல படங்களுக்கு புக் பண்ணி பிசியான நடிகராக்கி விட்டனர். அதன் காரணமாக மைனா தொடங்கி கும்கி வரை ஒருநாளைக்கு 50 ஆயிரம் சம்பளம் வாங்கி வந்த தம்பி ராமைய்யா இப்போது கும்கிக்குப் பிறகு ஒரு நாளைக்கு 3 லட்சம் சம்பளம் வாங்குகிறார். அந்த வகையில் இன்னொரு ஹிட் படத்தில் நடித்து விட்டால் சந்தானத்தின் சம்பளத்தையும் எட்டிப் பிடித்துவிடும் நிலையில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

விஜய் படத்துக்கு டைட்டில் பிரச்சினை!

விஜய் நடித்த காவலன் படத்துக்கு முதலில் காவல்காரன் என்று தான் பெயர் வைத்தனர். ஆனால் அந்தத் தலைப்பில் ஏற்கனவே படம் பண்ணியுள்ள சத்யா மூவிஸ் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே காவலன் என்று மாற்றினர். இப்போது விஜய் நடித்து வரும் புதிய படத்துக்கு தங்கமகன் என்று பெயர் வைப்பதற்கு அந்த டைட்டிலில் ஏற்கனவே ரஜினியை வைத்து படம் தயாரித்துள்ள சத்யா மூவிஸ் டைட்டிலை விட்டுத்தர மறுத்து விட்டது. ஆக நடிகர் விஜய்யும் ஏ.எல்.விஜய்யும் ஓட்டலில் ரூம் போட்டு புதிய டைட்டில் பற்றி யோசித்து வருகின்றனர்.

ரஜினியாக தனுஷ்; கமலாக சிம்பு!

ஒரு கலக்கல் ரீ
வகையில் ஸ்ரீதர்
சூப்பர் ஹிட்டா
நடிகர்கள் தனுஷ்
ஸ்ரீபிரியா கேரக்
நடந்து வருவதா
சொல்லிக்கொ
இருக்கிறது. இ
மறைமுகமாக த
நடிக்க ஒப்புக்
பிறந்தநாள் விழ
இதனால் இவ
இருவரும் இ
கூறப்படுகிறது
வெளியாகலா

முன்னணி ஹீரோக்களை

முனி படத்தில் தனக்கு ஜோடியாக வேதிகாவை ந
ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வேடத்தில் ராஜ்கிரண
போல் முனி படத்தின் இரண்டாம் பாகமான காஞ்
சரத்குமாரை நடிக்க வைத்தவர் இப்போது முனி மூ
டாப்ஸியை புக் செய்து ராஜ்கிரண், சரத்கும
நடிக்க சில முன்னணி ஹீரோக்களிடம் சே
கேட்ட நடிகர்கள் நடிப்பது குறித்து லோர
இன்னும் சொல்லவில்லை.

ரூட்டை மாற்றும் ஓவியா

கலகலப்புக்கு பின் தன் மார்க்கெட் கலக
நினைத்த ஓவியாவுக்கு எதிர்பார்த்தபடி பு
இல்லாமல் கலவரத்துடன் காணப்படுகிறா
இதுவரை ஹீரோயினாக மட்டுமே நடிப்பே
வந்த ஓவியா இப்போது நல்ல கேரக்டர்க
வாய்ப்புகள் கிடைத்தாலும் நடிப்பேன்...
வருகிறார்.

பின்னணி பாடும் நடிகை சந்தியா!

காதல் சந்தியாவிடம் நடிப்பு தவிர வேறு சில தனித்திறமைக
உள்ளன. அப்பா அஜீத் பாடகர் என்பதால் இவரும் சிறு வயதி
இருந்தே நன்றாக பாடுவாராம். ஏற்கனவே தமிழில்
மஞ்சள் வெயில் படத்தில் பின்னணி பாடிய ச
இப்போது மலையாளப் படங்களிலும் அ
போது பாடி வருகிறார். அதோடு நல்
ஓவியரான சந்தியா ஓவியம் வரைவ
தன் முக்கிய பொழுது போக்காக
கடைப்பிடித்து வருகிறார்.

நயன்தாராவை போட்டியாக நினைக்கவில்லை- த்ரிஷா

த்ரிஷாவும் நயன்தாராவும் சமகாலத்து நடிகைகள். நயன்தாரா ஐயா படத்திலும் த்ரிஷா லேசா லேசா படத்தில் அறிமுகமானார்கள். இருவருமே விஜய், அஜீத் என இரண்டு நடிகர்களுடன் ஒரே காலகட்டங்களில் டூயட் பாடி வந்தனர். இதனால் அந்த சமயத்தில் தனக்கு வர இருந்த சில வாய்ப்புகளை நயன்தாரா அபேஸ் பண்ணி விட்டதாக அப்போது திரைக்குப்பின்னால் த்ரிஷா கொடி பிடித்ததும் நடந்திருக்கிறது. ஆனால் இப்போது மீண்டும் நயன்தாரா பீல்டுக்குள் வந்திருப்பதால் அவர்களது தொழில் போட்டி தொடர்ந்திருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் இதுபற்றி த்ரிஷாவைக் கேட்டால் நயன்தாராவுக்கும் எனக்குமிடையே தொழில் போட்டி ஒரு சமயத்தில் நடந்தது உண்மைதான். ஆனால் இப்போது நான் யாரையுமே போட்டியாக நினைக்கவில்லை. காரணம் நானும் சினிமாவுக்கு வந்து 10 ஆண்டுகளாகி விட்டது. அதனால் இனி போட்டி என்பதை தவிர்த்து இன்னும் எனக்குள் இருக்கிற திறமையை வெளிக்கொண்டு வரக்கூடிய கதைகளில் நடிக்க வேண்டும் என்பதில்தான் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. மேலும் இப்போது நயன்தாரா, தமன்னா உள்ளிட்ட நடிகைளெல்லாம் எனது உயிர்த்தோழி களாகி விட்டனர். அதனால் எங்களுக்குள் போட்டி பொறாமை என்கிற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் த்ரிஷா.

ஆக்
சொ

ஆக்ஷன் கிங் அர்ஜுனின் மகள் ஐஸ்வர்யா பட்டத்து யானை படத்தின் மூலம் சினிமாவில்
திட்டமிட்டு சினிமாவுக்கு வரவில்லை. என் பிரண்ட் விஷால் கேட்டுக்கொண்டதாலும் கதை
அப்பா எப்பவுமே தலையிட மாட்டார். அதுமாதிரி இதற்கும் ஒப்புக் கொண்டார். ஒரு பெரி
சதவிகிதம் பொறுப்பு இருக்கிறது. அவர் பெயருக்கு களங்கம் ஏற்படாத வகையில் நடந்து
என்று எல்லோரும் பாராட்டும்படி நடிப்பேன். அப்பா மாதிரி சண்டைக் காட்சிகள் நிறைந்த
ஆசையாக இருக்கிறது. நிறைய ஐஸ்வர்யாக்கள் இருப்பதால் எனது பெயரை ஐஸ்வர்யா அ

ரீமேக் சாத்தியமா...?

சமீபகாலமாக ரீ-மேக் படங்கள் தமிழ் சினிமாவில் அதிகமாகிக் கொண்டே வருகிறது. அந்த தேர் இயக்கத்தில் ரஜினி, கமல், ஸ்ரீபிரியா, ஜெயச்சித்ரா ஆகியோரது நடிப்பில் கடந்த 1978 ஆம் ஆண்டு வெளியாகி டான படம் இளமை ஊஞ்சலாடுகிறது. இப்படம் இப்போது மீண்டும் ரீ-மேக் செய்யப்பட இருக்கிறது. இதில் நடிக்க னுஷ் மற்றும் சிம்புவின் பெயர்கள் அடிபடுகிறது. இதில் ரஜினி கேரக்டரில் தனுஷும் கமல் கேரக்டரில் சிம்புவையும் ரக்டரில் ஸ்ருதிஹாசனையும் நடிக்க வைக்க எண்ணி இருக்கிறார்கள். இதுதொடர்பாக இருவரிடமும் பேச்சுவார்த்தை தாக கூறப்படுகிறது. அதேசமயம் என்னதான் தனுஷ் - சிம்பு இருவரும் நாங்கள் நண்பர்கள் என்று காண்டாலும் தொழில் ரீதியாக அவர்களுக்கு இடையேயான போட்டி தொடர்ந்து கொண்டுதான் இருவரும் தங்களது படங்களில் மாறி மாறி பஞ்ச் டயலாக்குகளை அடுக்கி க தாக்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் இவர்கள் இருவரும் இப்படத்தில் க்கொள்வார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேசமயம் சமீபத்தில் தனது விழாவுக்கு தனுஷை அழைத்திருந்தார் சிம்பு. இவர்களுக்கான பகை மறந்துவிட்டது என்றும் இப்படத்தில் சேர்ந்து நடிப்பார்கள் என்றும் றது. விரைவில் இப்படம் பற்றிய அறிவிப்புகள் லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடும் லோரன்ஸ்!

நடிக்க வைத்த லோரன்ஸ் அப்படத்தின் ணை நடிக்க வைத்திருந்தார். அதே ஞ்சனா படத்தில் லட்சுமிராய் மற்றும் மூன்றாம் பாகமான கங்கா படத்துக்கு தமார் நடித்தது போன்ற வேடத்தில் கேட்டு வருகிறார். ஆனால் கதையைக் ரன்ஸுக்கு சாதகமான பதிலை

சொந்த வீட்டில் குடியேறிய சிம்பு!

கடந்த 1987 இல் குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமானவர் சிம்பு. அதன் பின் 2002இல் காதல் அழிவதில்லை படத்தில் கதாநாயகனாக பிரவேசித்தவர் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தையும் பிடித்துள்ளார். இந்நிலையில் இதுவரை தந்தை டி.ஆர். வீட்டில் வசித்து வந்த அவர் இப்போது தன் சொந்த வருமானத்தில் புதிய வீடு ஒன்றை கட்டி, அதில் பெற்றோர், தம்பி, தங்கையுடன் குடியேறியுள்ளார். மேலும் இதுவரை அவர்கள் குடியிருந்த பழைய வீட்டில் டப்பிங், எடிட்டிங் தியேட்டர், ரெக்கோர்டிங் ஸ்டுடியோ ஆகியவற்றை வைத்துள்ளார்.

படம்:- ஜீன்ஸ்
இசை :- ஏ.ஆர்.ரஹ்மான்
பாடலாசிரியர்:- வைரமுத்து
பாடியவர்கள்:- ஹரிஹரன், அனுராதா ஸ்ரீராம்

++++++++++++++++++++++++++++

அன்பே அன்பே கொல்லாதே
கண்ணே கண்ணைக் கிள்ளாதே
பெண்ணே புன்னகையில்
இதயத்தை வெடிக்காதே
ஐயோ உன்னசைவில் உயிரைக் குடிக்காதே
(அன்பே அன்பே)

பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன்
அடடா பிரம்மன் கஞ்சனடி
சற்றே நிமிர்ந்தேன் தலை சுற்றிப் போனேன்
ஆஹா அவனே வள்ளலடி

மின்னலைப் பிடித்து தூரிகை சமைத்து
ரவிவர்மன் எழுதிய வதனமடி
நூறடிப் பளிங்கை ஆறடியாக்கி சிற்பிகள்
செதுக்கிய உருவமடி
இதுவரை மண்ணில் பிறந்த பெண்ணில்
நீதான் நீதான் அழகியடி
இத்தனை அழகும் மொத்தம் சேர்ந்து
என்னை வதைப்பது கொடுமையடி...
(அன்பே அன்பே)

கொடுத்து வைத்த பூவே பூவே
அவள் கூந்தல் மணம் சொல்வாயா
கொடுத்து வைத்த நதியே நதியே
அவள் குளித்த சுகம் சொல்வாயா
கொடுத்து வைத்த கால் கொலுசே
காலளவைச் சொல்வாயா
கொடுத்து வைத்த மணியே
மாரழகை சொல்வாயா

அழகிய நிலவில் ஆக்சிஜன் நிரப்பி அங்கே
உனக்கொரு வீடு செய்வேன்
உன்னுயிர் காக்க என்னுயிர் கொண்டு
உயிருக்கு உயிரால் உறையிடுவேன்
அஹா.... ஹா... ஹா... ஹா... அஹஹா...

மேகத்தைப் பிடித்து மெத்தைகள் அமைத்து
மெல்லிய பூ உன்னைத் தூங்க வைப்பேன்
தூக்கத்தில் மார்பில் வேர்க்கின்ற போது நட்சத்திரம்
கொண்டு நான் துடைப்பேன்
பால் வண்ணப் பறவை குளிப்பதற்காக
பனித்துளியெல்லாம் சேகரிப்பேன்
தேவதை குளித்த துளிகளை அள்ளித்
தீர்த்தம் என்றே நான் குடிப்பேன்
(அன்பே அன்பே) (2)

மல்டி ஹீரோ படங்களில் விதார்த்!

நடிகர் விதார்த் நடித்த முதல் இடம், கொள்ளைக்காரன் படங்களின் தோல்வி காரணமாக அவரது மார்கெட் சரிந்து விட்டது. அதனால் பீல்டில் தன்னை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ள அவர் ஜன்னல் ஓரம் படத்தில் பார்த்திபன், விமலுடனும் சுழுகு படத்தில் நடித்த கிருஷ்ணாவுடன் இணைந்து விழித்திரு படத்திலும் நடித்து வருகிறார். இதே ரூட்டை இனி தொடரப் போவதாகவும் சினிமா வட்டாரங்களில் கூறி வருகிறார்.

ஷன் பிரின்சஸ் ஆவேன்: ல்கிறார் அர்ஜுன் மகள்

ல் அறிமுகமாகிறார். அவர் அளித்துள்ள பேட்டியில்; நான் தை பிடித்திருந்ததாலும் நடிக்கிறேன். என் சுதந்திரத்தில் பரிய நடிகரின் மகள் என்பதால் எனக்கு பத்தாயிரம் து கொள்வேன். ஆக்ஷன் கிங் மகள் ஆக்ஷன் பிரின்சஸ் ந்த படத்தில் நடிப்பேன். அவரது இயக்கத்தில் நடிக்கவும் அர்ஜுன் என்று வைத்துள்ளேன் என்றார்.

புதையலைப் பார்த்தீர்களா!

சந்தையில் வியாபாரத்தை முடித்துவிட்டு, பணத்தைக் கட்டுக்கட்டாகக் கட்டிக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டார் அருணாச்சலம்.

இதைக் கவனித்த ஒரு வியாபாரி, ஐயா, இவ்வளவு பணத்தைத் தனியாக எடுத்துக் கொண்டு போகாதீர்கள். துணைக்கு நமது ஆட்கள் நான்கு பேரை அழைத்துக்கொண்டு செல்லுங்கள் என்றார் கவலையுடன்.

அருணாசலம் இதைக் கேட்கவில்லை- எந்த ஆபத்து வந்தாலும் நான் சமாளித்து விடுவேன். நீங்கள் பயப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தைரியமாகக் கிளம்பினார்.

நன்றாக இருட்டிவிட்டது. காட்டுக்குள் தனியாகச் சென்றுகொண்டிருந்தார் அருணாச்சலம்.

சரக் சரக்கென்று பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்த அவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். தடித்தடியாக நான்கு திருடர்கள் அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். அருணாச்சலத்துக்கு ஒரு நிமிடம் என்ன செய்வதென்றே புரியவில்லை. கை, கால்கள் நடுங்கின.

சற்று நிதானித்து, பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், நண்பர்களே, நீங்களும் புதையலைத் தேடித்தான் வந்தீர்களா? என்று ஒரே போடாகப் போட்டார்.

திருடர்கள் குழம்பிப் போனார்கள். யோசிக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களில் ஒருவன், என்ன சொல்கிறாய்? எங்கே புதையல் இருக்கிறது? என்று கேட்டான்.

சரியாப் போச்சு. உங்களுக்கு விஷயமே தெரியாதா? சந்தைக்கருகில் ஒரு சாமியார் இருக்கிறார். காட்டுக்குள் ஒரு பானைத் தங்கக்காசுகள் புதைத்து வைக்கப்பட்டு இருக்கிறதாம். சாமியாரிடம் ஆசி பெற்றால், புதையல் இருக்கும் இடத்தைச் சொல்வாராம். அதனால்தான் நீங்கள் புதையலைத்தான் தேடி வந்திருப்பீர்கள் என்று நினைத்துக் கொண்டேன் என்று அருணாச்சலம், அளந்துவிட்டார்.

இதைக் கேட்டதுதான் தாமதம், திருட்டுக்கும்பல், அருணாச்சலத்தை விட்டுவிட்டு இல்லாத சாமியாரைத் தேடி ஓடியது.

சமயோசித புத்தியால் இப்போது தப்பித்து விட்டோம், இனிமேல் இதுபோலப் பணத்தைக் கொண்டு வரும்போது தனியாக வரக்கூடாது. வியாபாரி கூறியது போல ஆள் துணையுடன்தான் வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டே அருணாச்சலம் நடையைக் கட்டினார்

நீரில் நடக்கும் பூச்சி!

இப்பூச்சியை ஆங்கிலத்தில் "வோட்டர் ஸ்டிரைடர்" அல்லது "பான்ட்ஸ்கேட்டர்" என்று கூறுவர். இதன் கால்களின் கீழே மெல்லிய மயிர் போன்ற உறுப்பு காணப்படும். இதனால், நீர்பரப்பு இதற்கு ஒரு இறப்பர் தோல் போன்ற உணர்வைக் கொடுக்கிறது. நீர்ப்பரப்பின் மேல்படும் இப்பூச்சிகளின் கால் பரப்பு, கண்ணுக்கு தெரியாத மிகச் சிறு பள்ளங்களை உண்டாக்கும். ஆனால், இவற்றின் கால்கள் பள்ளத்தின் வழியே நீரினுள் செல்லாது. இப்பூச்சியின் முன்னங்கால்கள் இரை பிடிக்கவும், மைய மற்றும் பின்னங்கால்கள் நீரில் நடக்கவும் பயன்படுகிறது. ஆனால், இதற்கு நீந்தத் தெரியாது. இவற்றின் மேல் ஒரு சொட்டு நீர் விழுந்தாலும் திக்கு முக்காடிப் போகும். இவற்றின் உணவு இறந்த மற்றும் இறக்கும் தறுவாயிலுள்ள பூச்சிகள். இவை இரையைப் பிடித்து தன் கூரிய அலகை உடம்பினுள் விட்டு உறிஞ்சி உணவை சக்கையாக்குகிறன. ஒரே சமயத்தில் நூறு முட்டைகள் இடும். இம் முட்டைகள் ஒரே வாரத்தில் குஞ்சுகளாக பொரித்துவிடும்.

காந்தியின் நற்குணங்கள்

மகாத்மா காந்தியின் மீது கொண்ட மரியாதை காரணமாக 120 நாடுகளில் அவரது உருவம் பொறித்த தபால் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. 70 நாடுகளில் காந்திக்கு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் மட்டும் 40 இடங்களில் காந்திக்கு சிலைகள் வைக்கப் பட்டுள்ளன.



காந்திக்கு 9 வயதான போது அவரது தாயார், "மகனே ஒருவர் துன்பத்தில் இருந்தால் அவருக்கு ஏதேனும் மாற்றத்தை உருவாக்கி அவரை முன்னேற்றினால் கடவுள் அவருக்கு சிறப்பாக அருள் புரிவார்" என்றார். இதை காந்தி அப்படியே கடைபிடித்தார்.

அந்த அறிவுரையை மாணவர்களே நீங்கள் கடைபிடிப்பீர்களா? காந்திபோல யாராவது தலை சிறந்த அரசியல்வாதியாக வர விரும்புகிறீர்களா? மாணவர்களே...! நீங்கள் நற்பண்புகளுடனும், மன உறுதியுடனும், ஆராய்ச்சி மனப்பான்மையுடனும் இருக்க வேண்டும். உங்கள் இலட்சியம் ஆகாயத்தில் பறக்கும் அளவுக்கு உயரமாக இருக்க வேண்டும். இலட்சியம் தவழ்வது போல இருக்கக் கூடாது.

காந்தியின் நற்குணங்கள், அமைதி, ஒருமைப்பாடு ஆகியவை உள்ளிட்ட காந்தியின் கொள்கைகளை மாணவர்கள் கடைபிடிக்க வேண்டும்.

இந்த வார குட்டீஸ்

பெயர்:- மிதுர்ஷன்
பெற்றோர்:- ரஜினிகாந்த், தேவிகா
இடம் :- ஹெமிங் போர்ட் பி.எல்.டிவிஷன் பரகடுவ.

பெயர்:-எஸ்.சஜீவன்
பெற்றோர்:- சுரேஷ், கலைச்செல்வி
இடம் :- சென்.ஜோன் டில்லரி, நோர்வூட்

உங்கள் செல்லங்களின் புகைப்படங்களும் இடம்பெற வேண்டுமானால் உங்கள் விபரங்களை உதயசூரியன், இந்த வார குட்டீஸ் என குறிப்பிட்டு எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது thinaupcountry@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். மேலதிக தொடர்புகளுக்கு 0112540695.

உங்களுக்குத் தெரியுமா?

★ பறவைகளில் புறா மட்டுமே நீரை உறிஞ்சிக் குடிக்கும்.
★ கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
★ புறா ஒய்வெடுக்காமல் 1000 கி.மீ. வரை பறக்கும்.
★ நீண்ட நேரமும், நீண்ட தூரமும் பறக்கும் ஒரே பறவை புறா.
★ மனிதன் ஆயுளில் சுமார் 23 வருடம் தூங்குகிறான்.
★ பிறந்த குழந்தை நாளொன்றுக்கு சுமார் பதினெட்டு மணி நேரம் வரை தூங்குகிறது.
★ மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையுள்ள குழந்தைகள் நாளொன்றுக்கு பதினொறு மணி நேரம் வரை தூங்குகின்றனர்.

அன்பார்ந்த தம்பி, தங்கைகளே 'சிகரம்' பகுதி உங்களுக்கானது. உங்கள் படைப்பாற்றலுக்குக் களம் கொடுக்கக் காத்திருக்கிறது. உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

வினாப்பத்திரம் 1

★ 1 njhlf;fk; 5 tiuahd tpdhf;fspy; jug;gl;l cUTld; nghUj;jKWk; thf;fpaj;jpd; fPo; NfhbLf.

1. அருகே உள்ள உரு

(1) எல்லோராலும் வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களில் ஒன்று.
(2) போக்குவரத்திற்காக பயன்படும் மிருகங்களில் ஒன்று.
(3) வெள்ளை நிறத்தில் காணப்படும் மிருகங்களில் ஒன்று.

2. இவ் வாகனம்

(1) தனியார் சொத்து.
(2) பொதிகளைக் கொண்டு செல்லும்.
(3) பிரத்தியேக பாதையில் செல்லும்.

3. அருகில் உள்ள படத்திற்கு பொருத்தமான வாக்கிய தொடர்கள்

(1) மேகம் கறுக்கின்றது, இடி மின்னல் வருகின்றது, மழை பொழிகின்றது.
(2) இடி மின்னல் வருகின்றது, மேகம் கறுக்கின்றது, மழை பொழிகின்றது.
(3) மேகம் கறுக்கின்றது, மழை பொழிகின்றது, இடி மின்னல் வருகின்றது.

4. பின்வரும் உரு



(1) நீர், பயணம், சாரதி.
(2) கடல், பயணம், விமானி
(3) நீர், பயணம், மாலுமி

5. பின்வரும் உரு

(1) தேன்
(2) சுவை
(3) மலர்

★ xU gz;izapy; ,Ue;j MLfs;> Nfhopfs;> thj;Jf;fs;> gd;wpfs;> Kay;fs; vd;gd njhlu;ghd tpguq;fs; fPNo jug;gl;Ls;sd. mtw;iw mtjhdpj;J 1 njhlf;fk; 10 tiu apyhd tpdhf;fSf;F tpil jUf.

MLfs;15>Nfhopfs;23>thj;Jf;fs;16>gd;wpfs;18>Kay;fs;12

6. பண்ணையில் உள்ள மிருகங்களின் எண்ணிக்கை யாது?
(1) 84 (2) 45 (3) 38

7. பண்ணையில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?
(1) 84 (2) 45 (3) 39

8. பண்ணையில் உள்ள பிராணிகளில் நான்கு கால்கள் உள்ளவை எத்தனை?
(1) 33 (2) 45 (3) 39

9. பறவைகளின் எண்ணிக்கைக்கும் மிருகங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசம் யாது?
(1) 12 (2) 9 (3) 6

10. பண்ணையில் உள்ள பிராணிகளின் எண்ணிக்கைக்கும் மிருகங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசம் யாது?
(1) 39 (2) 29 (3) 26

★ 11Mk;> 12Mk; tpdhf;fspy; cs;s nrhy; tupirfspy; Vida nrhw;fSld; nghUe;jhj nrhy; ,lk;ngWk; nrhy; tupirapd; fPo; NfhbLf.

11. (1) மா, அன்னாசி, வாழை, பலா
(2) கத்தி, வாள், கோடரி, மண்வெட்டி
(3) நீலம், சிவப்பு, கறுப்பு, நிறம்

12. (1) உடுக்கு, தோற்கருவி, தவில்
(2) மீன், நண்டு, இறால், கணவாய்
(3) மா, நாவல், தேக்கு, புளி

★ fPNo cs;s vz;fspdJk; vKj;Jf;fspdJk; epiuia mtjhdpj;J tpdhf;fSf;F tpil jUf.

7	5	3	8	7	6	4	3	2	3	6	8	3	1	7
K	S	J	K	A	J	B	K	O	D	F	H	S	K	J

13. அதிக தடவை வந்துள்ள இலக்கம் எது?
(1) 7 (2) 3 (3) 8

14. அதிக தடைவை வந்துள்ள எழுத்து யாது?
(1) K (2) J (3) S

15. இரண்டாலும் மூன்றாலும் வகுபடும் எண்ணை சுற்றி வட்டமிடுக.

★ fPNo cs;s 3 $w;Wf;fspy; xd;W gpioahdJ. mjidj; njhpe;J mjd; ,yf;fj;ij milg;Gf;Fs; vKJf.

16. (1) குயில் கூடு கட்டியது
(2) காகம் அடைகாத்து குஞ்சு பொரித்தது
(3) குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது (.....)

17. (1) அரிச்சந்திரன் சத்தியத்தைக் காத்தான்
(2) ஔவையார் திருக்குறளை இயற்றினார்
(3) பாரதியார் சிறந்த கவிஞர் (.....)

18. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பஸ்ஸில் ஆண்களும் பெண்களுமாக 125 பேர் பயணம் செய்தனர். இவர்களில் ஆண்கள் 69 பேர் எனின், பெண்கள் எத்தனை பேர்?
(1) 39 (2) 56 (3) 65

19. இவ் பஸ்ஸில் பெண்களை விட, எத்தனை ஆண்கள் அதிகமாக பயணம் செய்தனர்?
(1) 13 (2) 17 (3) 39

★ xU fpNyhfpuhk; Nff; jahupf;f 8 Kl;ilfs; Njit. xU Kl;ilapd; tpiy &gh 18.00 vdpd;.

20. 5 கிலோகிராம் கேக் தயாரிக்க எத்தனை முட்டைகள் தேவைப்படுகின்றது?
(1) 48 (2) 40 (3) 32

21. ஒரு கிலோகிராம் கேக் தயாரிப்பதற்கான முட்டைகளை வாங்குவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?
(1) ரூபாய். 548.00 (2) ரூபாய். 856.00 (3) ரூபாய். 720.00

22. 832 பயிற்சிக் கொப்பிகள் நான்கு வகுப்புக்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன எனின், ஒரு வகுப்புக்கு கொடுக்கப்பட்ட கொப்பிகள் எத்தனை ?
(1) 208 (2) 28 (3) 218

23. ஒரு தடவைக்கு 3 மாத்திரைகள் வீதம் நாள் ஒன்றுக்கு 3 தரம் மருந்து உட்கொள்ளும் நோயாளிக்கு 3 நாட்களுக்குத் தேவையான மாத்திரைகள் எத்தனை?
(1) 9 (2) 18 (3) 27

★ Mq;fpyr; nrhw;fs; xt;nthd;wpYk; cs;s vKj;Jf;Fupa vz; ngWkhdq;fis mtjhdpj;J ntw;wplj;jpy; tuNtz;ba vz;fisf; nfhz;l tpiliaj; njupTnra;f.

24. HAVE WIND MEAN LAND

1539 6084 7958 .....

(1) 9584 (2) 2584 (3) 2582

25. YEAR CAKE AWNE BANK

1325 4203 2663 .....

(1) 9584 (2) 2584 (3) 2582

26. "தந்தம்" என்ற சொல் இலக்கங்களின் மூலம் எழுதப்பட்ட சரியான விடை
(1) 2323 (2) 4124 (3) 5351

★ jug;gl;l $w;W cz;iknadf; nfhz;L fPNo cs;s tpilfspy; nghUj;jkhd thf;fpaj;ij njupT nra;J mjd; fPo; NfhbLf.

27. படித்தவர்கள் அனைவரும் ஒழுக்கமானவர்கள் அல்லர்
(1) படித்தவர்களில் சிலர் ஒழுக்கம் அற்றவர்கள்.
(2) படிக்காதவர்கள் எவரும் ஒழுக்கமானவர்கள் அல்லர்.
(3) படிக்காதவர்கள் அனைவரும் ஒழுக்கமானவர்கள்.

28. மகிழ்சிகரமான வகுப்பறை என்பதை நன்கு விபரிக்கும் கூற்று
(1) ஆசிரியர் கற்பித்துக் கொண்டே இருப்பார்.
(2) மாணவர்கள் கற்றுக் கொண்டிருப்பார்கள்.
(3) மாணவர்கள் ஆர்வத்துடன் செயற்படுவர்.

★ ntw;wplj;jpw;Fg; nghUj;jkhd nrhy;;iy> jug;gl;Ls;s tpilfspypUe;J njupT nra;f.

29. உணர்தல் - தோல் எனின், பார்வை - .....
(1) காது (2) தொலைக்காட்சி (3) கண்

30. பதநீர் - பனங்கட்டி எனின், கரும்புச்சாறு - .....
(1) தேன் (2) பழரசம் (3) சீனி

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி விளாப்பத்திரம் பகுதி - II

19.03.2012 md;W fy;tpf;Fuypy; ntspahfp ,Ue;j juk; - 5 Gyikg;guprpy; khjphp tpdhg;gj;jpuk; gFjp II ,w;Fupa tpilfs;.

(01) 1. அருவி 2. இயற்கை 3. கனிகள் 4. மரங்கள்
5. பச்சைக் கம்பளம் 6. வனம் / காடு / இயற்கைக்காட்சி
(02) 1. விளக்கு 2. பணி
(03) 1. பறவை ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளது
2. நட்சத்திரங்கள் வானில் மின்னுகின்றன
(04) 1. பயனற்ற கல்வி / அனுபவமற்ற கல்வி 2. நிறைவேறுதல்
(05) 1. திரும்பத் திரும்ப முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்
2. இறைவனே என்றும் நம்பிக்கைக்குரியவன்
(06) 1. ! . (வியப்புக்குறி. முற்றுப்புள்ளி) 2. ! ? (வியப்புக்குறி, வினாக்குறி)
(07) 1. மோகன் நேற்றுப் பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தான்.
2. பாரதி மகா வித்தியாலயம் கல்வியிற் சிறந்து விளங்கியது.
(08) 1. Game 2. School 3. Hospital
(09) 1. மாலை வணக்கம் 2. தயவு செய்து இங்கே வரவும்
3. வெளியே கோப வேண்டாம்
(10) 1. மாமரம் 2. தென்னைமரம்

(11)	3	(12)	1	(13)	4	(14)	3
(15)	4	(16)	3	(17)	4	(18)	2
(19)	3	(20)	2	(21)	2	(22)	2
(23)	3	(24)	2	(25)	3	(26)	3
(27)	1	(28)	4	(29)	3	(30)	4
(31)	2	(32)	1	(33)	2	(34)	2
(35)	3	(36)	4	(37)	2	(38)	2
(39)	12 விளம்புகள், 6 முகங்கள்			(40)	10145	(41)	5625
(42)	1	(43)	3	(44)	2	(45)	3
(46)	3	(47)	ரூபா 18.75	(48)	150மாணவர்கள்	(49)	நேரம் 11.55
(50)	34cm	(51)	செவ்வாய்	(52)	ரூபா 9.50	(53)	6750ml
(54)	4/10	(55)	சதுரமுகி				

(56) சரியான எழுவாய் பயனிலைகளுடன் கருத்து தொடர்புடைய ஆறு வாக்கியங்கள்

விஞ்ஞானம் பகுதி - I இற்குரிய விடைகள்

12.03.2012md;Wfy;tpf;Fuypy;ntspahfp,Ue;jtpQ;Qhdg;gj;jpuk;gFjpI,w;Fupatpilfs;.

(01)	4	(02)	2	(03)	4	(04)	2
(05)	3	(06)	3	(07)	4	(08)	2
(09)	4	(10)	1	(11)	3	(12)	2
(13)	2	(14)	3	(15)	3	(16)	3
(17)	1	(18)	2	(19)	2	(20)	1
(21)	2	(22)	4	(23)	3	(24)	3
(25)	2	(26)	1	(27)	4	(28)	3
(29)	2	(30)	2				

வரலாறு பகுதி - I இற்குரிய விடைகள்

19.03.2012md;Wfy;tpf;Fuypy;ntspahfp,Ue;jtuyhWg;gj;jpuk;gFjpI,w;Fupatpilfs;.

(01)	1	(02)	3	(03)	3	(04)	4
(05)	1	(06)	1	(07)	3	(08)	1
(09)	4	(10)	1	(11)	2	(12)	2
(13)	1	(14)	4	(15)	2	(16)	4
(17)	3	(18)	3	(19)	1	(20)	1
(21)	1	(22)	2	(23)	4	(24)	1
(25)	1	(26)	2	(27)	1	(28)	4
(29)	1	(30)	2	(31)	1	(32)	1
(33)	2	(34)	2	(35)	3	(36)	1
(37)	3	(38)	2	(39)	1	(40)	3

க. ரவிந்தரா
யாழ். இந்துக் கல்லூரி

வரலாறு History 2012

தரம் : 10, 11 மாணவர்களுக்கான
முதலாம் தவணைக்குரிய மாதிரி வினாப்பத்திரம்

19.03 2012 அன்று வெளியாகிய வரலாறு பகுதி - I இன் தொடர்ச்சி .....

26) எம்மன்னனின் ஆட்சியின் பின் இலங்கை, நாயக்கர் வம்சமானது?
1.கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் 2.வீரபராக்கிரமபாகு நரேந்திரன்
3.ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 4.தர்மபாலன்

27) பின்வருவோரில் பெண்வேடம் அணிந்து நாட்டை விட்டுத் தப்பி ஓடிய,ரஷ்யத் தலைவர் யார்?
1.கெரன்ஸ்கி 2.ட்ரொட்ஸ்கி 3.லெனின் 4.ஸ்டாலின்

28) பின்வருவனவற்றில் மீயூரனின் தீர்வாக அமையாதது எது?
1. வரிஏல விற்பனை முறையை அகற்றல்
2. புதிதாக விதிக்கப்பட்ட வரிகளை நீக்குதல்
3. அவுமில்தார்களை நீக்கி, உள்நாட்டு அதிகாரிகளை நியமித்தல்
4. இராஜகாரிய முறையை நீக்குதல்

29) இலங்கையின் முதலாவது பிரித்தானிய தேசாதிபதியையும் இறுதி ஒல்லாந்த தேசாதிபதியும் முறையே குறிப்பிடும் விடை
1. பிரட்ரிக் நோர்த் - பன் ஏங்கல் பெக் 2. தோமஸ் மெய்ட்லன்-பிரட்ரிக் நோர்த்
3. பன்ஏங்கல்பெக்-பிரட்ரிக் நோர்த் 4. றொபேட் பிரவுன்றிக்-பன்ஏங்கல்பெக்

30) பின்வருவனவற்றில் 1818 கிளர்ச்சிக்கான உடனடிக்காரணமாக அமைந்தது எது?
1. பிரித்தானிய மன்னரை மக்கள் விரும்பாமை 2. ஹஜ்ஜி மிக்காரின் நியமனம்
3. பிக்குகளை புறக்கணித்தமை 4. பௌத்தம் அழிவடைந்தமை

31) பின்வருவோரில் முதலாவது சுதந்திரப் போராட்டத் தியாகிகளை மட்டும் குறிப் பிடும் விடை எது?
1. மடுகல்ல, திம்புலான, எல்லேபொல
2. மடுகல்ல, திம்புலான , புரன்அப்பு
3. திம்புலான, பூட்டாவேராட்ராவ, புரன்அப்பு
4. கொங்கொலகொட பண்டா, புரன் அப்பு, டிங்கிரிரால

32) 'உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்க மாட்டேன்' இக்கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
1. கெப்பட்டிப்பொல 2. மடுகல்ல 3. புரன் அப்பு 4. பிரட்றிக்நோர்த்

33) இலங்கைக்கு வந்து கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னனைச் சந்தித்த முதலாவது பிரித்தானிய தூதுவர் யார்?
1. இரால்பிச்ட் 2. ஜோன்பைபஸ் 3. கியூப்பொய்ட் 4. இலிங்காஸ்டர்

34) இலங்கையருக்கு முதன்முதலில் வாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்பு பின்வருவனவற்றில் எது?
1. கோல்புறூக் 2. குறூமக்கலம் 3. டொனமூர் 4. சோல்பரி

35) நிரல் I இல் உள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடையை நிரல் II இல் இருந்து தொடர்பு செய்தால் கிடைக்கும் விடை

நிரல் I	நிரல் II
1. படித்த இலங்கையர் தெரிவு	A 2ஆம்மனிங்
2. மேல் மாகாணத்தமிழர் அங்கத்துவம்	B மனிங்
3. பிரதேசவாரி பிரதிநிதித்துவம்	C சோல்பரி
4. பாராளுமன்றம் அறிமும்	D மக்கலம்

1.A,B,C,D 2. D,A,C,B 3. D,A,B,C 4. A,B,D,C

36) இலங்கையின் ஆறாவது மாகாணத்தையும் அதை உருவாக்கியவரையும் முறையே குறிப்பிடும் விடை எது?
1. வடமேல் மாகாணம் - கொலின் கம்பலின்
2. வடமத்திய மாகாணம் - வில்லியம் கிறகரி
3. ஊவா மாகாணம் - வில்லியம் கிறகரி
4. சப்பிரமுவா மாகாணம் - ஆதர்கோடன்

37) இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை முற்றாக அழிவடையக் காரணம் ?
1. சரியான பராமரிப்பு இன்மை 2. வெண்பூச்சி நோய்
3. ஹெம்லியா வெஸ்ராரிக் நோய் 4. தேயிலையின் அறிமுகம்

38) 1824 இல் கண்னொருவை என்னும் இடத்தில் தனியார் கோப்பித் தோட்டம் ஒன்றை ஆரம்பித்தவர்
1.ஜோர்ஜ் கெரின் போர்ட் 2. எட்வட் பான்ஸ்
3. பிரட்றிக் நோர்த் 4. கொன்றிமூவர்

39) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பத்திரிகை
1. உதயதாரகை 2. லங்காலோகய 3. தினமின 4. த பிரிட்டிஸ் நியூஸ்

40) யாழ்ப்பாணப் பகுதியில் கிறிஸ்தவ மதம் பரப்பும் பணியில் ஈடுபட்ட மிஷனரி எது?
1. லண்டன் மிஷனரி 2. பப்டிஸ் மிஷனரி
3. அமெரிக்கமிஷன் 4. வெஸ்லியன் மிஷனரி

பிரதம ஆசிரியர்
ம.மிரியந்தன்

விஞ்ஞானம் Science 2012

தரம் : 10, 11 மாணவர்களுக்கான
முதலாம் தவணைக்குரிய மாதிரி வினாப்பத்திரம்

பகுதி - II - A

(01) கட்டமைப்பு வினா

இடைவெளிகளை நிரப்புக

தாவரப்பாகுபாடு

- பூக்கும் தாவரம்
  - இயல்புகள்
    1. .....
    2. .....
  - பூக்காததாவரம்
    - ஜிம்னோஸ்பேம் உ - ம் 4.....
      5.....
    - பிரிவு 3.....
      - பிறையோபைற்றா
        உ - ம் 6 .....
      - தெரோபைற்றா
        இயல்பு 7. .....
        8. .....
      - பிரிவு 9.....
        உ - ம் 10.....

II. அங்கிகளை அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் வெவ்வேறு கூட்டங்களாக வகைப்படுத்தல் பாகுபாடாகும்.

1) எவ்வியல்பு காரணமாக நுண்ணங்கிக் கூட்டத்தை ஏனைய அங்கிகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டலாம்?
.....

2) தாவரக் கூட்டத்திற்கு மட்டும் உரிய சிறப்பியல்பு யாது?
.....

3) முள்ளந்தண்டுளிகளை முள்ளந்தண்டிலிகளில் இருந்து வேறுபடுத்தும் பிரதான இயல்பு யாது?
.....

4) முள்ளந்தண்டுகள் பற்றிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

விலங்குக்கூட்டம்	விலங்குகள் வாழும் சூழல்	விலங்குக் கூட்டத்தை அறிய உதவும் இயல்பு
a) மீனினம்		
b) உபயவாழிகள்		
c) பறவைகள்		

5) இயற்கை முறைப் பாகுபாட்டை அறிமுகஞ் செய்தவர் யார்?
..... (10 X 1.5 = 15 புள்ளிகள்)

பகுதி - II A - அமைப்புக் கட்டுரை

(02) A) உலகின் உற்பத்தியாக்கி என அழைக்கப்படுவது தாவரமாகும். இத்தாவரங்கள் ஒளித்தொகுப்பின் மூலம் சக்தியைச் சேமிக்கின்றன.

1) ஒளித்தொகுப்பு என்றால் என்ன ?
.....
.....
.....

(தொடரும்)

S.V. பாலமுரளி
மு. கோட்டை கட்டியகுளம்
அ.த.க. பாடசாலை

கணிதம் 2012
Mathematics

தரம் : 11 மாணவர்களுக்கான
முதலாம் தவணைக்குரிய மாதிரி வினாப்பத்திரம்

கடந்த 12.03.2012 அன்று வெளியாகிய 1ஆம் தவணைக்கான கணிதபாட வினாப்பத்திரத்திற்கான விடைகள்

பகுதி : I

01) $6\sqrt{6}$ 02) $1\frac{1}{3}$ (03) (-7) (4) $\overline{1}.1318$

05) $718.66cm^3$ 06) $\overline{2}.6286$ 07) $51.33cm^2$ (8) $\sqrt{63}$

09) $\overline{3}$ அல்லது (-3) 10) $\log_3 \frac{1}{27} = (-3)$ (10 x1 = 10 புள்ளிகள்)

11) அறுகோணி வடிவ குறுக்கு வெட்டின் பரப்பளவு = $60cm^2$ (1 புள்ளி)
திண்ம கனவளவு = 60 x 100
= $6000cm^3$ (1 புள்ளி)

12) $x^3 + 3x^2(1/x) + 3x(1/x)^2 + (1/x)^3$ (1 புள்ளி)
$= X^3 + 3X + 3/X + (1/X)^3$ (1 புள்ளி)

13) இவ்வினா அச்சிடப்படும் போது சிறு தவறு ஏற்பட்டுள்ளது.
திருத்தப்பட்ட வினா வருமாறு



முக்கோணி LMP இன் பரப்பளவு $20cm^2$ எனின், இணைகரம்LRMO இன் பரப்பளவைக் காண்க.

இவ் வினாவிற்கான விடை

இணைகரம் LMNO இன் பரப்பளவு = $40\ cm^2$ (LM பொது அடி, ML // PO)
இணைகரம் LRMO இன் பரப்பளவு = $40\ cm^2$ (LO பொது அடி LO // RM)
(2 புள்ளி)

14) $\log_x 4 = 4 - 2$ (1 புள்ளி)
$x = 2$ (1 புள்ளி)

15) $(a+b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$
$27 = a^3 + b^3 + 3ab(a + b)$
$a^3 + b^3 = 9$ (1 புள்ளி)
} ஏதாவது ஒன்றுக்கு ஒரு புள்ளி

16) $9\sqrt{5} - 2\sqrt{5} + 7\sqrt{5}$
$= 14\sqrt{5}$

17) $\frac{4}{7\sqrt{2}} = \frac{2\sqrt{2}}{7}$

18) $20cm^2$ (1 புள்ளி) (ஒரே நேர்கோட்டில் அடியையும் பொது உச்சியைக் கொண்டமைந்ததுமான முக்கோணிகளின் பரப்பளவுகள் அவற்றின் அடி நீளங்களுக்கு விகித சமனானவை) (1 புள்ளி)

19) மொத்த மேற்பரப்பின் பரப்பளவு = $4\pi r^2$
$= 4 \times \frac{22}{7} \times 7 \times 7$
= $616\ cm^2$ (1 புள்ளி)
} ஏதாவது ஒன்றுக்கு ஒரு புள்ளி

(மெல்லிய உலோகத் தகட்டினால் ஆக்கப்பட்டதனால் அரைக்கோலத்தின் உள், வெளி ஆரைகள் ஒரே பருமனுடையவை என கருதலாம்)

20) $\log_4 \left[\frac{4^2 \times 5}{2^3}\right]$
$\log_4 10$
$= 1$ (1 புள்ளி)

21) இவ் வினா அச்சிடப்படும் போது V_1V_2 காண்க என தவறுதலாக அச்சிடப்பட்டது
திருத்தப்பட்ட வினா $V_1 : V_2$ காண்க.
$V_1 = 1/3\ a_1^2h$
$V_2 = 1/3\ a_2^2h$
} ஏதாவது ஒன்றுக்கு ஒரு புள்ளி
எனவே $V_1 : V_2 = a^2_1 : a^2_2$ (1 புள்ளி)

22) 7cm ஆரை உடைய சுற்றுருளையின் வளைமேற்பரப்பின் பரப்பளவானது 7cm ஆரை உடைய கோளத்தின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவிற்கு சமனானதாக இருக்கும்.
∴ மேற்பரப்பின் பரப்பளவு = $4\pi r^2$
$= 4 \times \frac{22}{7} \times 7 \times 7$
= $616cm^2$ (1 புள்ளி)
} இரண்டில் ஒன்றுக்கு ஒரு புள்ளி

23) $x^2 - 4 = (x-2)(x+2)$
$x^2 + 2x = x(x+2)$
பொ.ம.சி = $x(x-2)(x+2)$ (1 புள்ளி)
$= x(x^2 - 4)$ (1 புள்ளி)

24) முதலாம் கூம்பின் சாய் வுயரம் 5 x எனின்
இரண்டாம் கூம்பின் சாய் உயரம் 4x என அமையும்
முதலாம் கூம்பின் வளை மேற்பரப்பின் பரப்பளவு $A_1 = \pi rl = \pi r(5x)$
இரண்டாம் கூம்பின் வளை மேற்பரப்பின் பரப்பளவு $A_2 = \pi r(4x)$
} 1 புள்ளி
$A_1 : A_2 = 5 : 4$ (1 புள்ளி)

25) $5^{5x+1} = 5^{-3(x+5)}$ (1 புள்ளி)
$5x + 1 = -3x - 15$
$x = (-2)$ (1 புள்ளி)

(26) $\lg 300 = \lg_3 + \lg 100$
$= 0.4771 + 2$
$= 2.4771$ (1 புள்ளி)
} இரண்டில் ஒன்றுக்கு ஒரு புள்ளி

(27) $\frac{(x-2)(x+2)}{(x+3)} \times \frac{(x+3)^2}{(x+2)(x+3)} = (x-2)$ (2 புள்ளி)

(28) அரியத்தின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவு = இரு முக்கோணங்களினதும் பரப்பளவுகள் + மூன்று செவ்வகங்களினதும் பரப்பளவுகள்
= (2x 1/2 x 4x3) + 10 (4 + 3 + 5)
= 12 + 120 = $132cm^2$ (1 புள்ளி)
(பைதகரஸ் தேற்றப்படி முக்கோணியின் மூன்றாம் பக்க நீளம் 5cm என்பதனை கணிக்கலாம்.)

(29) $\frac{1}{(a+1)} + \frac{1}{(a-1)} - \frac{3a}{(a-1)(a+1)}$
$= \frac{a - 1 + a + 1 - 3a}{(a-1)(a+1)}$
} இரண்டில் ஒன்றுக்கு ஒரு புள்ளி

$= \frac{-a}{(a-1)(a+1)}$ அல்லது $\frac{a}{(a+1)(1-a)}$
$= \frac{-a}{(a^2-1)}$
} இரண்டில் ஒன்றுக்கு ஒரு புள்ளி

(30) கூம்பு I அதிக உயரமுடையது (1 புள்ளி)

காரணம்



பைதகரஸ் தேற்றப்படி $h_1 = \sqrt{l^2 - r_1^2}$
இரண்டிலும் l சமன்
இங்கு $r_1 < r_2$
பைதகரஸ் தேற்றப்படி $h_2 = \sqrt{l^2 - r_2^2}$

எனவே $h_1 > h_2$

ஒரு தாயின் வாக்குமூலம்!

இது கொலை அல்ல வதம்!

2013 புத்தாண்டுத் தினத்திற்கு மறுதினம் அதிகாலை தனமல்வில பொலிஸ் நிலையம் யாரும் எதிர்பாராத வண்ணம் பரபரப்பை அப்பிக் கொண்டது.

நான் என் கணவனை கொன்று விட்டேன். என்னை கைது செய்யுங்கள் என கையில் அரிவாளோடு ஒரு பெண் வந்து நின்றாள்..!

அவளிடம் பதற்றம் இல்லை. கணவனை இழந்த கவலை இல்லை. கொலை செய்து விட்டோமே! என்ற வேதனை இல்லை.

அந்தப் பெண் வயலட். வயது 35. தனமல்வில சமகிபுர கிராமத்தைச் சேர்ந்தவள். அவளும் அவள் கணவனும் குடும்பத்தகறாரில் அடிக்கடி பொலிஸ் நிலையம் வந்து பழக்கப்பட்டவர்கள் என்பதால் பொலிஸாருக்கு அவள் நிலைமை புரிந்தது.

***

புத்தாண்டுத்தினம். எல்லா வீடுகளிலும் பாலும் மகிழ்ச்சியும் பொங்கியது. வெடிச் சத்தங்கள் முழங்கின. பலகாரங்களும் வாழ்த்துகளும் பரிமாறப்பட்டன.

இங்கே வயலட் வீட்டிலோ பால் பொங்கவில்லை. மாறாக கண்ணீரும் துயரமும் பொங்கியது. வெடிச்சத்தங்களுக்கு மாறாக அழுகையும் அடிதடிச் சத்தமும் அயலவர்களுக்கு கேட்டது. வாழ்த்துகளுக்கு பதிலாக தூஷணவார்த்தைகள் பரிமாறப்பட்டன.

வயலட்டின் கணவன் விஜித்த. அன்றும் தலைகால் புரியாமல் மதுவில் திளைத்து வீடுவந்தான். அவன் கால் வீட்டில் நுழையுமுன்னரே அவனது தூஷண வார்த்தைகள் வீட்டுக்குள் நுழைந்து அவன் வரவுக்கு கட்டியம் கூறின.

அந்த வீட்டில் அடுத்து ஒரு புயல் வீட்டில் வீசப்போகிறது என்பது அந்த ஊரே அறிந்த விடயம். அன்றும் அது தான் நடந்தது.

விஜித்த தூஷண வார்த்தைகளால் ஏசியபடி வயலட்டை அழைத்து காலில் அடிப்பட்டிருக்கிறது எண்ணெய் தேய்த்து விடு என்றான்.

அவன் அருகில் சென்றால் அடுத்து என்ன நடக்கும் என்பது அவளுக்குத் தெரிந்திருந்ததால் அருகில் செல்வதை தவிர்த்தாள். ஆனால் அவன் விடவில்லை. சிறிது நேரத்தில் அந்த வீட்டிலிருந்து அச்சில் ஏற்றமுடியாத வார்த்தைகளும் வயலட்டின் அழுகுரலும் ஓங்கி ஒலித்தன.

தந்தைக்கும் தாய்க்குமிடையே அடிதடி சண்டைகள் நடப்பதைப் பார்த்து 12 வயது மகளுக்கு அழுவதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. இது அன்றாடம் நடக்கும் செயல் என்பதால் அயலவர்களும் எட்டிப்பார்க்கவில்லை. விஜித்த அடித்து ஓய்ந்ததும் அந்த வீட்டில் அமைதி திரும்பி விடும் என்பது அவர்களின் எதிர் பார்ப்பு.

சண்டைக்கு பயந்து வீட்டின் மூலையில் ஒண்டிக் கொண்ட மகளுக்கு சாமான்கள் உடையும் சத்தமும், நான் உன்னைக் கொல்வேன். இரண்டில் ஒன்றைப் பார்ப்பேன் என்ற தந்தையின் ஆவேசக்குரலும் தாயின் அழுகுரலும் கேட்டது.

சிறிது நேரத்தில் சத்தம் ஓய்ந்தது. மகள் அம்மாவின் உடல் முழுவதும் புண்ணாகியிருந்ததைக் கண்டாள். அடி வாங்கியும் அழுதும் களைத்துப் போன வயலட் உறங்கி விட்டாள்.

அடித்துக் களைத்துப் போய் விஜித்தவும் உறங்க ஒரு மூலையில் மகளும் உறங்கிப் போனாள்.

திடீரென திடுக்கிட்டு விழித்தாள் வயலட். அங்கே அவள் கண்ட காட்சி அவளை ஆவேசத்தின் உச்சகட்டத்திற்கு கொண்டு சென்றது.

ஒரு தந்தை செய்யத்தகாத காரியம் அது! விஜித்த உறக்கத்திலிருந்த மகளின் அருகில் சென்று தகாதமுறையில் நடக்க எத்தனித்துக் கொண்டிருந்தான்.

வெறி கொண்டவள் போல் எழுந்த வயலட் விஜித்தவை இழுத்துத் தள்ளினாள். சத்தம் கேட்டு மகளும் விழித்து அலறினாள்.

இப்போது அவன் பயப்படவில்லை. அவள் என் மகள். நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னைக் கொன்று விட்டென்றாலும் அவளை அடைவேன் என்றான். ஒரு தந்தை சொல்லக்கூடாத வார்த்தைகள் அவன் வாயிலிருந்து உதிர்ந்தன.

மீண்டும் அந்த வீடு ரணகளமாயியது. சில மணி நேரங்களில் சண்டை ஓய்ந்து அமைதி திரும்பியது.

விடிவதற்கு சில மணித்தியாலங்களே இருந்தன - வயலட்டிற்கு நித்திரை வரவில்லை. வேதனை, விரக்தி, பயம், அருவருப்பு என்பன அவளை சூழ்ந்து கொண்டன.

வீட்டை சுற்றிலும் அவள் கண்கள் நோட்டமிட்டன. வீட்டின் ஒரு மூலையில் கிடந்த அரிவாள் அவள் கண்களில் பட்டது.

அதைக் கையில் எடுத்த அவள் மறுகணம் யோசிக்கவில்லை. தடுமாறவில்லை. அதனை இறுகப்பிடித்தாள். தெளிவாக நடந்தாள். அங்கே கணவன் உறங்கிக் கொண்டிருந்தான்.

அவன் கழுத்தில் பலம் கொண்ட மட்டும் மீண்டும் மீண்டும் வெட்டினாள்.

இரத்தம் தோய்ந்த அரிவாளை எடுத்து கொண்டு நேராக தனமல்வில பொலிஸ் நிலையத்திற்கு சென்றாள்.

என் கையால் என் கணவனை வெட்டிக் கொன்று விட்டேன். அவனைக் கொல்வதை தவிர வேறு மார்க்கமில்லை. என்னைக் கைது செய்யுங்கள் என்றாள்.

***

வயலட் தனது 17 வயதில் விஜித்தவிற்கு மனைவியானாள். அவனுக்கு நிரந்தர வேலை இல்லை. கூலி வேலை செய்தான். திருமணமான சில நாட்களிலேயே அவன் மதுவிற்கும் கஞ்சாவிற்கும் அடிமையானவன் என அறிந்து கொண்டாள். மகள் பிறந்தாள். மகளுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டாள். தினம் தினம் நரக வாழ்க்கை அனுபவித்தாள். மகளின் எதிர்காலம் கருதி அவளை தனது தங்கையின் பொறுப்பில் விட்டு 6 வருடங்கள் வெளிநாடு சென்று உழைத்தாள்.

கொண்டு வந்த பணத்தில் ஒன்றரை ஏக்கர் காணி வாங்கினாள். பண்ணை ஒன்றையும் விஜித்தவிற்கு வைத்துக் கொடுத்தாள். அவனது போதைக்கு முன் எதுவும் அவனுக்கு பெரிதாக தெரியவில்லை. எந்த வேலையையும் அவன் சரியாகச் செய்யவில்லை.

எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டவள்தான் வயலட். ஆனால் அவன் தன் சொந்த மகளிடமே அத்துமீறி நடப்பதைக் கண்டு வெகுண்டெழுந்தாள். மகளுடன் எல்லை மீறி நடந்து கொள்வதை பல சமயங்களில் அவதானித்தாள். அவனது செய்கைகள் ஒரு தந்தையின் பாசமாக வெளிப்படவில்லை. அயலவர்களும் உறவினர்களும் கூட அவனைக் கண்டித்தார்கள். அவள் இது தொடர்பில் பொலிஸிலும் முறைப்பாடு செய்தாள்.

ஆனால் 2013 புத்தாண்டு தினம் அவன் வெளிப்படையாகவே மகளை இரையாக்கத் துணிந்த போது ஒரு தாயாக ஆத்திரத்தை வெளிப்படுத்தினாள் வயலட்.

இது கொலையல்ல வதம்! நான் இல்லாத வேளையில் என் மகளுக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. காவலனாக இருக்க வேண்டிய தந்தையே காமுகனாக மாறினால் நான் என்ன செய்வேன்? மகளை பாதுகாக்கவே இந்தக் கொலையைச் செய்தேன். இந்தக் கொலைக்காக நான் வருந்தவில்லை. நிம்மதியாக ஜெயிலுக்குப் போவேன். இந்த மாதிரியான ஜென்மங்கள் உயிரோடு இருக்கவே கூடாது என்ற வயலட். இது கொலையல்ல வதம் என பொலிஸாரிடம் திரும்பத்திரும்பச் சொன்னாள்.

- நன்றி மொபிம -

ஜி.வி.எஸ்

எனக்கு ஒரு வரம் கிடைத்தால்..!

சக்தியின் இசை இளவரசர்கள் நிகழ்ச்சி மூலமாக தனது காந்தக்குரலில் 'சகியே' பாடலுக்கு உயிர்கொடுத்தவர் இஜாஸ். மேடை நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என பிஸியான பாடகராக வலம் வரும் இஜாஸ் இந்த வாரம் பேஸ்புக் பகுதியில் இணைகிறார்.

ஹாய்... எல்லோருக்கும் வணக்கம்!

என்னுடைய சொந்த இடம் இயற்கை அழகுக்கு பெயர் பெற்ற திருகோணமலை. நான் பாடசாலையில் படிக்கும் போதில் இருந்தே ஓரளவுக்கு பாடுவேன். பாடசாலையில் இசை நிகழ்ச்சி என்றால் என்பெயர் என்னை கேட்காமலேயே இருக்கும். அதன் பிறகு ''நியூ வேவ்'' இசைக் குழுவில் பாடிக்கொண்டிருந்தேன் அதன் மூலமாக என்னுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

குறுகிய வட்டத்திற்குள் மட்டுமே பாடகனாக அறிமுகமாகியிருந்த என்னை 2007 ஆம் ஆண்டு சக்தி தொலைக்காட்சியின் 'இசை இளவரசர்கள்' என்ற நிகழ்ச்சி முழு இலங்கைக்கும் மட்டுமல்ல உலகளாவிய தமிழ்பேசும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. எனது திறமைகளை வளர்த்துக் கொள்ள களமாகவும் அந்த நிகழ்ச்சி அமைந்தது. இப்போது அக்னி இசை குழுவில் பாடகராக பாடிக் கொண்டிருக்கிறேன்.

அத்தோடு நேத்ரா தொலைக்காட்சியில் பகுதி நேர தொகுப்பாளராக Lunch Time Music என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறேன்.

- இசைத்துறை மூலமாக கிடைத்த பரிசு.

சக்தி டீ.வியில் ஒரு பாடகரா என்னை கௌரவித்ததே எனக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசு.

- மறக்கமுடியாத பாராட்டு: இசை இளவரசர்கள் நிகழ்ச்சியின் போது குரல் பயிற்சிக்காக இந்தியாவிற்கு சென்றிருந்தோம். அப்போது இசையமைப்பாளர் பரணியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. உங்கள் குரலில் ஒரு ஸ்பெஷல் எபெக்ட் இருக்கிறது. முயற்சித்தால் முன்னேறலாம் என்று பாராட்டியது என்னால் மறக்கவே முடியாது.

- எந்த ப்பாடகரின் ஸ்டைல், குரல் உங்களுக்கு மிகவும் பிடிக்கும்.

என்னுடைய பேவரிட் பாடகர் உன்னி கிருஷ்ணன். அவருடைய ஸ்டைல் குரல் எல்லாமே சூப்பர். அவரது பாடல்களை கேட்காத நாட்களே இல்லை

- உங்களுடைய பிளஸ், மைனஸ் என்ன?

யாரைச் சந்தித்தாலும் அடுத்த பத்தாவது நிமிடம் அவரது நண்பராகி விடுவதுதான் எவனது பிளஸ்.

என்னுடைய மைனஸ். என்னிடம் எனக்கே பிடிக்காத குணம், அதிக கோபம். அதன் உச்சக்கட்டத்தில் ஏதாவது ஒரு பொருள் நிச்சயம் உடையும். இந்த 2013லாவது அதை எப்படியாவது குறைக்க வேண்டும் என்ற முடிவில் இருக்கிறேன்.

- சங்கீதம் முறையாக படித்திருக்கிறீர்களா?

எல்லாம் பாடசாலையில் கற்றது தான். மற்றப்படி கேள்வி ஞானம் தான்.

- இசைத்துறையில் உங்கள் இலக்கு.

என்னுடைய குரல் எல்லோருக்கும் அறிமுகமாகணும். ஏ.ஆர்.ரகுமான் என்றால் தெரியாதவர்களே இருக்கமுடியாது அல்லவா? அந்தமாதிரி இஜாஸ் என்றால் முழு இலங்கையிலுமாவது எல்லோருக்கும் தெரியுமளவுக்கு ஒரு தனி இடம் வேண்டும்.

- ஒரு பாடகராக வராமல் இருந்தால்....?

ஒரு சட்டத்தரணி ஆக வேண்டும் என்பது தான் என்னுடைய சிறுவயது கனவு இலக்கு எல்லாமே! இடையில வந்த இசை மோகம் அந்தப் பாதையை மாற்றி விட்டது.

- நன்றி சொல்ல நினைக்கும் ஒருவர்.

என்னுடைய மனைவிக்குதான். என்னுடைய எல்லா செயலுக்குப் பின்னும் அவரே இருக்கிறார்,

- மேடை நிகழ்ச்சிகளில் சொதப்பிய அனுபவம்.

கண்டிப்பாக இருக்கிறது! ஒரு நேரடி நிகழ்ச்சியில் என்னமோ ஏதோ என்ற பாடலைபாடிக் கொண்டிருந்தேன். இடையில குரலில் ஏதோ கோளாறு. என்னாலேயே சகிக்க முடியாத ஒரு குரலில் பாடி முடித்தேன். பாடல் முடிந்ததும் ரொம்பவும் வேதனையாகவும் வெட்கமாகவும் இருந்தது.

சந்திக்க நினைக்கும் நபர்.

ஏ.ஆர்.ரகுமான்.

- பொழுதுபோக்கு.

பாட்டு கேட்பது, பாடுவது.

- உங்களுக்கு ஒரு வரம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். என்ன வரம் கேட்பீர்கள்.

வேறு என்ன மிகப்பெரிய பாடகராக, ஊரறிந்த உலகறிந்த பாடகனாக வரணும் என்று தான் கேட்பேன்.

- உங்கள் மனைவி அதிகமான டீவி நிகழ்ச்சிகளில் மற்றும் திரைப்படங்களில் தோன்றுகிறார். எனினும் அந்தமாதிரியான வாய்ப்பு உங்களுக்கு வரவில்லை என்று பொறாமை பட்டதுண்டா?

(பொறாமையா அப்படினா அது என்ன) சத்தியமா பொறாமை இல்லை. சந்தோஷம்தான். ஆனால் நானும் அப்படி வர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அவ்வளவுதான்.

- இரண்டு பேரும் சேர்ந்து வெளியில் போகும் போது யாரிடம் ரசிகர்கள் அதிகமாக வந்து கதைப்பார்கள்.

மனைவிக்கு ரசிகர்கள் அதிகம். சிங்கள படங்களில் நடித்திருப்பதால் அதிகமான சிங்கள ரசிகர்கள் உண்டு. ஆனால் நிறைய மேடை நிகழ்ச்சிகள் செய்வதால் எனக்கு அதிகமான ரசிகர்கள் இருக்கிறார்கள். ஆகவே என்னிடம்தான் அதிகம் கதைப்பார்கள்.

- பல போராட்டங்களுக்கு பின் காதல் திருமணம் செய்து வாழ்க்கையில் இணைந்திருக்கிறீர்கள். காதலைப்பற்றி இரண்டுவரி சொல்லுங்களேன்.

காதல் பண்ணுங்கள். அந்த காதல் கடைசி வரை கைகூடிவரும் வரை போராடுங்கள். வெற்றி நிச்சயம்.

- பொங்கல் கொண்டாடிய அனுபவம்.

மனைவி இந்து சமயத்தை சேர்ந்தவர். அவளுடைய எந்த ஆசைக்கும் நான் தடைபோடமாட்டேன். அதனால் இந்த வருடம் எங்கள் வீட்டிலும் பொங்கலோ பொங்கல்தான்.

தொகுப்பு :அபி

சாப்பிட மறுத்த குழந்தைக்கு மலத்தை உண்ணக்கொடுத்த தந்தை...!

பச்சிளம் குழந்தையின் மரணத்தின் பின் தீடுக்கிடும் தகவல்கள்!

■ ஜி.வி.எஸ் (நன்றி ரிவிர)

இப்படியும் கூட கல் நெஞ்சம் படைத்த கொடூர மனிதர்கள் இருக்கிறார்களா?

சில சம்பவங்கள் பற்றிக் கேள்விப்படும்போது இந்தக் கேள்வி தான் நம்முள் எழுகிறது.

இப்போதெல்லாம் நாளிதழ்களைப் பார்க்கும் போது இந்தக் கேள்வி பல தடவைகள் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

கடந்த 4 ஆம் திகதி பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மெல்கி சலோமி அபயசேகா என்ற ஒரு வயதும் 4 மாதங்களும் ஆன குழந்தை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தது.

இந்தக் குழந்தையின் மரணம் சாதாரணமானதல்ல. மிகக் கொடூரமான சித்திரவதைகளையும் தாக்குதல்களையும் அனுபவித்தே இந்த பச்சிளம் குழந்தை காலன் வசப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதல்களையும் சித்திரவதைகளையும் புரிந்தவர் அந்தக் குழந்தை இந்த உலகில் உருவாகக் காரணமாக இருந்த தந்தை என்றால் நம்ப முடிகிறதா? குழந்தை இறந்த இரண்டு தினங்களுக்குப் பின் சந்தேக நபராக தந்தையும் தற்கொலை புரிந்து கொண்டுள்ளார். தான் பெற்ற குழந்தையை சித்திரவதை செய்யுமளவுக்கு குழந்தை செய்த பாவம் தான் என்ன? தந்தை மனம் இவ்வாறு கல்லாகிப் போன காரணம்தான் என்ன?

இந்தக் குழந்தையின் மரணத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை, பொலிஸ் விசாரணைகளின்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. குழந்தையின் தந்தை கனில்! கடற்படையில் பணியாற்றியவர். கொழும்பில் திருமணம் செய்து மனைவியோடு வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு 2 பெண், ஒரு ஆண் என மூன்று குழந்தைகள்.

கடந்த சில வருடங்களுக்கு முன் 16 வயது பெண் ஒருவரும் மூதாட்டி ஒருவரும் இந்தக் குழந்தைகளை பராமரிப்பதற்காக இவர்களது வீட்டில் வந்து தங்கியிருந்தார்கள்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் குறித்த 16 வயது பெண் சார்பில் கனில் இப்பெண்ணை பலாத்காரம் புரிந்துவிட்டதாக பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று தெரிவிக்கப்பட்டது. கனிலை பொலிஸார் கைது செய்தார்கள். கனிலுக்கு 8 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தண்டனையின் பின் அவர் வீடு வந்தபோது மனைவி அவருடன் வாழத் தயாராக இருக்கவில்லை. குழந்தைகளை குறித்த மூதாட்டியின் பொறுப்பில் விட்டு வெளிநாடு சென்று விட்டார்.

இந்நிலையில்தான் கனிலால் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பெண்ணுக்கு குழந்தை (மெல்கி சலோமி) பிறந்தது.

கனிலும் குறித்த பெண்ணான திலினியும் திருமணம் செய்து பிலியந்தலையில் குழந்தை மெல்கியோடு குடியேறினார்கள். வல்லுறவுக் குற்றச்சாட்டின் பேரில் கனிலின் கடற்படை உத்தியோகத்தர் பதவியும் பறி போனது.

முதல் மனைவியின் விவாகரத்து, தனது வேலை பறிபோனது, தான் சிறைத் தண்டனை அனுபவித்தது எல்லாவற்றுக்கும் காரணம் குழந்தை மெல்கிதான் என கனிலின் ஒட்டுமொத்த கோபமும் குழந்தையின் பால் திரும்பியது.

வஞ்சம் வைத்தார். பச்சிளம் குழந்தை எனப் பாராமல் அடி, உதை என சித்திரவதை புரிந்துள்ளார்.

இதுபற்றி தாய் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் அவருக்கு குழந்தை மீது ஆரம்பத்திலிருந்தே அன்பு கிடையாது. குழந்தையை எப்போதும் அடிப்பார், பால் கொடுக்கக் கூட விட மாட்டார். தட்டிக்கேட்டால் எனக்கும் அடிப்பார். கடந்த 3 ஆம் திகதி தாய் சாப்பாடு கொடுக்க முயன்ற போது குழந்தை சாப்பிட மறுத்து அடம்பிடித்தது. நெருப்பால் குழந்தையைச் சுட்டார். அடித்தார். மலத்தை உண்ணக் கொடுத்தார். இந்த சித்திரவதைகளால் குழந்தை சுகவீனமுற்றது. 4 ஆம் திகதி பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குழந்தை இறந்தது எனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இதுகுறித்து விசாரணைகளை ஆரம்பித்த போது கனில் தலைமறைவாகியிருந்தார்.

வயிற்றில் பலமாக தாக்கப்பட்டதால் குடல் வெடித்து, தொண்டையில் சாப்பாடு அடைத்ததன் காரணமாகவே குழந்தை மரணித்தது என குழந்தையின் பிரேத பரிசோதனை அறிக்கை கூறுகின்றது.

குழந்தை மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதைத் தடுக்கவோ பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கவோ தவறிய குறித்த தாயும் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். தலைமறைவாகியிருந்த தந்தை கனில் காத்தோட்டு பொல்கஸ்லோவிட்ட பகுதியிலுள்ள பாழடைந்த வீடொன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பொலிஸரால் மீட்கப்பட்ட கனிலின் சடலத்தை உறவினர்கள் யாரும் பொறுப்பேற்கவில்லை. குழந்தைக்கு செய்த பாவத்திற்கு பரிசுதான் அவருக்கு விளைந்த துர்மரணமோ!

இப்படியும் இருக்கிறார்கள் பிள்ளைகள் இக்காலத்தில்!

இரத்தினபுரியில் முதியவருக்கு நேர்ந்த அவலம்

பிள்ளைகளை பெற்று, வளர்த்து ஆளாக்க பெற்றவர்கள் செய்யும் தியாகத்திற்கு அளவே கிடையாது. இந்தத் தியாகத்திற்காக பெற்றவர்களுக்கு பிள்ளைகள் செலுத்த வேண்டிய கடன் அளவிட முடியாதது. ஆனால் அந்தப் பெற்றவர்கள் வயது முதிர்ந்து, நோய் வாய்ப்பட்டு பிள்ளைகளின் தயவில் வாழவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகும் போது எத்தனை பிள்ளைகள் தம் கடமையை உணர்ந்து பெற்றவர்களுக்கு நன்றிக் கடன் செய்கிறார்கள்? அவர்களைப் பராமரிக் கிறார்கள்?

இரத்தினபுரியில் ஒரு முதியவருக்கு நடந்த கதியைப் பாருங்கள்!

வயதான முதியவர் ஒருவரை அவரது குடும்பத்தினர் யாருக்கும் தெரியாமல் பஸ்தரிப்பு நிலையத்தில் அநாதரவாக விட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.இரத்தினபுரி புதிய நகரத்தில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் எழுந்து நடக்க முடியாத நிலையில் பட்டினியுடன் முதியவர் ஒருவர் கட்ந்த சில நாட்களாக இருந்துள்ளார்.

கடும் நோய் வாய்ப்பட்டுக் கிடந்த அவரின் பரிதாப நிலையைப் பார்த்து பொதுமக்கள் அவரை அணுகி விசாரித்த போது கடுமையான சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த தன்னை தனது பிள்ளைகள் இரவோடிரவாக பஸ்நிலையத்தில் விட்டுச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழையில் உணவு, உடை எதுவுமில்லாமல் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இருந்த அவருக்கு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் வேண்டுகோளுக்கு அமைய அரச அதிகாரிகள் உதவுவதற்கு முன்வந்தனர்.

அதன் பிரகாரம் அந்த முதியவருக்கு புதிய ஆடைகள் அணிவித்து உணவு வழங்கி கலவானையில் அமைந்துள்ள முதியோர் இல்லத்துக்கு அவர் அனுப்பி லைக்கப்பட்டார்.

இப்படியும் இருக்கிறார்கள் பிள்ளைகள் இக்காலத்தில்!



யாழில் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்!

இந்தியத் தலைநகர் டெல்லியில் கடந்த 16 ஆம் திகதி இரவு மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவரை போதைக் கும்பல் ஒன்று பஸ்ஸிலேயே பலாத்காரம் செய்து கொடூரமாகத் தாக்கி, பஸ்சில் இருந்து வெளியே தூக்கி வீசிவிட்டுச் சென்ற சம்பவம் முழு இந்தியாவையும் புரட்டிப் போட்டது.

பலாத்காரம் செய்யப்பட்ட மாணவி இறந்த சோகம் மறைவதற்குள் டெல்லி பஸ்சில் இளம் பெண் ஒருவர் மீண்டும் இக் கொடுமைக்கு ஆளாகியுள்ளார். மேற்கு டெல்லி கயாலா பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது குடும்பத்துடன் ஏற்பட்ட வாக்குவாதத்தால் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி லஜ்பத் நகர் செல்லும் அரசு மாநகர பஸ்சில் செல்ல, அதில் பயணம் செய்த மற்றொரு பஸ்சின் நடத்துனர் இந்தப் பெண்ணை பலாத்காரம் புரிந்துள்ளார்.

இந்நிலையில் நாடு பூராகவும் ஆர்ப்பாட்டங்கள் கருப்புக் கொடி போராட்டங்கள், பெண்ணிய அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள் என முழு இந்தியாவும் நிலைகுலைந்து போனது. இந்த வன்கொடுமைச் சம்பவத்தை கண்டித்து கொழும்பிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இலங்கையிலும் வல்லுறவுச் சம்பவங்கள் மிகத் தாராளமாகவே நடைபெறுகின்றது.

யாழ். மாவட்டத்தில் மாத்திரம் கடந்த வாரத்தில் ஐந்து சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் யாழ். மாவட்டத்தில் சிறுமியர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாகவும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.ஈ எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதாவது கடந்த வாரத்தில் மட்டும் 5 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களில் ஒரு சிறுமி படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும் 2 சிறுமிகள் அவர்களது தந்தையினாலேயே பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

17 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த 9 ஆம் மாதம் 5 ஆம் திகதி அவருடைய தந்தையினாலேயே பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தினை அடுத்து மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட சிறுமி கர்ப்பமுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினரால் கடந்த மாதம் 29 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய தந்தை தலைமறைவாகியுள்ளார்.

இதேபோன்று அன்றைய தினமே யாழ்.நல்லூர் வீதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியும் அவரது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார். இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து 15 வயதுச் சிறுமியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த 21 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இடம்பெற்ற விசாரணையில், இந்தச் சிறுமியை வவுனியாவிற்குக் கொண்டு சென்று தடுத்து வைத்ததாகவும், தங்கள் இருவருக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் இதற்கு உடந்தையாக இருந்த வவுனியாவைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மருதடிப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி 17 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 30 வயது குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு தொடர்ந்து குடா நாட்டில் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன. சிறுமிகளை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்குவோர் வெளியிலிருந்து வருவது கிடையாது. தந்தை, பாட்டன், குடும்ப உறவுகள் என இக்குழந்தைகளோடு சம்பந்தப்பட்ட கூட்டமே இவ்வாறான இழிவான செயலில் ஈடுபட்டு வருகின்றது.

தான் வாழும் வீடு முதற்கொண்டு பாடசாலை, வீதி, பேருந்து என எங்கும் பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகிறது.

இப்படியொரு நிலை தொடருமாயின் இலங்கை மிக மோசமான நிலைமையை எதிர்கொள்ளும். இவ்வாறான இழிசெயல்களுக்கு வெறும் கோசங்களும் ஆர்ப்பாட்டங்களும் மட்டுமே தீர்வாகிவிடாது. ஒட்டு மொத்த சமூகமும் ஒன்றிணைய வேண்டிய தேவை இந்த விடயத்தில் கட்டாயமாகும். அதேசமயம் சட்டமும் தமது கடமையை செய்ய வேண்டும். தண்டனைகள் கடுமையாகும் பட்சத்திலேயே குற்றங்கள் குறைக்கப்படும்.

எஸ்.மேகலா

டொமோஹோக் புதிர் இல.10

புதிருக்குரிய கேள்வி 10.01.2013 உதயசூரியனில் வெளிவந்த சிகரம் பகுதியை அடிப்படையாகக் கொண்டு கீழ்த் தரப்பட்டுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கான விடையைக் கண்டு பிடிப்பது மட்டுமே. இந்தப் பக்கத்தில் கீழ்த் தரப்பட்ட டொமோஹோக் புதிர் இல. 10 என்பதை வெட்டி ஒரு தபால் அட்டையில் ஒட்டி பதில் எனும் வெற்றிடத்தில் உங்களுடைய விடையினை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

இது உங்களுடைய சொந்த முயற்சி என்பதை ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி, தபால் அட்டையினை தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

போட்டி முடிவுத் திகதி: 16.01.2013

தபால் அட்டை அனுப்ப வேண்டிய முகவரி

டொமோஹோக் புதிர் இல. 10
ஞாயிறு தினக்குரல்
68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு - 15.

ஒரு அதிர்ஷ்ட வெற்றியாளர் புத்தம் புதிய டொமோஹோக் மவுண்டன் சைக்கினைப் பெறுவார் அத்துடன் டொமோஹோக் பைசிக்கள் பொதி அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

8-16 வயதுக்கிடைப்பட்ட அனைத்து உதயசூரியன் வாசகர்களும் இதில் பங்குபற்ற முடியும்.

(ஒரு பைசிக்களை ஏற்கனவே பரிசாக வென்றெடுத்தவர்கள் இதில் பங்கு பற்றும் தகைமை பெறமாட்டார்கள்)

கேள்வி - புதிர் இல.10

கேள்வி : நீரை உறிஞ்சிக் குடிக்கும் ஒரேயொரு பறவை எது?

பதில் : .....

U/S

TOMAHAWK Bicycles டொமோஹோக்

Mountain - BMX - Ladies - Kids

Dealers Island wide

TOMAHAWK BICYCLE MALL

No. 254 B, Galle Rd, Colombo 04.
www.tomahawkbike.com

கடல் தாண்டும் மலைக் குருவிகள்

வறுமையின் வடுக்களை
மறைக்க திடம் கொண்டு
நாங்கள் பருந்துகளாய் மாறி
பாலைவனத் தேசங்களுக்கு
சிறகடிக்கின்றோம்
உறவுகளின் பிரிவுகள்
உயிருக்குள் ஊசலாட
தனிமை தினமும்
உயிர் பறிக்க
விடியல்களுக்காய்!
விழித்திருக்கிறோம்
காலங்களை நகர்த்தி
கடைந்தெடுக்கிறோம்
ரியால்களையும்,
தினார்களையும்
எங்களின் இதயம் பிழிந்து
கைக்கெட்டும்
பணத்தையெல்லாம்
மதுவுக்கு மட்டும்
மண்டியிட வைத்திடாதீர்
இதயம் உள்ள
என்னுயிர்க் கணவரே!

பா.ரிசாந்தன், ஒமாப்டன்

என் உண்மைக் காதல்

உன்னை நான் பார்த்ததுஇல்லை
உன்னோடு கைகோர்த்து
நடக்கவில்லை
உன் தோள்களிலும் சாயவில்லை
இப்படி எதுவும் இல்லாமல் உன்
மீது என்னுள் வந்த காதல்
அழியாத சுவடாக பதிந்தது
நான் மதத்தை பார்த்து
காதலிப்பவன் அல்ல
மனதைப் பார்த்து காதலிப்பவன்
உன் முகம் காணவில்லை
ஆனால் உன் மனதை
நான் அறிந்தேன் அதுபோதும்
எனக்கு உன்னோடு சேர....
நான் காத்திருப்பேன்- உனக்காக
என்னைப் போல்தான் நீயும்
இருப்பாய் என்று நான் நம்புகிறேன்

ஜே.நிஷான் கிறிஸ்டோபர்,
நாவலப்பிட்டிய

நொடியில் பூத்த கண்ணீர் மழை

நீ என்னைவிட்டு
பிரியும் போது
தான் - நான்
உணர்ந்தேன்
என் கண்களுக்கு
அழத் தெரியும்
என்பதை

விஸ்வநாதன்
மலர், லிந்துல

தேவதை

என்னை எனக்கு
உணர்த்திய
என் முதல் காதலி

அம்மா

ரா.கஜேன், ஒமாப்டன்

கண்ணாடி

நம்புகிறேன் உன்னை
ஏன் தெரியுமா?
நிஜமாகவே நீ
பொய் சொல்வதில்லை
அதனால்

வேலு மலர்விழி,
கிளிகத்தேனை

பேனை

எல்லாம் முடிந்த பின்னும்
எல்லோரும் பிரிந்த பின்னும்
இரவெல்லாம் என்னோடு சேர்ந்து
கண்ணீர் வடித்து கண்ணீரை
கவியாக்கித் தந்தது

உதயகுமார் தேசாளி, இராகலை

உயிரே

உயிரை விடாமலே
தினம் தினம் மரணம்
நம் காதலில் மட்டும்தான்
உடைகின்ற நேரத்திலும்
உறுதியாய் நிற்கின்ற
உன் அழகான உள்ளம்
கானப் பறவையாய் பறந்து
உன் இடம் தேடி
வருகின்றேன்... உன்
உயிரின் உயிராய் கலந்திட!

டி.பத்மநாதன்,
கிளிகத்தேனை

காதல்

மகிழ்வுகள்
மரணிக்கப்பட்ட பின்பும்
மறக்க முடியாத ஓர்
உன்னத உணர்வு

ரா.கஜேன், ஒமாப்டன்

காணல் தேவதை

கனவில் வந்த உன் முகத்தைக்
காண நினைக்கும்போது - நீ
காணல் நீராய் மாறுகிறாயடி

எம்.எப்.மபாஸ்,
கிண்ணியா-03

வெண்ணிலா

இருளாய் இருக்கும் வானிலே
பால் நிறமாய் தெரிகிறாய்
எட்டித் தொட்டு பார்த்திட
மனித உள்ளம் துடிக்குதே
பௌர்ணமியில் முழு நிலவாய்
தோன்றும் வெண்ணிலாவே
அமாவாசை அன்று - நீ
எங்கே சென்று மறைகின்றாய்?
என்றும் முழு நிலவாக
எங்கும் வரமாட்டாயா?
என்றென்றும் உன்னை
பார்த்திடும் வரம் தரமாட்டாயா?

எஸ்.சிவராஜா சுகன்யா,
இஞ்சிமலஸ்ஸ

வரலாறு மதிக்குமா?

இரவுகள் வெளிப்படுத்தும்
எண்ணங்களின்
தொகுப்பும்
பொருள் கொடுக்க
முயலும்
இரக்கமற்ற மானுட
உறவுகளும்
வரலாறு மதிக்குமா?

சா.சேகர், டீமலை

- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24 வருட அனுபவம்

COURSES:

Dip. in Psychology	-	உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration	-	காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management	-	மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering	-	சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management	-	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management	-	வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management	-	விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி
Dip. in Health & Hospital Management	-	சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி
Dip. in Nursing Administration	-	தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management	-	கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori	-	மொன்டிசூரி டிப்ளோமா

JAN 2013 TO JUN 2013

தமிழ் மொழி மூலம்

கற்கை முடிவில் பரீட்சை நடை பெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR.A.HASSEN *(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013

உதய சூரியன் "கவிதைச்சுமி"
எரியன் மீடியா பப்ளிஷேன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:----------
முகவரி:----------
தொலைபேசி இல----------

நினைத்ததை முடிப்பவன்! 30

பாலா.சங்குப்பிள்ளை



சுதர்ஷனும், சிவகுருவும் குட்டிபோட்ட பூனைகளைப் போல நெடுக்கும் குறுக்குமாக நடக்கத் தொடங்கினார்கள். அவர்களின் முகங்களிலும் கலவரம் தெரிந்தது. தொடர்ந்து முயற்சி செய்வதா அல்லது கண்ணனைப் போல கழன்று கொள்வதா என யோசிக்கத் தொடங்கினார்கள்.

"சிவகுரு... கண்ணன் போயிருப்பானா...?"

சிவகுரு - கேலியுடன் அவனைப் பார்த்தான்.

"போயிருப்பான்னுதான் தெரியுது. ஆனா எங்கே போயிருப்பான்னுதான் தெரியலை..."

"உனக்கு கேலியாயிருக்கு. எனக்கு கலக்கமாயிருக்கு..."

"எதுவாயிருந்தாத்தான் என்ன வந்த வேலை முடியாம போனா நம்மளோட நிலமையென்னன்னு உனக்கே தெரியும்தானே? நம்ம எதிர்காலமே அதுலதானே இருக்கு..."

"நீ சொல்றது சரிதான். ஒத்துக்குறேன். ஆனா உயிரே போனதுக்கப்புறம் நிலமையாவது மண்ணாவது. நாம அன்னைக்கே நம்ம வேலையை சரியா முடிச்சிருந்தா இப்படியான கஷ்டம் வந்திருக்காது. மது, மாதுன்னு ஒரேயடியா மயக்கத்துல கிடந்ததால இப்ப அல்லாடிக்கிட்டிருக்கோம். அதெல்லாம் போகட்டும் கீழே நடந்தது, நாம பார்த்ததெல்லாம் கனவா, நனவா, எல்லாம் கண்கட்டி வித்தையா? யாரோ ஒருத்தரோ, பல பேரோ இங்க இருக்காங்க. ஆனா யார் எதுக்காக இருக்காங்கன்னுதான் புரியலை..."

"நாமதான்... யாரும் மேலே வரமுடியாதபடி நல்லா மூடிட்டோமே. நாம தேடுறது நிச்சயமா பாதாள அறையில இல்லன்னு தெரிஞ்சிடுச்சி. அநேகமா அது இங்கதான் இருக்கும். வேலுமணியோட சாவு நான் நினைக்கிற மாதிரி தற்செயலாத்தான் நடந்திருக்கும். நம்மலை பயமுறுத்தி விரட்டிட்டு அதை எடுக்க யாரோ முயற்சி பண்ணுறாங்க. என்னோட கணக்கு சரியா இருந்தா நாம அதை எடுத்தவுடனேயே நம்மளை கொன்னுடுவாங்க. அதுவரைக்கும் உயிருக்கு ஆபத்தில்லை. அதனால முதல்ல நாம வந்த வேலையைப் பார்ப்போம். சோர்ந்து போனா எதுவும் ஆகப்போறதில்லை..."

அதற்குப்பின் இருவரும் பேசவில்லை. மெதுவாக விடியத் தொடங்கியது.

குருவிகளின் சத்தம் கேட்டது. எங்கேயோ ஒரு சேவல் கூவியது. சுதர்ஷன், சிவகுரு இருவரும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு குளியலறை சென்றார்கள்.

அவர்கள் இருவரும் குளித்து முடித்து தயாரானபோது வெளியே அழைப்புமணி ஒலித்தது. சுதர்ஷன் கதவைத் திறந்தான். நாலைந்து பேர் இருந்தார்கள்.

"ஐயா உங்களோட வந்தாரே கட்டையா, கருப்பு கலர்ல சுருட்டை முடியோட..."

"ஆமாம் கண்ணன்... அவருக்கென்ன...?"

"அவரைப் பேயடிச்சிடுச்சிங்க. மண்டையுடைஞ்சி இறந்து கிடக்காரு. பக்கத்துல இந்தத் துண்டு சீட்டுக் கிடைச்சுதுங்க..."

அதிர்ச்சியில் உறைந்து போன சுதர்ஷன் நடுக்கத்துடன் அந்த துண்டுச் சீட்டைப் பிரித்தான்.

"பலி தொடரும்... அடுத்தது யார்? - நினைத்ததை முடிப்பவன்..."

***

கண்டியிலிருந்து வந்தது முதல் கனிமொழி சோர்ந்துபோய் தன்னிலை மறந்து இருந்தாள். சரியான சாப்பாடில்லாமல் உடம்பு மெலிந்து போயிருந்தது. கண்களில் சோகம் குடி கொண்டிருந்தது.

தனிமையிலிருந்தவாறு விம்மி விம்மியழுதாள். சரியாக ஒருவாரம் ஓடியது.

அன்புமணிக்கு தங்கையின் நிலையைப் பற்றியெல்லாம் கவனிப்பதற்கு நேரமில்லை. அவன் வீட்டுக்கு வருவதே நடு இரவில்தான். விடிவதற்குள் ஓடிவிடுவான். அவன் மிகவும் குழம்பிப் போயிருந்தான். முகத்தில் அச்சம் குடிகொண்டிருந்தது. மலர் விட்டு மலர் தாவும் மன்மத வண்டாக சுற்றித் திரிந்தவன் இப்போது காய்ந்து போன மலர்ச் செண்டாக முகத்தில் கலவரத்துடன் ஓடிக்கொண்டிருந்தான். அவன் விலாசத்திற்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

'துஷ்டன் - பல பெண்களின் சாவுக்குக் காரணமானவன். பல பெண்களின் சுற்போடு விளையாடியவன். இதற்கெல்லாம் தண்டனை மரணம்.

தயாராயிரு... நினைத்ததை முடிப்பவன்.'

யாரிவன், எப்படி இவனுடைய விஷயங்கள் தெரியும். கடவுளால் கூட கண்டு பிடிக்க முடியாதென்ற இறுமாப்புடன் திரிந்தவனுக்கு இந்தக் கடிதம் கதிகலங்க வைத்துவிட்டது.

அன்புமணி - பைத்தியம் பிடித்தவனைப் போல சுற்றித் திரிந்தான். அவனால் வஞ்சிக்கப்பட்ட வஞ்சியர் சிலர் அவனை விடாமல் விரட்டினர்.

அவனால் நிம்மதியாக பொழுதைக் கழிக்க முடியவில்லை. எனவேதான் தன் தங்கை கனிமொழி பற்றி அவனால் எண்ணவும் நேரமில்லை.

கனிமொழி - அன்றும் சோகத்துடன் இருந்தாள். அவளே எதிர்பாராமல் அந்த சம்பவம் நடந்தது.

பல்லவன் - திடீரென வந்தான். அவன் சோர்வுடன் இருந்தான்.

"வாங்க... வாங்க... இப்பதான் வழி தெரிஞ்சிதா...?"

"நான் உங்களைப் பார்க்க வரல்லை. அன்புமணி எங்கே?"

"ஏன் என்னை இப்புடி கொல்லுறீங்க...?"

"கொல்லுறது, தள்ளுறதெல்லாம் உங்க அண்ணன் வேலை..."

"என்னோட பேச விருப்பமில்லையா?"

"அது பேசுறவங்களைப் பொறுத்தது. நான் அவசரமா போகணும்... அன்புமணி எங்கே...?"

"என் மேல வச்சிருந்த அன்பு வெறும் வேஷமா?"

"உங்க அண்ணன்தான் அன்பு காட்டுறதா பல பேரை ஏமாற்றி நாடகம் ஆடுறான். நானில்லை..."

"முடிவா எனக்கு என்ன பதில் சொல்லுறீங்க...?"

"நான் எதற்காக உங்களுக்கு பதில் தாரணும்?"

"அப்ப என்கிட்ட பேசினது பழகினதெல்லாம் நாடகமா?"

"எல்லார்கிட்டயும் பழகினமாதிரித்தான் பழகினேன்..."

"திரும்பத் திரும்ப இப்புடி சொன்னா சரி வருமா... என்னை ஏன் துன்பப்படுத்துறீங்க...?"

"உங்க அண்ணனால் பல பெண்கள் துன்பக் கடலில் விழுந்து தவிக்கிறாங்க. முதல்ல அவங்களுக்கு உங்க அண்ணனை பதில் சொல்லச் சொல்லுங்க. வீணா எதையாவது மனசுல நினைச்சிக்கிட்டு உங்க எதிர்காலத்தை வீணடிச்சிக்காதிங்க. நான் வந்துபோனதா சொல்லுங்க..." அவன் சொல்லிவிட்டு விடுவிடுவென நடக்க அவள் பொலபொலவென கண்ணீர்வழிய சிலையென நின்றிருந்தாள்.

(தொடரும்....)

Diploma தையல் பயிற்சி வகுப்புகள்

பெண்களுக்கு வீட்டில் இருந்து கொண்டே சுயதொழில் செய்ய அரிய வாய்ப்பு! நாளொன்றிற்கு ரூபா 1500.00 க்கு மேல் வருமானம் பெற்றுத்தரக்கூடிய கைத்தொழில். நீங்களும் இப்பாட நெறியை கற்று உங்கள் எதிர்காலத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

- 1 மாத - 22 வகையான சாரி பிளவுஸ் (Indian Cutting)
- 6 மாத பயிற்சி (சகலவிதமான ஆடை தைக்கும் முறை) - சல்வார் பயிற்சி
- பிரஸ்லியன் எம்ரோய்டிங் - திரைச்சீலை - ரிபன் எம்ரோய்டிங் - பெட்ச்வேர்க்
- மெசின் எம்ரோய்டிங் - மணமகள் அலங்கார பயிற்சி

வயது எல்லை இல்லை

புதிய வகுப்புகள் ஆரம்பம்

கண்டி : CSC கல்வி நிலையம்: Jan 13 ஞாயிறு 9.00, Jan 15 செவ் 9.00
மாத்தளை: நவோதயம் கல்வி நிலையம்: Jan 13 ஞாயிறு 1.30, Jan 21 திங் 9.00
ஹற்டன்: CWF மண்டபத்தில் : Jan 12 சனி 2.00, Jan 19 சனி 2.00

என்றும் தரத்துடன்: திருமதி.செரின்
உங்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்! கைபேசி: 077 5454002 / 077 5454110

இந்த வருடம் உங்களுக்கு எப்படி?

உங்கள் ராசிக்கு 10ஆவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கடின உழைப்பால் சாதிப்பீர்கள். மனப் போராட்டங்கள் ஓயும். சமயோஜிதமான பேச்சால் தடைப்பட்ட வேலைகளை முடிப்பீர்கள். வருடம் பிறக்கும்போது செவ்வாய் 4 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தாழ்வு மனப்பான்மை நீங்கி தன்னம்பிக்கை பிறக்கும். மனைவி, மனைவிவழி உறவினர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். மே 28 ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 8 ஆவது வீட்டில் குரு மறைந்திருப்பதால் பணம் எவ்வளவு வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். என்றாலும் திடீர் பணவரவும் உண்டு. சொந்த பந்தங்களுக்காக சில சமயங்களில் அலைய வேண்டி வரும். ஆனால் மே 29 ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 9 ஆம் வீட்டில் அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடிவரும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். வாரிசு பலன் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். நீதிமன்ற வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். மாணவர்களே! படிப்பில் அக்கறை செலுத்துங்கள். உத்தியோகஸ்தர்களே! உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். முக்கிய கோப்புகளை கவனமாகக் கையாளுங்கள். அலுவலகச் சூழ்நிலை அமைதி தருவதாக இருக்கும். பதவி உயர்வையும் எதிர்பார்க்கலாம்.

உங்களின் 9ஆவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் பணவரவு உயரும். எதிர்ப்புகள் அகலும். கடன் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்காக ஓயாமல் உழைப்பீர்கள். முகப்பொலிவு. ஆரோக்கியம் கூடும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உறவினர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். வருடம் ஆரம்பிக்கும்போது செவ்வாய் 3ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புதிதாக வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். எதிர்த்துப் பேசியவர்கள், வலியவந்து நட்பு பாராட்டுவார்கள். சுக்கிரன் உங்கள் ராசிக்குள் நிற்கும்போது இந்தாண்டு பிறப்பதால் அடிப்படை வசதிகள் பெருகும். கனிவான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். ராசிக்கு 6ஆம் வீட்டில் கேது சாதகமாக இருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடிவரும். வாரிசு உருவாகும். திருமணப் பேச்சுவார்த்தை கூடி வரும். ஆனால் மே 29 ஆம் திகதி முதல் குருபகவான் 8 ஆம் வீட்டில் மறைவதால் கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம் வரும். திடீர் செலவுகள் வந்துபோகும். குடும்பத்தில் அநாவசியப் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத பயணங்களும், அலைச்சல்களும் வந்துபோகும். மாணவர்களே! சக மாணவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெறவேண்டுமென்ற வைராக்கியத்துடன் படிப்பீர்கள். வெற்றி நிச்சயம். உத்தியோகஸ்தர்களே! உங்களை குறை கூறிய மேலதிகாரி மாற்றப்படுவார். உங்கள் மேல் சுமத்தப்பட்ட பொய் வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் அமையும். அதிகாரிகளுடன் இருந்த மோதல் போக்கு நீங்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். வேறு சில வாய்ப்புகளும் தேடி வரும்.

புத்தாண்டு பிறக்கும்போது சனிபகவான் உங்களின் லாப வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பணப் புழக்கம் அதிகரிக்கும். இனி திட்டமிட்ட காரியங்கள் தடையில்லாமல் முடியும். புதுச்சொத்து சேரும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். மே 28ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் மறைந்திருப்பதால் சில நேரங்களில் வீண் பழி, ஏமாற்றம், அலைச்சல், டென்ஷன், வேலைச்சுமை, செரிமானக் கோளாறு என வந்துநீங்கும். . சந்தேக புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். ஆனால், மே 29 ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் நுழைவதால் திடீர் திருப்பங்கள் உண்டாகும். சோர்ந்து கிடந்த நீங்கள் உற்சாகமாவீர்கள். வீட்டில் தாமதமான சுபநிகழ்ச்சிகள் நடக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். உங்களுக்கு 8ஆவது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது பணப்பற்றாக்குறையும் வரும். என்றாலும் இந்த வருடம் ஆரம்பிக்கும்போது செவ்வாய் உங்களுக்கு 2ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். சில நேரங்களில் காரசாரமாகப் பேசி சிலரின் நட்பை இழப்பீர்கள். முக்கிய பணிகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. எதிலும் அலட்சியமாக இல்லாமல் முன்யோசனையுடன் செயல்படப் பாருங்கள். கன்னிப் பெண்களே! நிஜம் எது நிழல் எது என்பதை உணர்வீர்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும். மாணவர்களே! விளையாட்டுத்தனத்தை ஓரங்கட்டிவிட்டு படிப்பில் முழுக் கவனம் செலுத்துங்கள். உத்தியோகஸ்தர்களே! கிடைக்க வேண்டிய பதவி உயர்வு ஏதோ காரணங்களால் தடைப்பட்டுப்போனதே! இனி பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. அலுவலகப் பிரச்சினைகள் மட்டுமல்லாது அதிகாரியின் சொந்த பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பீர்கள். பெரிய பதவியில் அமர்த்தப்படுவீர்கள்.

உங்களுக்கு லாப வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். புதிய திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மனக்கலக்கத்துடன் சோர்ந்து கிடந்த நீங்கள் இனி சுறுசுறுப்பாவீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தில் நிலவி வந்த தொடர் யுத்தமெல்லாம் விலகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளை இனி கட்டுப்படுத்துவீர்கள். வாரிசு உருவாகும். நல்ல வேலை கிடைக்கும். ஆரோக்கியம் கூடும். ஆனால், ஜூன் மாதம் முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் சென்று மறைவதால் வீண்பழி, டென்ஷன், விரயம், விரக்தி, ஏமாற்றம், மறைமுக எதிர்ப்புகள் என வந்து நீங்கும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும்..தாய்வழி உறவினர்களிடம் மனஸ்தாபங்கள் வெடிக்கும். ஆனால் 10ஆம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாமல் பதிலடி கொடுக்கும் அளவிற்கு மனதைரியம் பிறக்கும். வருடம் முடியும் வரை உங்கள் ராசிநாதனான சனிபகவான் ராசிக்கு 10ஆம் வீட்டிலேயே தொடர்வதால் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும்.. மாணவர்களே! உங்களால்தான் குடும்பம் தலை நிமிரும் என்பதை உணர்ந்து படிக்கப் பாருங்கள்.உத்தியோகஸ்தர்களே! எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இப்பொழுது கிட்டும். சக ஊழியர்கள் உங்களிடம் அன்பாக பேசினாலும் மேலதிகாரியிடம் உங்களை புகார் செய்து கொண்டுதான் இருப்பார்கள்.

உங்கள் ராசிக்கு 6வது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். மனைவிவழி உறவினர்களால் ஆதாயமுண்டு. திருமணம், கிரகப் பிரவேசம், சீமந்தம் என வீடு களை கட்டும். வற்றிய பணப்பை நிரம்பும். நெடுநாட்களாக திட்டமிட்டுக் கொண்டிருந்த சில காரியங்கள் இப்போது முடியும். வருடம் தொடங்கும்போது செவ்வாய் 12 ஆம் வீட்டில் நிற்பதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். சாதிக்க வேண்டுமென்ற தன்னம்பிக்கை வரும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். திடீர் பணவரவு உண்டு. மூத்த சகோதரர் பக்கபலமாக இருப்பார். துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். 9ஆம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். மே 28 ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் இனம்புரியாத கவலைகள் வந்துபோகும். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். புதியவர்களை நம்பி பழைய நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வீண்பழிக்கு ஆளாவீர்கள். ஆனால் மே 29 ஆம் திகதிமுதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் நுழைவதால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். குழந்தைப் பாக்கியம் உண்டு. கன்னிப் பெண்களே! நல்லவர்களைப்போல் சிலர் நடித்து ஏமாற்ற முயற்சி செய்வார்கள். மாணவர்களே! தேர்வில் வெற்றியுண்டு என்று தப்புக் கணக்கு போடாமல், சதா படித்து, எழுதிப் பார்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களே! உங்களை கசக்கிப் பிழிந்து, உருக்குலைய வைத்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். தள்ளிப்போன பதவி உயர்வு, சம்பள உயர்வு இனி தடையில்லாமல் கிடைக்கும்

உங்கள் ராசிக்கு லாப வீட்டில் செவ்வாய் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் நிர்வாகத்திறன் அதிகரிக்கும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் சுக்கிரன் வலுவாக நிற்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் விரக்தியிலிருந்து விடுபடுவீர்கள். விலகியிருந்தவர்கள் ஒன்று சேருவார்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். மே 28 ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் இலக்கை எட்டிப் பிடிக்க கடுமையாகப் போராட வேண்டியது வரும். சுபச் செலவுகளும் திடீர் பயணங்களும் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். ஆனால், மே 29 ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால் மனஉளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம் அவமானங்கள் வரக்கூடும். நண்பர்கள், உறவினர்கள் சிலர் உங்களை தவறான போக்கிற்கு தூண்டுவார்கள். வருடம் முடியும் வரை அஷ்டமத்துச் சனி தொடர்வதால் விபத்துகள், ஏமாற்றங்கள் வந்து நீங்கும். கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள். மாணவர்களே! பெற்றோரின் அறிவுரையை அலட்சியப்படுத்தாதீர்கள். உத்தியோகஸ்தர்களே! மேலதிகாரியால் அவ்வப்போது மன உளைச்சல் வந்தாலும் உங்களை நம்பித்தான் முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். காலம் தாழ்த்தாமல் பணிகளை விரைந்து முடிக்கப் பாருங்கள். விருப்பமற்ற இடமாற்றம் உண்டு. வருடப் பிற்பகுதியில் பதவி உயரும்.

எப்புடி





நேரத்தை, வீணாக்கும் போது
கடிகாரத்தைப் பார்!
ஓடுவது முள் அல்ல
உன் வாழ்க்கை...

அன்பே! நீ ஒரு ரசம்
என்னை காதலிக்க
மாட்டேன் என்றால்
உனக்கு வைப்பேன்
விஷம்.

வி. கதிர், அடாவடித்தை

உலகில் விலை மதிப்
பில்லாதது அன்பு ஒன்று
தான் ஏனோ அது விலை
இல்லாமல் கிடைப்ப
தால் தான் அதை யாரும்
உணர்வதில்லை!

மனிதனும் விலங்கும்...!

ஒரு மிருகக் காட்சிச்சாலையில் ஒரே கூட்டில் ஒரு புலியும் முயலும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இந்த அதிசயக் காட்சியைக் காண தினமும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். புலி படுத்திருக்கும். அதன் வயிற்றில் சாய்ந்தவண்ணம் முயல் படுத்து தூங்கிக் கொண்டிருக்கும். ஒரு பெண்மணி இதை வியப்புடன் பார்த்து விட்டு நிர்வாகியிடம் சென்று, ''இது எப்படி சாத்தியம்? எப்படி இவ்வாறு பயிற்சி கொடுத்தீர்கள்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

அன்று அந்த நிர்வாகி பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் எனவே அவர் அந்தப் பெண்ணிடம் மெதுவாக, ''இதில் பெரிய ரகசியம் ஒன்றும் இல்லை. தினசரி நாங்கள் ஒரு முயலை மாற்றிவிடுவோம், இதை யாரிடமும் சொல்லி விடாதீர்கள்,'' என்றார்.

புலி விலங்குகளை அடித்துக் கொல்லும் கொடிய மிருகம்தான். ஆனால் அது பசித்தால் மட்டுமே தேவைக்கேற்ப விலங்குகளைக் கொல்லும். பசி தீர்ந்தால் அது சாதுவாகிவிடும். மனித இனம் மட்டும் தான் காரணம் ஏதுமின்றி பிற மனிதர்களைக் கொல்லும் குணமுடையது. ஒரு அணுகுண்டைப் போட்டு பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொல்லுவான். ஹிட்லர் போன்ற மனிதர்களால் தான் தன் இனத்தின் பேரால் பல இலட்சம் மனிதரைத் தீர்த்துக் கட்ட இயலும்.

***

ஒரு உணவு விடுதிக்கு திடீரென ஒரு சிங்கமும் முயலும் சேர்ந்து வந்தன. அனைவரும் அரண்டு போய் நின்றபோது விடுதி மேலாளர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முயலிடம் சென்று, ''நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்? உங்கள் நண்பர் என்ன சாப்பிட விரும்புகிறார்?'' என்று கேட்க முயல் சிரித்துக் கொண்டே சொன்னது, ''இங்கு நான் மட்டும் தான் சாப்பிட வந்தேன். என் நண்பர் பசியுடன் இருந்தால் நான் உடன் வந்திருக்க முடியுமா? நானே உணவாகியிருப்பேனே!'' என்று சொன்னதாம்.

கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

பணத்திற்காக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம். பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும்.
-ஸ்காட்லாந்து பொன்மொழி-

தத்துவம்

* இன்னைக்குத் தூங்கினா நாளைக்கு எந்திரிக்கலாம். ஆனால் நாளைக்குத் தூங்கினா இன்னைக்கு எந்திரிக்க முடியுமா?

* நீ எவ்வளவு பெரிய படிப்பாளியா இருந்தாலும் எக்ஸாம் ஹோல்ல போய் படிக்க முடியாது.

* ஒரு சோற்றுப் பருக்கையின் மதிப்பு சிதற விட்ட நமக்குத் தெரியாது. அதை எடுத்துச் செல்லும் எறும்புக்குத்தான் தெரியும்.

* கலண்டர்ல திகதி கிழிக்கிறது முக்கியமில்ல...
கிழிச்ச திகதியில என்னத்த கிழிச்சோம் என்கிறதுதான் முக்கியம்!

* யாருக்காகவும் உன்னை மாற்றி கொள்ளாதே ஒருவேளை மாற நினைத்தால் ஒவ்வொரு மனிதர்களுக்காகவும் நீ மாற வேண்டி வரும்.

உங்களால் மறக்க முடியாத மற்றவர்களின் குற்றங்களை மன்னித்த விடுங்கள். உங்களால் மன்னிக்க முடியாத மற்றவர்களின் குற்றங்களை மறந்து விடுங்கள்.

நல்லவனாய் இரு ஆனா, அதை நீரூபிக்க முயற்சி செய்யாதே... அதை விட முட்டாள்தனம் எதுவுமில்லை.

உன்னை யாராவது காதலிக்கவில்லை என்பதற்காக கவலைப்படாதே. அது உன் வருங்கால மனைவியின் பிரார்த்தனையாகக் கூட இருக்கலாம்.

நண்பனையும் நேசி எதிரியையும் நேசி நண்பன் உன் வெற்றிக்கு துணையாக இருப்பான். எதிரி உன் வெற்றிக்கு காரணமாக இருப்பான்.

கா

காதல் முட்டாள் செய்கிற புத்திசாலித்தனமான காரியம். புத்திசாலி செய்கிற முட்டாள்தனமான காரியம் இதுல நீ எப்படி?

* காதல் ஒரு நல்ல குரு. ஆனா அது எல்லாரையும் சீடர்களாக ஏற்றுக்கொள்வதில்லை.

தி

* காதல் எல்லோருக்கும் ராசியில்லை. இருந்தும் யாரும் அதை விடுவதாயில்லை.

ல்

* காதலிக்கிற பெண், நரியை விட 1000 மடங்கு கிரிமினல்

* காதலில் ஜெயிச்சாலும் செலவு பண்ணனும், தோற்றாலும் செலவு பண்ணனும்.

விஜய்க்கு ஓர் வாழ்த்து

ஆசானுக்கு மாண்புமிகு மாணவனாய்
எதிரிகளுக்கு போக்கிரியாய்
தன் வீட்டுக்கு காவலனாய்
எதிரிகளை சுடுவதற்கு
நீ வைத்திருப்பது துப்பாக்கி
மற்றவர்களுக்கு நீ நண்பன்
கவிதை எழுதுவதில் நீ அழகிய தமிழ் மகன்
நீ நிருப்பாச்சி அரிவாளை தீட்டுவதில் கில்லி
எதிரிகளை வேட்டைக்காரன் போல்
வேட்டையாடுவாய்
உன் கண்கள் இரண்டும் வேலாயுதம்
நீ குருவி மாதிரி பறந்து பறந்து அடிப்பாய்
உனக்கு ஆதியும் இல்லை
அந்தமும் இல்லை
நீ அர்ச்சுனனின் வில்லு
நீ யூத்தாக இருந்தாலும்
முதியவர்களுக்கு உதவுவாய்

ரகு- பெட்டிகலவத்த
நாக்கெட்டிய

வேலை வாய்ப்பு

சம்பளம் 30,000 – 50,000/-
எங்கள் தனியார் துறைமுகத்தில்
கப்பல் வேலைக்கு 18–45 வயது
வரையான ஆண்கள் தேவை. சாப்பாடு
தங்குமிட வசதி உண்டு.
தொடர்புகளுக்கு : 077-3033803
அனுராதபுரம்.

வாசனை வடிவில் தூத்திய அமானுஷ்யம்

அன்று இறுதிப் பரீட்சை முடிந்திருந்தது. பரீட்சை டென்சன் தீர்ந்த நிம்மதி. இனி கொஞ்ச நாளைக்கு புத்தகத்தை திறக்கத் தேவையில்லை என்ற மகிழ்ச்சி. நான் நண்பிகள் என எல்லோரும் பாடசாலையின் பின்புறம் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது பேய் பற்றிய கதை வந்தது. ஆளுக்காள் ஒரு அனுபவத்தை எடுத்து விட்டார்கள். பேச்சு ரொம்ப சுவாரஷ்யமாகப் போய்க் கொண்டிருந்தது.

எனது நண்பி (பெயர் தேவையில்லை) தன் சகோதரியின் மரணம் பற்றிச் சொன்னாள். நண்பி தாயை சிறுவயதிலேயே இழந்தவள். அவளது சகோதரி வெளிநாட்டுக்குச் சென்று பணம் அனுப்பினாள். அந்தச் சகோதரியால்தான் அந்தக் குடும்பம் நல்ல நிலைக்கு வந்தது. அந்தச் சகோதரி மிக அழகானவள். சினிமா நடிகையின் சாயலில் இருப்பாள். எப்போதும் நல்ல வாசனையான சென்ட் வாசம் அவள் மீது வீசும். அவள் வந்து விட்டுச் சென்றாலே அந்த இடமே மணக்கும். அவளது சொந்தத்தில் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். யார் கண்பட்டதோ, சில வருடங்களிலேயே கணவன் விட்டுப் பிரிந்து விட கைக்குழந்தையோடு பிறந்த வீட்டுக்கு வந்தாள்.

மனமுடைந்திருந்த அவள் திடீரென ஒருநாள் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சி செய்தாள். அவளை அருகிலிருந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். அப்போது நண்பியும் அலறியடித்துக் கொண்டு சென்றாள்.

சிகிச்சை பலனளிக்கவில்லை. அந்தச் சகோதரி இறக்கும் கடைசி நிமிடத்தில் தன் தங்கையின் கரங்களை இறுகப் பற்றினாளாம். அந்த நொடி தன் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போல் இருந்ததாகவும் அதன் பிறகு சிலகாலம் தான் என்ன செய்தாலும், எங்கே சென்றாலும் சகோதரியின் முகம் கண் முன்னே வருவதாகவும் சொன்னாள்.

நண்பியின் கதை கேட்டு நாங்கள் பயத்தில் உறைந்திருந்தோம். அப்போது நேரம் பிற்பகல் 2 மணி. நாம் சற்றும் எதிர்பாராதவாறு காற்றில் ஒரு நறுமணம். தீடீரென்று அருகில் மூக்கைத் துளைக்கும் வாசனை.

நண்பியின் சகோதரியின் உடலில் வீசும் அதே மணம்.

நாங்கள் அனைவரும் பயந்து போனோம். வகுப்பறைக்கு ஓடினோம். பாடசாலை விட்டு அரைமணி நேரமாகியிருந்தது. கதை சுவாரஷ்யத்தில் நாங்கள் கவனிக்காமல் இருந்திருக்கிறோம்.

பயத்தில் ஆளுக்காள் வீட்டுக்குப் போக ஆயத்தமானோம். மற்ற நண்பிகளின் வீடுகள் நடந்து செல்லும் தூரத்தில் இருந்தது. நானும் குறித்த என் நண்பியும் பஸ்ஸில் போக வேண்டும்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்தோம். அங்கும் அதே சுகந்தம். யாரிடம் சொல்வது? என்ன செய்வது? என்று தெரியவில்லை. கடவுளை மனதில் பிரார்த்தித்தபடி அமர்ந்திருந்தோம். எப்படி இந்த வாசனை நாங்கள் போகுமிடமெல்லாம் வருகிறதா அல்லது வெறும் மனப்பிரமையா என்று மனதிற்குள் கேள்வி கேட்டுக் கொண்டோம்.

பஸ்ஸை விட்டு இறங்கிய போதும் அதே வாசனை தொடர்ந்தது. நண்பியின் வீடுதான் முன்னால் இருக்கிறது. அவள் சென்ற பிறகு நான் தனியே தான் போகவேண்டும். நினைக்கும்போதே கண்ணில் அழுகை முட்டியது. நண்பியோடு அவள் வீட்டுக்குப் போகவும் விருப்பம் இல்லை. அவளோ பயத்தில் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டாள்.

தனியாக நடக்கும்போதும் அதே வாசனை விட்டு விட்டுத் தொடர்ந்தது. வழமையாக நான் என் புத்தகப்பையில் வைத்திருக்கும் ஜெப மாலையைத் தேடினேன். அதைக் கையில் வைத்துக் கொண்டால் பயம் இருக்காது. பேயும் அண்டாது.

பையில் கைகளை விட்டுத் துளாவினேன். எப்போதும் பையிலேயே இருக்கும் ஜெபமாலையை அன்று காணவில்லை. கண்களில் கண்ணீர் கொட்டியது. இறைவனை மனதில் நினைத்தபடி ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குச் சென்றேன். அன்றுபார்த்து வீட்டில் யாருமில்லை. ஓவென அழுதேன். கடவுளைப் பிரார்த்தித்தபடியே உறங்கிப் போனேன். விழித்த போது அந்த வாசனை முற்றாக இருக்கவில்லை. அன்றைய நாளை எப்போது நினைத்தாலும் நெஞ்சம் பதறும்.

தகவல் தொகுப்பு - அபி

திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய் என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு சிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் கம்மா ஒரு கயிற்றுத்துண்டைக் கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-61, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.

ரிஸானா நபீக்கிற்கு மரணதண்டனை

நான்கு மாதக் குழந்தை ஒன்றின் மரணத்திற்கு காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில்சவூதியில் சிறைவாசம் அனுபவித்த இலங்கைப் பெண்ணான ரிசானா நபீக்கிற்கு நேற்றுக் காலை மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த ரிஸானா நபீக் 2005 ஆம் ஆண்டு சவூதிக்கு பணிப்பெண்ணாக பயணித்தார். தான் வேலை பார்த்த வீட்டில் உள்ள 4 மாத குழந்தைக்கு பால் பருக்கிக் கொண்டிருக்கும் போது குழந்தை உயிரிழந்ததையடுத்து கொலைக்குற்றம் சாட்டப்பட்டு ரிஸானா சிறையில் அடைக்கப்பட்டார்.

2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் சவூதியில் மரணதண்டனை கைதியாக இருந்து வந்தார். சவுதி அரேபியாவின் தவாத்மி பிரதேசத்தில் சிறை வாசம் அனுபவித்து வந்த ரிசானாவின் விடுதலைக்காக இலங்கை அரசும் பல தன்னார்வ சமூக சேவை நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புகளும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தன. எனினும் நேற்றுக் காலை ரிசானா நபீக்கிற்கு மரணத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சவூதியில் உள்ள சட்டத்தின்படி இறந்துபோன குழந்தையின் பெற்றோரே ரிஸானாவிற்கு பொதுமன்னிப்பை வழங்க முடியும். எனினும் அந்த முயற்சி கடைசிவரை கைகூடவில்லை.

இதேவேளை 1988 ஆம் ஆண்டு பிறந்த ரிசானா வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வயது தகுதியை பெற்றிருக்காத போதும் முகவரால் 1982 ஆம் ஆண்டு பிறந்தவராக காட்டப்பட்டு 2005 ஆம் ஆண்டு சவூதிக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆல்பம்

எப்படி இருந்தவங்க இப்படி ஆயிட்டாங்களே என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. ஆம்! காலம் எப்படிப் போகிறது என்பதை பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.
நடிகை சினேகாவில் ஆல்பம் இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68,எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 10.01.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது